மூலி

எனும்

கற்பமருந்து

தாமரை நூலகம்,
சென்னை - 600 026.

முப்பு எனும் கற்ப மருந்து

ஆசிரியர்:
அ.அப்துல் ஜப்பார்

தாமரை நூலகம்
7. என்.ஜி.ஓ. காலனி, 3ம் தெரு
வடபழனி சென்னை-600 026
தொலைபேசி எண்:044 23620249

தாமரை வெளியீடு எண்: 181

முதல் பதிப்பு : செப்டம்பர் 1996

இரண்டாம் பதிப்பு : நவம்பர் 2014

மூன்றாம் பதிப்பு ஆகஸ்ட் 2017

நான்காம்பதிப்பு நவம்பர் 2021

நூல் பற்றி:

உரிமை பெற்றது

நூலின் பெயர் : முப்பு எனும் கற்ப மருந்து

பதிப்பாசிரியர் : ஆர்.சி மோகன்

வெளியீட்டோர் : தாமரை நூலகம்
சென்னை-26

பதிப்பு ஆண்டு நவம்பர் 2021

உரிமை : பதிப்பகத்துக்கு

நூல் வடிவம் : 21 க்கு 14 செ.மீ

அச்சுத்தாள் : 16கி மேப் லித்தோ

மொத்த பக்கங்கள் : 88

விலை : ரூ 50/-

அச்சிட்டோர் : கிரியேட்டிவ் ஆப்செட்
சென்னை-34

பதிப்புரை

சித்த மருத்துவத்தின் சிறப்பு முப்பு. ஏனென்றால் இது வேறு எந்த மருத்துவத்திலும் கிடையாது.

இது உயிர் காக்கும் மருந்து. உயிர் வளர்க்கும் மருந்து. சித்தர்கள் மட்டுமே உலகிற்கு சாகாக் கலையை அளித்தனர். மனிதன் மரண மடையாமல் இருக்க முடியும் என்பதை நம்புவது. மருத்துவ உலகுக்கு கடினமாகத்தான் இருக்கும். தலை முடி நரைக்காமல், உடல் தளராமல், தசைகள் மூப்படையாமல், தோல் சுருங்காமல் இருக்க முடியுமா? இது நடைபெறக் கூடிய காரியமா? என்ற ஐயம் எல்லோருக்கும் எழத்தான் செய்யும்.

அனுபவ சாலிகளான சித்த மருத்துவ மேதைகள் சிலர் முப்பு என்ற ஒன்றே கிடையாது. அது சித்தர்களின் கற்பனை தான் என்று அரசாங்கத்திற்கு அறிக்கைகூட சமர்பித்து விட்டதாக அறிகிறோம். சித்த மருத்துவர்களே அப்படி இருந்தால், மற்றவர்களைப் பற்றி என்ன சொல்ல?

சித்தர் இலக்கியங்களை வெளியிட ஆரம்பித்த பின் இந்த சில ஆண்டுகளுக்குள் நாம் சில அபூர்வ மனிதர்கசை சந்திக்க நேர்ந்தது. தலை முழுவதும் வழுக்கையாகப் போய்விட்ட பின் எனக்கு மீண்டும் கருகரு என்று உரோமம் முளைத்திருக்கிறது பாருங்கள் என்று தன் தலை முடியை பெருமையுடன் காண்பித்தார் ஒருவர். இன்னொருவர் தனக்கு மீண்டும் இளமை திரும்பிக் கொண்டிருப்பதை வலியுறுத்திப் பேசினார். சென்ற ஆண்டு இருந்ததைவிட இந்த ஆண்டு எனக்கு 10 வயது குறைந்து விட்டது பாருங்கள் என்று கூறினார். இன்னும் பலர் பல விதம்!

இதை எதற்காகச்சுட்டிக் காட்டுகிறோம் என்றால், சித்தர்கள் பாடி இருப்பது பொய்யல்ல. வெறும் வைத்தியனாக இருப்பவன் எதையும் சாதிக்க முடியாது. வாதியாவதால் மட்டும் முழுப் பயனை அடைந்து விடவும் முடியாது. வைத்தியம், வாதம், யோகம், ஞானம் என்ற நான்கு படிகளிலும் கால் வைத்து ஏறுபவன் மட்டுமே சித்தராக முடியும்.

எல்லோராலும் அது முடியாது.ஆனால், முழு வைத்தியராக முயற்சி செய்யலாமல்லவா. அதற்கு முப்பு தயாரிக்காமல் முடியாது.

முப்பு என்ற அபூர்வ மருந்து வேறு எந்த மருந்துடன் சேர்க்கப்பட்டாலும் அதன் வீரியத்தைப் பல மடங்கு அதிகரிக்கச் செய்யும். அது சாகாத் தன்மையைக் கொடுக்கும். தவிர மேல் தோல் வழியாகவே உடலில் கலந்து நோயைக் குணப்படுத்தும் அபூர்வ ஆற்றல் மிக்கது. அதனால் சித்த வைத்தியர்கள் அனைவரும் முப்பை அறிந்து பயன்படுத்த வேண்டும்.

மதுரை அப்துல் ஜப்பார் அவர்கள் பரம்பரையாக தமது குடும்பத்தில் ரகசியமாகக் காப்பாற்றப்பட்டு வந்த முப்பு தயாரிக்கும் முறையை இந்த நூலில் உலக நன்மைக்காக வெளிப்படுத்தி உள்ளார். அவருக்கு சித்த வைத்தியர்களும், தமிழகமும் கடமைப்பட்டிருக்க வேண்டும். இது சரியா, தவறா என்ற வீண் விவாதங்கள் சர்ச்சைகள் எல்லாவற்றையும் கைவிட்டு, முதலில் இந்த முறைப்படி முப்பு தயாரித்துப் பயன்படுத்திப் பார்க்க வேண்டும். கண்டிப்பாக சித்த மருத்துவ உலகம் இதை ஏற்றுக் கொள்ளும் என்று நம்புகிறோம்.

எஸ்.பி. ராமச்சந்திரன்,
பதிப்பாசிரியர்.

முப்பு எனும் கற்ப மருந்து

முப்பு செய்முறை

கடவுள் வாழ்த்து

அன்புடையோனும், அருளுடையோனுமாகிய எங்கும் நிறைந்த இறைவா, உன் கருணையால் மக்களையெல்லாம் நல்வழி நடக்க வழி காட்டியாக நான்கு வேதங்களையும் தந்தவனே உன்னையே வணங்குகிறோம். உன்னிடமே உதவி தேடுகிறோம் உன்னை முன் நினைத்து எங்கள் வேலையைத் தொடங்குகிறோம் .நீயே எங்களை வழி நடத்தி தொடங்கிய வேலை வெற்றிபெறச் செய்வாய் என வேண்டிக் கொள்கிறோம்.

உயிர் கொடுத்தவனே, நோய் தீர்த்துப்பாதுகாக்கும் தாய் மருந்தான முப்புவின் இரகசியத்தை நீ உன் சக்தி மூலம் முனிவர்களுக்கும் சித்தர்களுக்கும் வெளிப்படுத்தினாய் . எங்களுக்கு இந்த இரகசியத்தை அந்த பெரியோர்களின் வழிமுறைகளால் வெளிப்படுத்திக் காட்டப்பட்டது. இதில் யான் அறிந்த முப்புக்குருச்சுண்ணம் செய்யும் முறையை என் ஞான குருவினைப்போற்றி உலகிற்கு வெளியிடுகிறேன்.

மக்கள் நலம் காக்கும் மருத்துவ முறைகளில் சித்த மருத்துவம் சிறந்ததொன்றாகும். இதனையே மக்கள் நாட்டுவைத்தியம் என்று கூறினர். கைமுறைப்பக்குவமாக காட்டு மூலிகைகளைக் கொண்டே நோய்களைத் தீர்த்துக் கொண்டார்கள். அக்காலத்தில் ஒவ்வொரு ஊரிலும் பலரும் இம்முறைகளை அறிந்து வைத்திருந்தனர். நவீன மருத்துவர்களைக் காணமுடியாத காலமது. நவீன் மருத்துவர்கள் பெருகி நவீன மருத்துவம் செய்யும் இக்காலத்திலும் சித்த மருத்துவம் சிதைந்து விடாமல் காக்கப்பட்டு வருகிறது . நவீன் மருத்துவத்தில் தீராத நோய்கள் சித்த மருத்துவத்தால் தீர்ந்துவிடுகின்றன. அதனால்

இந்தத் துறையையும் நவீனப்படுத்தி அறியாத மருந்துகளையும் தெரியாத முறைகளையும் தெரிந்த நபர்கள் யாராக இருந்தாலும் சித்தர்களின் சாபத்திற்கும் அஞ்சாமல் தெரியப்படுத்துவது மக்களுக்கும் நம் நாட்டு மருத்துவத்திற்கும் செய்யும் நன்றிக்கடமையாகும்.

சித்த மருத்துவத்தில் முப்புவைக் குரு என்று கூறுவார்கள் . முப்பைக் கண்டார் மூப்பை (வயோதிகம்) வென்றார் என்பது சித்தர்கள் வாக்காகும். இதற்கு ஏகமூலியென்றும் , வேங்கையென்றும், அரனென்றும் வாலைப் பெண்ணென்றும், சாகாமூலியென்றும் இன்னும் பல பெயரிட்டும் கூறுவர். அ-கரம், உ-கரம், ம-கரமாகிய மூன்றெழுத்து அடங்கிய " ஓம்" என்ற பிரணவமந்திரத்தையும் இந்த முப்புவுடன் இணைத்து சித்தர்கள் கூறியுள்ளார்கள். மூன்றெழுத்துக்களாலான பிரணவம் மெய்ஞான முப்புவாகும் . மருத்துவ முப்பும் மூன்று பொருளால் ஆனதுதான.

1. பூநீரிலிருந்து எடுக்கப்படும் உப்பு - இதனைப் பலபெயரிட டுக் கூறுவர் .

2. அண்டக்கல்: இதனையும் பலபெயரிட்டுக் கூறுவர்.

3. கல்லுப்பு : இதனையும் பலபெயரிட்டுக் கூறுவர்.

இந்த மூன்றும் சேர்ந்ததே வைத்திய முப்புவாகும் .இதைனைவிட்டு வேறு பொருளைத்தேட வேண்டாம். இந்த மூன்று பொருள்களும் முன்பிருந்த இராமநாதபுரம் மாவட்டத்திலேயே கிடைக்கும். இந்த மூன்றையும் கண்டு பிடித்து முறையாக சுத்திசெய்து சுண்ணமாக்கினால் முப்பு என்ற குருவாகும்.

பூநீர்

பூநீர் என்பது பூமிக்கு அடியிலிருந்து வெளியாகும் உப்புநீராகும்.

இந்த நீரானது மாசி, பங்குனி, சித்தரை மாதங்களில் உவர் நிலத் தில் மேற்பரப்பில் நீராக வெளிப்பட்டு வெளிக்காற்று, வெப்பங்களால்மண்ணோடு மண்ணாக உறைந்துவிடும். பகல் நேரங்களில் பார்த்தால் இந்தப் பூநீர் வெளியாகி உறைந்த இடத்தில் வெண்மை நிறமாகத் தோன்றும். வடுவடுவாக கையினால் எடுக்கலாம் (தாமரை பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்ட முப்பு சூத்திரத்தில் வண்ணான் இதைக் கண்டு கொண்டான் என அகத்தியர் கூறுவதைக் காணலாம். இந்த உப்பை உவர்மண் என்று துணி துவைப்பதற்கு உபயோகப்படுத்தினான்.)

பூ நீர் எடுக்குமிடம்

பூநீர் எல்லா இடங்களிலும் கிடைப்பதில்லை. முக்கியமாகக் களர்மண் அல்லது உவர்மண் பூமிகளிலிருந்தே கிடைக்கும். களர் நிலம் எல்லா மாநிலங்களிலும் இருக்கிறது. அகத்திய மாமுனிவர் தமது பெருநூல் காவியமாகிய பனிரெண்டாயிரம் என்னும் நூலில்.

அன்பான பூனீரின் தேசமாக்கம்
    அப்பனே யாமுரைப்போ மன்புள்ளானே
தென்பாண்டி நாடாகும் சோழதேசம்
    தெளிவான திரிப்பரங் குன்றந்தானும்
மன்னவனாம் பாண்டிவள நாடேயாகும்
    மகத்தான திருவால முதுரையாகும்
சுன்னபுரி நாடது தான் க்ன்னிவாடி
    கனமான திண்டுக்சல் புவனமாமே.

புவனமாந் திருப்புவனம் நாடேயாகும்
    புகழான திருவானைக் காவல்நாடு
அவனமாந் திரிச் செந்தூர் துறையேயாகும்
    அப்பனே கிளியனூார் வில்லியுனூாராம்
கவனமாம் மன்னார் பாளையந்தானாகும்

பவனமாம் பசுமலையாம் பூம்பாறையாகும்
பாங்கான சதுரகிரி நாடுகாணே.
காணவே திருமங்கலப்பதியேயாகும்
கருவான துறைகோடி முகவையாகும்
பூணவே வெள்ளியங் கிரிதானாகும்
புகழான வைகை நதி கோடியாகும்
வேணவே தருமபுரி வட்டாரந்தான்
வேகமுள்ள சிவகங்கை நாடேயாகும்
ஈனமென்ற துறை நாடு யீழ தேசம்
யெழிலான கதிர்காமங் கண்டிநாடே.

தானான காசிக்கி வடபாகத்தில்
தனியான வடபொதியாங் கங்கையோரம்
தேனான செங்காவி மதியோரந்தான்
தெளிவான நாடெல்லாஞ் சிவந்த பூமி
பானான பரஞ்சுடராம் பனிகள் சூழா
பாங்கான சுடர் போன்ற கிரணநாடு
மானான மண்டலத்தோர் மன்னர்தாமும்
மயங்குகின்ற நாடதவு மென்னலாமே.

என்று பூநீர் கிடைக்குமிடங்களை வர்ணிக்கிறார்.மேலும் தொடர்ந்துஇந்தியநாட்டிலும்சீனாவிலும்கூடப்பூநீர்கிடைக்குமிடங்களைக் கூறுகிறார்.

போக முனிவர் தமது முப்பு சூத்திரம் 51–ல்
நின்மல மயங் காவேரி நீள் கதி சோழதேசம்
வன்மமாராடங் கொல்லி மலையோடு குடுமிதானே,
சூத்திரம்10

குடுமி மாமலைச்சுற் றெங்கும் கோகர்னங் கங்கை மூலம்
படுநதி பாண்டிநாட்டில் பாடுகீழ் கடல் பேர் பக்கம்
திடமுறும் ராமநாதம் சேர்ந்திடும் துறையின் கட்டு
வடுதுளை தெலுங்கச் செட்டி வளர் குடி வலம்ப நாடே .
சூத்திரம்11

என்று கூறுகிறார்.

நாம் பூநீர் எடுப்பதற்கு நான் பிறந்த ஊராகிய மதுரைக்கு அருகிலிருக்கும் ராமநாதபுரம் மாவட்டத்தையே தேர்ந்தெடுப்போம்.

இராமநாதபுரம் மாவட்டம் சிவகங்கையில் பூநீர் கிடைக்கிறது என்று அகத்திய முனிவரே கூறிவிட்ட பிறகு அட்டி எது? த்விர இராமநாதபுரம் மாவட்டத்திற்குள்ளேயே முப்பு தயாரிப்பதற்குத் தேவையான (1) பூநீர், (2)சுண்ணக்கல் (3) கல்லுப்பு மூன்று பொருள்களும் கிடைக்கும்.

பூநீர் என்பது பூமிக்குள்ளிருந்து வெளிப்படும் கசிவு நீர் என்று கூறினோம். இந்த கசிவு எல்லா மாதங்களிலும் ஏற்படுமா? ஏற்பட்டாலும் அது நமக்குத் தெரியவேண்டாமா? அதற்காகவே மாசி, பங்குனி, சித்தரை மாதங்களைத் தேர்ந்தெடுக்கிறோம். சூரிய வெப்பம் பூமியைத் தாக்குவதால் பூமியின் மேற்பரப்பில் சூடேறி உள்ளிருக்கும் நீர் உப்பைக் கரைத்துக் கொண்டு பொங்கிக் கசிந்து வெளியேற அதுவே உகந்த காலம்.

தவிர பூநீர் எடுக்கவேண்டிய காலநேரம் அறிந்து எடுக்கும் பூநீர்தான் மருந்துக்காகும். மாசி, பங்குனி, சித்தரை மாதங்களில் வளர்பிறை தசமிக்குள் இரவு நேரத்தில் பூநீர் சுரக்கும் இடத்திற்குச் செல்லவேண்டும். அப்பொழுது பூநீரை எடுப்பதற்குத் தகுந்த கண்ணாடியால் செய்யப்பட்ட கரண்டிகளால் பூநீரை எடுத்து மண்பானை அல்லது கண்ணாடி ஜாடிகளில் நிரப்பவேண்டும், முக்கிய கவனிப்பு நீங்கள் பூநீர் என்றவுடன் ஊற்றுப்போல் தண்ணீராக வெளியில் பொங்கும் என்று நினைத்துவிடாதீர்கள். பூநீர் வெளிவருவது நிலவின் ஒளியில் காண்பது அரிது. ஏனென்றால் பூமியின் அடியிலிருந்து நீர்க்கசிவு ஏற்பட்டு வெளியே வரும் பூநீரைச் சாதாரணமாகப் பார்க்க முடியாது. இந்தக் கசிவுநீர் பூமியின் மேல்பரப்பில் படர்ந்து பூத்துப் பூத்து அவ்விடத்தில் மேற்காற்றுப் படப்பட சிறிது வெண்மையான நிறத்தில் உப்பு தென்படும்.

நீங்கள் ஐந்துசெல் டார்ச் விளக்குகளை உபயோகப்படுத்திப் பா... ல் இரவு நேரத்தில் இதைக் காணலாம் . சூரிய வெப்பம்பட்டபின் அந்த உப்பானது காய்ந்து அடை அடையாக வெண்மை நிறத்துடன் நன்கு புலப்படும் .இந்த உப்பு வெளியாகி அந்த நிலமே உவர்நிலமாகக் காட்சி அளிக்கும். உவர் என்றாலும் களர் என்றாலும் ஒரே அர்த்தம் தான்!

ஒன்னாது பாறைவளம் நீர்ச்சுண்ணாம்பாம்
உத்தமனே சவுட்டுமண் யென்பார்யீனர்
கண்ணான பொன்மண்ணாம் பூநீரல்லோ
காயென்பார் பூவென்பார் பிஞ்சோவென்பார்
தண்ணான சேர்வளமோ சுண்ணாம்பென்பார்
காசினியில் காணாமல் கெட்டார்கோடி
சுண்ணமென்று மேல் மண்ணை வாரியல்லோ
சுந்தரனே மாளிமுதல் கட்டுவாரே.

அக. பனி. 4113

கட்டுவார் பொன்மண்தான் பூநீரென்று
காசினியில் கண்டறியார் கோடிமாண்பர்.

அக.பனி.4114

அகத்தியர் பெருமான் பூநீரைப்பற்றி இவ்வாறு கூறுகிறார். இது பொன் என்று தெரிந்து கொள்ளாமல் மண் என்று சொல்கிறார்களே? என்று வருந்துகிறார்.

போக முனிவரோ மிகவும் உற்சாகத்தோடு,

பூவளம் பூமிநாதம் பொன்னடியான பூமி
நாவளம் வழலை பூமி நாடியே பிறக்கும் போது
பாவளம் சில்லுப் பூவாய்ப் பறந்திடும் பாரு பாரு
காவளம் வழலை யுப்புக் கதிரவன் கண்டநீரே

முப்பு சூத்திரஞானம்20

என்றுபாடுகிறார்.

பனிபெய்யும் காலத்தில் சென்றால் பனிநீர் அந்த நிலத்தில்

உள்ள அருகம்புல்லின் மேல் தங்கிநிற்கும் . பூநீர் அந்த அருகம்புல்லினை யொட்டியும் படர்ந்து பூத்து நிற்கும் . நீங்கள் அந்தப்புல்லின் மீது நடக்கும்போது பனிநீரும், பூநீரும் மிதிபட்டு கால் ஈரமாகி பூநீரின் சாரம் காலின் வழியாகநமது இரத்தத்தில் கலந்து விடும் .சிறிதளவு பட்டுவிட்டால் ஒன்றும் செய்யாது. நீண்டநேரம் உப்பு எடுக்கும் ஆர்வத்தில் ஈரப்பதமான பூநீரிலும், பனிநீரிலும் மிதித்து அலைந்தால் தலைசுற்றும், உடல் கனமற்ற நிலையும் ஏற்படும் .உடலில் வாய்வு தொந்தரவு உள்ள நபர்களுக்கு கிறுகிறு வென்று வாயு தலைக்கேறும் . அப்போது மூச்சுத்திணறல் ஏற்படும். சுமார் மூன்று மணிநேரம் இந்த தொந்தரவு ஏற்படும்.

பூநீரை வாயிலிட்டுப்பார்த்தாலும் இந்த நிலை ஏற்படும். திடகாத்திரமானவர்களுக்கு ஒன்றும் செய்யாது(பாதிப்பு ஏற்படாது) கையில் பட்டாலும் இந்த நிலைதான். இதற்குத்தான் பூநீரைக் கையால் எடுக்கவேண்டாம் கரண்டியால் எடுங்கள் என்று கூறினோம். வீட்டில் குப்பை கூட்டும் பிளாஸ்டிக் தட்டில் எப்படி குப்பையைத் தள்ளுகிறோமோ அந்தவிதமாக தட்டுகளில் கரண்டியால் பூநீர் மண்ணைத்தள்ளி சேகரிக்க வேண்டும் . பூநீர் எடுப்பதென்பது பூநீர் கலந்த உவர் மண்ணைக் கொண்டு வருவதுதான் . நீண்ட நேரம் இதில் ஈடுபடுபவர்கள் கைகளுக்கும் கால்களுக்கும் ரப்பர் உறை மாட்டிக் கொள்வதுதான் சிறப்பானது.

ங்கு காலில் செருப்பு மாட்டிக் கொண்டு செல்லக் கூடாது . இவ்விடத்தில் குண்டுமணி அம்மன் சக்தி வடிவம் காவலாக வைக்கப்பட்டிருக்கிறது.இந்த கோவில் மிகச்சிறியது. உள்ளே இருக்கும் உரு சிறிதானாலும் கருப்பெரிது. இந்த சக்தி வடிவத்திற்கு முறைப்படியான செய்முறைகளை செய்துவிடவேண்டும். வேற்றுமதக்காரர்கள் தன் மதத் தெய்வத்தை வேண்டிக்கொண்டு உங்கள் வேலையை ஆரம்பிக்கச் செல்லலாம். இந்த இடத்தில் தங்கள் செருப்புக்களை கழட்டிவிடவேண்டும். வாகனங்களை நிறுத்திவிடவேண்டும்.

கோவிலின் எதிரேதான் இப்பொட்டல் இருக்கிறது.. இது வரையிலும் ஏட்டில் எழுதியதைமட்டும் படித்துவிட்டு வந்த புதிய நபர்கள் புத்துணர்ச்சியுடன் கூடிய மகிழ்ச்சிகரமான ஓர் கண்காட்சியைக் காண்பார்கள்.

பொழிந்த மழையுவர்க்காட்டிற் சலத்தைப்பார்த்தால்
புல்லென்றிச் சிவந்திருக்கும் பூமிநாதம்
களிந்து மழைமீன மேடப்பனியிற்பாரு
கதிர் கதிராகப் புல்லையொட்டிப் படர்ந்துபூத்து.
அளிந்த மழை யிடயிலேதான் பெய்யாமுன்பே
அப்பனே பூவையெல்லாம் வாரிக்கொள்ளே
(அகத்தியர்600–ல்)

வாரியதைப் பழுதின்றிப் பானைதன்னில்
வரிசையாயாறரை தானளந்து போடு
கோரிவிடு யமுரியதில் பன்னிரண்டுபடிதான்
கொட்டியதைக்கட்டி நன்றாய் கரைத்துக்கொண்டு
(அகத்தியர்600)

இந்த பாடலை நன்கு கவனித்து ஆராய்ந்து படிக்கவேண்டும் . மேலோட்டமாகப் படித்தால் அர்த்தம் புரியாது . அடியேன் அர்த்தம் புரியாது எனக் கூறுவதால் பெரியோர்கள் கோபித்துக் கொள்ளவேண்டாம். வைத்தியம் பயின்று கொண்டிருக்கும் மாணவமணிகளில் யாருக்கும் சிறிதேனும் ஐயம் எழக்கூடாது என்பதுதான் எனது எண்ணமாகும்.

உவர் நிலத்தில் மழைபெய்த பின்பு அந்த நிலத்தில் பள்ளங்களில் நீர் தேங்கி நிற்கும். இந்த நீரானது நாம் எடுக்கவிருக்கும் பூநீர் வெளியாகிய நிலமாக இருக்கவேண்டும். காலங்காலமாக பூநீர் வெளியாகிக் கொண்டுதானிருக்கிறது, நம் சித்தர்களும் முனிவர்களும் கண்ட , விண்ட இந்த இடத்தில் மழைபெய்து, ஏற்கெனவே உவர் நிலத்தில் படிந்த பூநீர் இந்த மழைநீரால் நிலத்தைக் கழுவி அங்குள்ள குழிகளில் தேங்கிவிடும். இரண்டு மூன்று நாட்கள் கழித்து அந்த

நீரைப்பார்த்தால் அந்த நீரானது தெளிந்து கண்ணாடி போலிருக்கும் . சூரிய ஒளி நேர்கதிர்கள் அந்த நீரில் படும் போது சிவந்த நிறமாகத் தோன்றும். கைகளில் அந்த நீரை அள்ளிப் பார்த்தால் நிறம் தோன்றாது. மேலும் இந்த காட்சியைக் காணமுடியாதவர்கள், செயற்கைமுறையில் ஒரு பரிசோதனை செய்து பார்க்கலாம்.

வட்டமான நன்கு பளபளக்கும் எவர்சில்வர் தாம்பளத்தில் பூமி நாதத்தை எடுத்து மழைநீரில் கரைத்து விடவேண்டும். உப்பின் அளவு சரியான முறையில் இருக்கவேண்டும். இந்த தாம்பளத்தட்டை சூரிய ஒளியில் வைக்கவேண்டும் இப்பொழுது தட்டின்மேலிருக்கும் நீரானது சிவந்த நிறமாகவும், தட்டின் அடிப்பகுதி தங்கம் போலும் மின்னும் .தட்டில் ஊற்றப்பட்டிருக்கும் நீரானது ஒரு சென்டிமீட்டர் உயரமிருந்தால் காலை 10 மணிக்கு ரவியில் வைத்தால் மாலை இரண்டு மணிக்கெல்லாம் நல்லதோர் உப்பாக உறைந்து விடும். இந்த உப்பின் நிறம் உறைந்த நெய்போல் இருக்கும் .அடுத்து அடுத்து வெய்யிலில் வைத்தால் உப்பானது நன்கு காய்ந்து ஈரப்பதமற்று இருக்கும்.

பாடலில் முதல் இரண்டு வரிகளுக்கும் விளக்கம் கூறப்பட்டுள்ளது.

மூன்றாவது முதல் ஆறாவது வரிகளில் உள்ள விளக்கத்திற்கு வருவோம். மழைபெய்து காய்ந்த பின்பு பங்குனி மாதங்களில்தான் பூநீர் வெளியாகும். இந்த மாதங்கள் தான் பூநீர் எடுக்கத் தகுந்த மாதங்களாகும். இதிலும் தசமிக்குள் பூநீர் எடுப்பதுதான் சிறப்பானது. பூநீர் கலந்த மண்ணை நாம் குறிப்பிட்டபடி ஆர்ப்பாட்டமில்லாதபடி பக்தியோடு தேவைக்குத் தகுந்த அளவோடு மட்டும் எடுத்துக்கொண்டு, குண்டுமணி அம்மன் கோவில் வலது பக்கமாகச் சென்று இடது பக்கவழியாகத் திரும்பவேண்டும். திரும்பும்போது கோவிலில் பக்கமாக நின்று அவரவர் தெய்வத்தை மனதில்

நினைத்து தர்மத்திற்கே உனது பொருளை பிச்சை எடுத்துச் செல்கிறேன் என்று மனதில் மானசீகமாக நினைத்துக் கொள்ளவேண்டும்.

ஒரு மனிதன் தன் அளவுக்கு தூக்கிச் செல்லக்கூடிய அளவிற்கு மட்டுமே எடுத்துக் கொண்டு வாருங்கள். அங்குள்ள குளத்தில் நீரெடுத்து உங்கள் கைகால் முகத்தை கழுவி சுத்தப்படுத்திக் கொள்ளுங்கள் அங்கு அமைந்திருக்கும் ஆரம்பப் பள்ளிக்கூடத்தின் எதிரில் உள்ள சாலையில் நின்றால் கிராமத்தின் பஸ்வரும். ஏறிவந்து விடுங்கள். நீங்கள் சென்ற வழியும் இதுதான்

பூநீரை எடுத்து இரண்டு மடங்கு நல்ல தண்ணீரில் கரைத்து (மழைநீர் மிகவும் நல்லது) நல்ல வெள்ளைத்துணியை ஒரு பானையில் வடிகட்டுவதற்குத் தகுந்த மாதிரி கட்டி வடிகட்டிக் கொள்ளவேண்டும். மேல் வடிகட்டின கசடை அகற்றிவிட்டு, மறுபடியும் இதே போன்று வடிகட்டவேண்டும். பின்பு வடிகட்டின பூநீர் உப்புக்கலந்த நீரை முன்னால் உபயோகப்படுத்திய துணியைப் போல் இரட்டை மடிப்புத்துணியை உபயோகப் படுத்தி வடிகட்ட வேண்டும் அடுத்து மூன்று மடிப்பு அடுத்து நான்கு மடிப்பு வைத்துக் கட்டி சுத்தமாக வடிகட்டிக் கொள்ளவேண்டும்.

இந்த நீரை ஒரு நாள் கண்ணாடிப்பாட்டிலில் அல்லது பானையில் அசையாமல் ஒரிடத்தில் வைத்து விடவேண்டும். அடுத்தநாள் எடுத்து தெளிவை திக்கான துணியை உபயோகப்படுத்தி முன்புபோல் வடிகட்டவேண்டும். பின்பு ஒருநாள் வைத்து மறுநாள் இதேபோன்று வடிகட்டவேண்டும் . இத்துடன் ஏழுமுறை வடிகட்டப்பட்டு விட்டது. இதற்குமேல் மண்ஒட்டுச்சட்டியிலோ அல்லது கண்ணாடிப் பாத்திரத் திலோ விட்டு சூரியவெப்பத்தில் ஆவியாக்கலாம் அல்லது அடுப்பிலிட்டுக் காய்ச்சலாம். இந்த முறைகளைக் கையாண்டு போக முனிவர் இதனை

ஆமிந்த ஆதி முப்பு அரகரா சிவமாஞ் சுண்ணம்
தாமிந்த சிவத்துக் கப்பா சந்திரன் சத்தி கேளு
வேமிந்த ஆதித்தற்கு விளங்கிள பெண்டே யாகும்
நாமிந்தச் சத்திமுப்பு நாட்டுவேன் நிலவுப் பாமே.

முப்புசூத்திரஞானம்26

என்று கூறுகிறார்.

கெட்டியான வழலை உப்பை எடுக்கவேண்டும். இந்த உப்பு நெய்போன்று ஈரப்பதமாக இருக்கும். இந்த உப்பை சிப்பிச் சாம்பல் கரைத்த தெளிவு நீரில் கரைக்கவேண்டும். நீரின் அளவு இரண்டு மடங்குக்கு அதிகம் வேண்டாம். கரைத்த உப்பை மறுபடியும் வடிகட்டும் பில்டர் பேப்பரை வைத்து வடிகட்ட வேண்டும். வடிகட்டிய உப்புநீரை மறுபடியும் முன்போல் உப்பாக்கவேண்டும். பின்பு இந்த உப்பை சுண்ணநீரால் கரைத்து வடிகட்ட வேண்டும். மறுபடியும் உப்பாகவேண்டும். இந்த உப்பை பின்பு கல்சுண்ண தெளிவு நீரால் கரைக்கவேண்டும். சுண்ணாம்புத் தெளிவால் முன்பு போல் செய்முறைகள் செய்து உப்பை எடுக்கவேண்டும். எடுத்த உப்பை நன்கு ரவியில் வைத்து காயவைக்கவேண்டும். இப்பொழுது உப்பு தீட்சைபெற்ற சுத்தமான உப்புக்கு சமமாக இருக்கும் .இந்த முறையை விட்டால் சுத்தமான உப்பைக் காணமாட்டீர்கள். இவள்தான் சக்தியுப்பு, வாலைஉப்பு , தாய் உப்பு, அன்னை உமைநாத உப்பு என இன்னும் பல பெயரால் சித்தர்களால் கூறப்படுவது.

இப்போது நாம் முயற்சி செய்து எடுத்துள்ள உப்பு சுத்தமான பூநீர் உப்பாகும். இந்த உப்பே சுண்ணமானால் மருந்துக்காகும். அதிகக் காரமேற்றிய உப்பு,மருந்துக்கு நல்ல பலன் கொடுக்கும். இந்த மருந்துகள் செய்யும் போது கையில் உப்புநீர் படும்படி வேலைகளைச் செய்வதைத் தவிர்க்கவேண்டும். வைத்தியத் திற்காகும் வழலை உப்பை நீங்கள் கடுகு அளவு வாயிலிட்டுப் பார்க்கலாம். இந்தக் கடுகு அளவு உப்பு உடலில் பரவி வேலை

செய்வதை நன்கு உணரலாம். இது பச்சை உப்பாகையால் இதையே மருந்துக்கு நேரடியாக உபயோகப்படுத்தக் கூடாது.சுண்ணமாக்கிதான் உபயோகிக்கவேண்டும். முதல் உப்பு தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளது. இனி இரண்டாவது உப்பு எடுப்பது பற்றி ஆராய்வோம்.

அண்டக்கல்

இது இரண்டாவது உப்பு, நடு உப்பு எனக்கூறுகிறோம். ஆனால் இதை ஒரு உப்பு எனக் கொள்ளமுடியாது. இது கற்சுண்ணாம்பு தயாரிக்கும் சுண்ணாம்புக்கல்லாகும். ஆனால் நாம் பூநீர் எடுக்கும் நிலத்திலிருந்து எடுக்கும் கல்தான் உண்மையான அண்டக் கல்லாகும். சித்தவைத்திய நூல்களை படித்துவிட்டு அண்டக்கல் என்றால் பெரிய கற்களாக ஒரு தலையின் அளவாவது இருக்கும் என்றுநினைக்கவேண்டாம். இந்த அளவு பெரிய சுண்ணாம்புக்கல்லும் சில இடங்களில் கிடைக்கத்தான் செய்கிறது. ஆனால் இந்தக் கற்கள் நம்முடைய வேலைக்கு ஆகாது எனப்புரிந்து கொண்டேன். காரணம் பூநீர்இந்தக்கல் இருக்கும் இடங்களில் உற்பத்தியாவது இல்லை . பூநீர் உற்பத்தியாவது இந்தக் கல்லிலிருந்து தான் என்பதை சித்தர்களின் பாடல்கள் கூறுகின்றன. " ஒட்டுகின்ற சிவசக்தி இரண்டுபேரும் ஒரிடத்தில் குடியிருந்தார் உற்றுப்பாரே" என அகத்தியர் கூறுகிறார். ("மங்கை யெனுமகார சத்தி நாதத்தாய்க்கு வயது பத்துச் சந்திரன் தன் மகளூமானாள்,) (திங்கள் முகம்போலிருப்பாள் சிறிய கன்னி திரண்டபின்பு குடிலைவிட்டுத் தெருவில் வந்தாள்) (கங்கணத்தி யென் றொருவன் காப்புமிட்டான் காலெடுத்தே காலி கந்தைக் கிட்டாள்). பங்கமில்லா வயது பத்து சென்ற கன்னி பசித் தவிர்ந்த வாதிமுகம் பார்த்திட்டாளே) (இட்டவொரு மன்ன வனே யகார விந்தை என சொல்வேன் பதினாறு வயது மாச்சு சட்ட கதிரோனிடத்திற் பிறந்த பாலன் றோகையெனும் பெண்ணெடுத்து வாழ்ந்த தீரன், இட்ட விதியாலவனும் வெளியேறாம லெண்ணிரண்டு முழத்துள்ளே யிருந்து

போனான்) (பொட்டலென் பாரிருவர்களும் புகுந்தவீடு புலத்தியனே சூத்திரத்தைப்பொருத்திப்பாரே.)

" பொருந்துகின்ற காலமெனும் மீனம் மேடம் பூவையர்கும்

வளர்பிறையில் பூரிப்பானாள்" அகஸ்த்தியர் பாடல்கள்

தாமரை நூலகத்தாரின் மற்ற மதிப்புமிக்க பதிப்புக்களையும். பாருங்கள் .நாம் எழுதிய நூலுக்கும் ஓர் ஆதாரம் காணலாம். நாம் பாடல்கள் எல்லாவற்றையும் இந்நூலில் எழுதுவது முடியாத நிலையாகும் .அகத்தியரின் இந்தப் பாடல்களை நன்கு ஆராய்ந்து பார்த்தால் ஒரு உண்மை புலப்படுகிறது. பூநீரர்னது இநதக் கல்லிலிருந்து தான் உற்ப்த்தியாகி வெளிவருகிறது.

நாம் பூநீர் எடுத்த அதே தலத்திற்கு அடியில் இரண்டு முழ ஆழத்திற்கு மேல் பள்ளம் தோண்டினால் இந்த சுண்ணாம்புக் கற்கள் கிடைக்கும். இந்தக்கற்களின் உருவ அமைப்பு நாம் உணவிற்கு உபயோகப்படுத்தும் சுக்கைப் போன்று; அளவில் இரண்டு மூன்று மடங்கு பெரிதாக இருக்கும். இந்தக் கற்களே நமது வேலைக்குரிய கற்களாகும்.

சிறு குழந்தைகளுக்கு கூறுவது போல் விளககம் எழுதுகிறார்களே, என்று எனது நண்பர் மேலே கண்ட விபரங்களைப் படித்துப்பார்த்துவிட்டு கேட்கிறார். ஓங்காரப் பிரணவ மந்திரத்திற்கு விளக்கம் கூறிய நீங்கள் சாகாக்கலையும் வேகாத்தலையையும், போகாப் புனலையுமறிந்த எங்களுக்கு கூறும் விளக்கமா இது எனக் கூறினார்:

வழலைத்தாயைத் தேடி அமுதம் பருக நினைக்கும் எனது அன்பார்ந்த மழலைக் குழந்தைகளாகவே நான் உங்களையெல்லாம் கருதியே சிறுகதையைப்போல் கூறுகிறேன். குரு தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப்போட்டாலும் வராது என்பார்கள். விருத்தனாக இருக்கும் நான் உங்களுக்கு குருவாக இந்தநூலையே

ஆக்கிவிட்டேன். நான் உயிருடன் இருக்கும் வரையில் உங்கள் ஐயங்களைக் கேட்கலாம். இறை அனுக்கிரகமிருந்தால் இரண்டாயிரத்துபத்து வரையில் உங்களுக்கு உதவி செய்யலாம். பின்பு என்னுடைய நூல்தான் குருவாக நிற்கும். இதனால் தான் எளிமையாக எல்லோருக்கும் புரியும் வண்ணம் விபரமாக எழுதுகிறேன்

அண்டக்கல்லை எடுத்து ஒரு பிளாஸ்டிக் பையில் போடலாம். இந்தக்கற்களை சாதாரணமாகக் கைகளால் எடுத்துச் சேகரிக்கலாம். முன் சொன்ன பூநீர் எடுப்பது போல் எந்தப் பாதுகாப்பும் தேவையில்லை. நல்ல கனமான கல்லாகப்பார்த்துஎடுக்கவேண்டும். பூநீர் பூக்கும் காலத்திற்கு முன்னால் இந்தக்கற்களை எடுக்கவேண்டும். மார்கழி, தை மாதங்கள்தான் சிறப்பானவை. இந்தக் கற்களில் சக்தி அடக்கமாகி இருக்கும். இந்த சக்தி உள் அடக்கமான கற்களில் சிவமும் சக்தியும் சேர்ந்திருக்கும். இதுவே உயிரோட்டமான கற்களாகும். சக்தி திரண்டு குடியிருந்த குடிலை விட்டு தெருவிற்கு வந்தபின் குடிலில் யார் இருப்பார்.

இந்தவிதமான கற்களை உபயோகப்படுத்துவது கறிசமைத்து உண்ட சட்டியை நாய் நக்குவது போலாகும். என்ன பிரதிபலன், யாரை நோகமுடியும், பட்டபாடு வீண் கணக்கு மாறினால் விடை தப்பாகத்தான் வரும்.

குருவேதோ முறையேதோ வென்பராண்பர்
கூறியதோர் நூலகண்ணார் குருட்டுவாதி
தருவான முப்பூவை பாரார் மாண்பர்
தரணியில் மனிதர்களை மயக்குவார்பார்
உலுத்தருக்கு வாதமது உண்டோ இல்லை
தெருவோட யலைகிறதோர் நாயைப்போலே
சென்மித்த வசடருக்கு வாதமேதோ

(அகஸ்தியர் முப்புசூத்திரம்தாமரை வெளியீடு)

முப்பூவே யில்லாமல் குருவுமில்லை
மூடரப்பா செய்த தொழில்பொய்யாப்போகும்
செப்பார்கள் வழலைமுப்பு பெருநூ லெல்லாஞ்
செப்பினதிற் கருவறிந்து செய்யமாட்டார்
தாப்பாமலிடை பாகஞ் சரக்கு நீந்
தாக்கிறரைத் தீயெரிவு மறிந்து கொண்டா
லப்பாகேள் முப்பூவேயாதியாதி
அலையாத வயித்தியத்துக் கரசனாமே

(அகத்தியர் 600)

ஆமடாரசவாதபெருமைவல்லவன்
வயிறுவளர்ப்பதல்லால் மற்றோர்க்கானந்த
தாமடாபிழைத்ததினாலமுதம்யேது
சகலவருக்கும்நோய்கள் தீர்த்தால் முத்தி
போமடா வழலைதொட்டில் வியாதியெல்லாம்
பொறிபட்ட பஞ்சதுபோற் பொறுமிநீறி
நாமடா வியாதிகட்கு மருந்து சொன்னோம்
நலமான வழலைவிட்டா லலைவுதானே.

(அகத்தியர் 600)

இந்த பாடல்களில் சித்த மருத்துவத்தில் குருமருந்து இல்லையென்றும் இதற்கு தயாரிப்பு முறையில்லையெனக் கூறுவோர் முப்பு தயாரிக்கும் முறையினை நூலில் படித்தும் நூலின் பொருளை அறியாதவர்கள் கண்ணிருந்தும் குருடர்கள் எனவும் இத்தகையோர் உலகில் தாமே பெரிய வைத்தியரென மக்களை ஏமாற்றுவார்கள் .இத்தகைய உலுத்துப் போன மரக்கட்டை போன்ற மனிதருக்கு இரசத்தைக் கொண்டு உலோகங்களை மாற்றும் வாதமுறை தெரியாது. இவர்கள் தெருவில் திரிகின்ற நாய்களைப் போல் குறைப்பட்ட ஜென்மங்கள். இவர்களுக்கு இரசக்கட்டு வேலையும் வராது என வசை பாடியுள்ளார்.

முப்புத் தயாரிக்கும் முறைதனை ஒரு நூலில் கூட முறையாக

வரிசைப்படுத்திக் கூறவில்லை என்பது உண்மைதான். ஆனால் மறைத்தவற்றையெல்லாம் வெவ்வேறு நூல்களில் வெளிப்படுத்தியுள்ள விபரம் வைத்திய ஞானிகளுக்கும் தெரியும். பல சித்த மருத்துவர்கள் நேரிடையாகக் குரு செய்முறை அனுபவம் பெற்றவர்களில்லையாதலால் யாரையும் குறை கூறமுடியாது. நாம் யாரையும் குறை கூறவில்லை. மனிதன் கற்றது கைமண் அளவு. கல்லாதவை உலக அளவாகும் என்று நம்முன்னோர்கள் கூறியது ஆழ்ந்த கருத்தாகும்.

பிரமகற்பக் கற்களை தேடி எடுத்துக் கொண்டு உங்கள் இல்லம் வந்துவிடாதீர்கள். சிவனார் தலையில் பெருக்கெடுப்பது என்ன? சிவகங்கை அந்த ஊரில் தங்கி உண்டு இளைப்பாறிக் கொள்ளுங்கள். நீங்கள் இரு பதினெட்டுக் கிலோ மீட்டர் போய் வந்த அலுப்புத் தீர வேண்டும். பின்பு நீங்கள் அந்த ஊரைச்சுற்றிப் பார்க்கவேண்டாமா? நீங்கள் பஸ்ஸிலிருந்து வந்த பக்கமே நடையாகச் செல்லுங்கள் .கையில் பையுடன் செல்வது அவசியமாகும். அந்தப் பைக்குள் நீங்கள் எடுத்து வந்த நடுவான வகாரக்கல்லையும் மிகச் சிறிதளவு எடுத்துச் செல்லுங்கள். அந்த ஊரின் கடைசியில் சுண்ணாம்பு நீற்றிக் கொண்டிருப்பார்கள். அவர்களிடம் சென்று நீற்றிய சுண்ணாம்புக்கல் வேண்டுமெனக் கேளுங்கள். அவர்கள் பெரிய கட்டியான சுண்ணாம்புக் கற்களைக் காட்டுவார்கள். இவற்றை வாங்கிவிடாதீர்கள். நீங்கள் பையில் மாதிரிக்கு எடுத்துச் சென்ற சுண்ணாம்புக் கற்களைக் காட்டி இந்தக் கற்சுண்ணம் வேண்டுமென்று கேளுங்கள். அந்த ரகத்தை வேக வைத்தவர்கள் உங்களிடம் காட்டுவார்கள் சுண்ணாம்பு நீரை வாங்காதீர்கள். சுட்ட கற்களாக வாங்கி பையை நிறைத்துக் கொள்ளுங்கள்.

பின்பு தெப்பக்குளம் அருகில் உள்ள பஸ் நிலையத்திற்கு வந்து மதுரைக்கு வந்துவிடுங்கள். இதற்கு மேல் நீங்கள் சொந்த ஊர்களுக்கு செல்லலாம். நீங்கள் விலைக்கு வாங்கிய

சுண்ணாம்புக் கற்களைப் பத்திரமாக வைத்து விடவும். நீங்கள் கடும் முயற்சி செய்து எடுத்துவந்த அரன் உண்ட கற்களை எடுத்து சூரிய வெப்பத்தில் அரைமணி நேரம் காட்டிவிடுங்கள். இதனால் பின்பு சுத்தப்படுத்துவதற்கு வசதியாக இருக்கும்.

வீட்டில் நன்றாக அமர்ந்து கொண்டு கூர்மையான கத்தியால்மூலமென்றவாசியின்கற்களின்மேலிருக்கும் சுண்ணாம்பைச் சுரண்டி சுத்தமாக்குங்கள். இது மிகவும் முக்கியமான செயலாகும். இதில் பல ரகசியங்கள் அடங்கி இருக்கிறது.

1) விடுகாதே யண்டமதினோட்டை வாங்கி
மேகசிந்த கோரையை நீ வாங்கிப் போட்டு
2) பட்சமென்றால் நல்லதடா பார்த்துவாங்கு
பசளையென்று பேராச்சு பாவிமக்காள்
3) அச்சமொன்றும் நினையாதே கோரைபோக்கி
அருந்திடுவாய் வாளாலே அறுத்துநல்ல
4) எச்சான கல்லுரலிற் பசளை போட்டு
இரும்புலக்கை யதனாலே இடித்துக் கொண்டு
5) அடைவானடைவதுவா மண்டலந்தானு மதிலிருந்து
விந்துவை நீயெடுத்துக் கொண்டு,
6) கடையான சத்துருவா மந்நீரோடு,கருவான
ஒட்டினுடைச் சவ்வு போக்கி,
7) நடையான நாதமதைக் கூடச்சேர்த்து
நாட்டுவாய் கல்லுரலிற் நாட்டக்கேளு,
8) அடைவான வச்சிரமா முலக்கைகொண்டே யண்டத்தின்
மேலோட்டை வலுக்கக் குத்தே,
9) குத்துவா யிருப்புலக்கை யதனைக்கொண்டு
குமுறவே யிடித்ததனைத் தூளதாக்கி
10) அத்துவாய் மாச்சேரக் குத்துகுத்தே

யதினுடைய வீரமெல்லாம் போகக்குத்து

11) தத்துவமாய் தங்கமென்று மாவெடுத்துத் தாயான
மயேஸ்வரியைப் பூசை பண்ணு.

(அகஸ்தியர் முப்பு சூத்திரம்)'

தாமரை வெளியீடு.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பாடல்கள் அண்டக்கல்லை சுத்தப்படுத்துவதற்கும், அதனை இடித்து மாவாக ஆக்குவதற்கும் கூறிய பாடல்களாகும். அண்டக்கறகளின் பெயர் மாறுபட்டால் மெய்ஞானமில்லாதவரும் குருவால் தொட்டுக் காட்டப்படா தவரும் இன்னதுவென்று அறிய முடியாமல் திகைப்பதில் வியப்பில்லையாம். மாணாக்கர்களுக்கு சிறிதும் ஐயம் வேண்டாம்.

1- வது பாடலில் அண்டத்தில் ஒட்டைவாங்கி என வருகிறது. அண்டமென்றால் சிலர் கோழிமுட்டையென மயங்குகின்றனர் . கோழிமுட்டையில் கோரை ஏது? கோரையென்றால்

அவ்விடத்திற்குத் தகாத பொருட்கள் என அறிய வேண்டும்.

3-வது பாடலில் அண்டக்கறகளைப் பசளையென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்பாடலுக்குப் பொருள் எழுதப்பட்டிருக்கிறது. பொருள் எழுதியவர்கள் பசளைக் கொடியை சமூலமாக செடி, கிழங்கு, வேர் இவைகளைப்போட்டு கல்லுர்லிற் இரும்பு உலக்கையால் இடித்து எனப்பொருள் கண்டுள்ளார்கள். இங்கும் பாடலில் கோரையை வாள் கொண்டு நீக்கக் கூறப்பட்டிருக்கிறது. பசளையில் ஏது கோரைப்புல், இதை இடிப்பதற்கு கல்லுரலும் இரும்பு உலக்கையும் தேவையில்லை. அண்டக்கல்லிற்கு பசளையென்றும் ஒரு பெயருண்டு என அறியவும். எப்படியோ உரை எழுதியதில் தவறு நேர்ந்திருக்கலாம் என நினைக்கிறேன்.

எனது வாசக அன்பர்கள் அண்டக்கல் என்றே பொருள் கொள்ளவேண்டும்.

5 முதல் 11 பாடல்களில் அண்டத்தில் சவ்வு போக்கி எனப்பாடல் உள்ளது. சிலர் கோழி முட்டையின் கருவை எடுத்துவிட்டு அதன் மேலோட்டின் உள்ளே உள்ள இலேசான வெண்மை நிறமான ஜவ்வையும் நீக்கிவிட்டு இடித்து எனப்பொருள் கொள்கின்றனர்.

இந்த பாடல்கள் கூறுவது சுத்தமான அண்டக்கல்லை பற்றிக் கூறியதே அல்லாமல் வேறில்லை. கோரை, ஜவ்வு எனக்குறிப்பிடப்பட்டது அண்டக்கல்லின் மேலுள்ள சுண்ணாம்பை சுத்தம் செய்வதே. நமது அண்டக்கல்லுக்கும் சுக்கிற்கும் சூட்சமம் அதன் சுண்ணாம்பை நீக்கினால்தான் உண்மையான பலனை எதிர்பார்க்கலாம். சுத்தப்படுத்திய அண்டக்கற்களை பத்துமுறை சுத்தப்படுத்திய பூநீர் உப்பை மழைநீரில் கரைத்து அதினுள் அண்டக்கற்களை மூழ்கவிட்டு வெயிலில் வைக்கவும்.ஒரு பங்கு உப்பும் மூன்றும் பங்கு நீரும் கரைத்த அளவு போதுமானது. பின்பு இந்த நீரையும் அண்டக்கல்லையும் (முன் தயார் செய்த நீருடன்)மேலும் சிறிதளவு நீர்விட்டு மண்பானையிலிட்டு நன்கு கொதிக்கும்படியாக அடுப்பேற்றி எரிக்கவும். நீர் சுண்டி உப்பும் கல்லும் வெளியில் தெரிந்தவுடன் இறக்கிக் கொள்ளவும். முன்பு தயார் செய்த நீரில் மறுபடியும் இந்தக்கற்களை அலசி நிழலில் காயவைத்துப் பத்திரப்படுத்தவும்.

நாம் முப்பு தயாரிக்கத் தேவையான மூன்று பொருள்களில் அடியையும் நடுவையும் கண்டுபிடித்துவிட்டோம். இனி முடிக்கு செல்ல வழியைத் தேடுவோம் .முப்பு தயாரிப்பு முறைகளிலும், முப்பு சூத்திரங்களிலும் இந்த உப்புகளின் அடியுப்பு எது நடு உப்பு எது எனப் பாடல்களின் மூலம் அறிய முடியாது. நாம் வெகு எளிதாக விளக்கிக் காட்டியுள்ளோம்.

நீங்கள் முப்பு தயாரிப்பு முறைகளில் மூலப்பாடல்களை கட்டாயம் படித்துணரவேண்டும். தற்போது சித்த வைத்திய நூற்கள் குறைவின்றிக் கிடைக்கின்றன. தாமரை நூலகம் வெளியீட்டாளர்களுக்கு வருங்கால சித்த வைத்திய மாணவர்கள் தங்கள் நன்றிக்கடனைத் தெரிவிக்க வேண்டும். தற்போது வெளிவந்துள்ள நூற்களனைத் தையும் ஒருவருடத்தில் படித்து முடித்துவிடலாம். என் நூல் பார்த்து சித்தர் நூல்பார். சித்தர் நூல் பார்த்த பின் இந்நூல் பார். உனக்கும் ஓர் புது வழி தோணலாம்

கல் உப்பு

முப்புவில் முடிவான உப்பும் முறையான உப்பும் கல்லுப்பாகும். இந்தக் கல்லுப்பு வெண்ணிறமாகவும், ருசி அற்றும், வாயிலிட்டுக் கடித்தால் பல்லுக்கு மாப்போல் நொறுங்கும் தன்மை உடையதாகவும், தண்ணீரில் கரையாமலும் ஊடுறுவாத கண்ணாடிக் கற்கள் போன்றும், ஒழுங்கற்ற சதுரவடிவமாக சிறிய கற்களாகவுமிருக்கும். கடைச்சரக்காக இது கிடைக்காது. நாட்டு மருந்துக் கடைகளில் கல்லுப்பு விற்பனை செய்கிறார்கள். இவை உருண்டை வடிவத்திலும், வாயிலிட்டுப்பார்த்தால் கைப்புதன்மை யுடனுமிருக்கிறது. இந்த உப்பைப் பல ஊர்களிலும் எனது சித்தவைத்திய நண்பர்கள் வாங்கிவந்தார்கள். அதில் ஒன்றுகூட உண்மையான சித்தர்கள் குறிப்பிட்ட கல்லுப்பில்லை. இந்தக்கல்லுப்பினை சித்தர் பாடல்களில் பாறையுப்பு என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இரண்டு உப்புக்களும் ஒன்றுதான் வேறு அல்ல. நான் என் கண்களால் பார்த்து, தொட்டு , சுவைத்தபின்புதான் இதுதான் உண்மையான கல்லுப்பு என அறிந்தேன். எனது உறவினர் இந்த உப்பை எடுக்கும் மார்க்கம் அறிந்திருந்தார்கள். அவர்களிடமிருந்து சிறிதளவு உப்பு பெற்றுப் பரிசோதித்தபின்பு தான் கடைகளில் விற்கும் கல்லுப்பு உண்மையான உப்பல்ல என்பது புரிந்தது. ஆனால் இன்றுவரை சித்தவைத்தியர்கள் கடையில் வாங்கி

உபயோகப்படுத்தும் உப்பு பொய்யானதாகும்.இந்தக் கடையில் விற்கும் உப்பு எங்கு எப்படி எடுக்கிறார்கள் எனத் தெரியவில்லை . இது பற்றி நீங்கள் ஆராயுங்கள்.

நாம் உண்மையான கல்லுப்பைப் பற்றி அறிவோம். இந்த உப்பானது கடலில் விளையக் கூடியது. கடலில் அனுபவப்பட்ட நபர்கள் மூலம் இந்த உப்பை எடுக்கவேண்டும். நமக்கு முகவை நகர்ப்பகுதி தவிர வேறு பகுதிகளில் அனுபவம் கிடையாது. மற்ற இடஙகளில கிடைக்கிறதா இல்லையா என்பதும் தெரியாது. எனக்குத தெரியப்படுத்திய எனது உறவினரும் இறந்து விட்டார். ஆனால் இந்த உப்பு கடலில் இருக்கத்தான் செய்கிறது. என்னிடமும் இருக்கிறது முயற்சி செய்தால் நீங்களும் இந்த உப்பை எடுக்கலாம்.

முயற்சி மட்டும் எடுத்துக் கொண்டால்போதுமானது. கடையில் உப்பு வாங்கி வீண்போகாதீர்கள். அல்லது நாம் கூறியுள்ள உப்பு எங்காவது கிடைத்தால் உபயோகப் படுத்துங்கள். சித்தர்களே நமக்கு கல்லுப்பைக் காட்டாது மறைத்துவிட்டிருக்கிறார்கள். கல்லுப்பு அறிதல் என்று அகத்தியர் கூறிய பாடலைப்படித்தால் அதில் கல்லுப்பைப் பற்றி விபரங்கள் எதுவும் இல்லை. ஒரு சில நூல்களில் சிறிதளவு கூறப்பட்டிருக்கிறது. எல்லா முறைகளும் குரு முகாந்திரமாக நடைபெற்றதால் ஏடுகளில் விபரங்கள் எழுதப்படவில்லை. எனது உறவினர் குருமருந்து தயாரித்து வியாதிகளுக்குக் கொடுத்துவந்தார், நான் சிறுவனாக இருந்தபோது அவர்எனது நோய் நீக்க குருமருந்து தந்தார். மிகச் சிறிய அளவு எடுத்து திரி கடுகு லேகியத்தின் நடுவில் வைத்து சாப்பிட்டேன். அவர் இந்த ரகசியத்தைத் தன் மகனுக்கும் கூட தெரியப்படுத்தாமல் இறந்து விட்டார். வைத்தியத்திற்கு அவர் யாரிடமும் பணம் வாங்கவில்லை. தெருவில் உள்ள நபர்கள் அவர் தங்கம் செய்து விற்று சாப்பிடுகிறார் என்று கூறினார்கள். எனக்கும் ஒரு ஐயம் ஏற்பட்டது உண்மைதான். அவர் யாரையும் வைத்து மருந்து

செய்வதில்லை. அவர் செய்கைகள் அனைத்தும் ரகசியமாகவே இருந்து அவருடனேயே மறைந்து போய்விட்டன. நான் அவரிடமிருந்துதான் கல்லுப்பின் ரகசியத்தைத் தெரிந்து கொண்டேன். அப்படி அறிந்த ரகசியங்களைத் தான் உங்களுக்குத்தெரிவிக்கிறேன்.

1. "தானாக் பாறையுப்பைச் சொல்ல வென்றாற்
2. க[illegible]த்திற் பாறையிலே தானுண்டாகும்.
3. வானான கல்லுப்பென்றிதற்குப்பேராம்,
4. வாரியென்றும் மப் பென்று மதற்குப் போராம்,
5. தேனான கண்ணியென்றுபேராம் செப்பரிய கங்கையென்றுமதற்குப் பேராம்,
6. ஊனான திராபோகமென்றும் பேராம்
7. முத்தியிலே பாறையினில் வளரும் பாரே,

அகஸ்தியர் பரிபாஷைத் திரட்டு.

இந்த நூலில் இந்தப் பாடலில் நன்கு விபரம் கூறப்பட்டிருக்கிறது. கல்லுப்பிற்குப் பல பெயருண்டு. அவைகளும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"நல்லதுதானென்ன சொல்வேன் வாரிக்குள்ளே
நயமாக வுரைந்திருக்கும் கல்லுப்பங்கே"

(அகஸ்தியர் -தாமரை பதிப்பு)

இந்த பாடலில் கல்லுப்பு வாரிக்குள்ளே - கடலுக்குள்ளே உறைந்திருக்கும் எனக்கூறப்பட்டுள்ளது. கடலுக்கு அடியில் உண்டாகி இருக்கும் இந்தக் கல்லுப்பைத்தான் நாம் மருந்துக்கு உபயோகப்படுத்தவேண்டும். இதிலும் சில இடத்திலிருந்து கிடைக்கும் கல்லுப்பு மருந்துக்கு ஆகாத தன்மையைக் கொண்டிருக்கும். அம்மாதிரி உப்புக்கள் நமது உபயோகத்திற்கு ஆகாது.

காணவேகல்லுப் பென்றிதனை விற்பார்,
கடலிலே பாறைக்குள் வளர்ந்த உப்பு

தோணவே பளிங்குக்கல் போலிருக்கும்
துவர்ப்புடனே புளிப்பிருக்கும் மருந்துக்காகா"

என வசிட்டர் முப்பு வைத்திய சூத்திரம் கூறுகிறது. இப்படிப் பலரும் பலவிதமாகக் கூறியுள்ளார்கள். இவற்றை யெல்லாம் ஆராய்ந்து உண்மையான உப்பைக் கண்டுபிடித்து அதனை நமது வேலைக்கு உபயோகப்படுத்துவதுதான் நல்லது.

தனது காலுக்குள் இருக்கும் ரகசியத்தை அறியாதவன், கடலுக்குள் இருக்கும் ரகசியத்தை அறிய முடியாது என்பார்கள். மேலும் யார் யார் எதைக்கூறினாலும், அவற்றில் உண்மையைக் காணுவதே நமது செயல், வெளுத்ததெல்லாம் பாலல்ல, மின்னுவதெல்லாம் பொன்னல்ல, எழுதிய ஏடெல்லாம் வேதமல்ல வென அறிய வேண்டும்.

முப்புவின் இரகசியத்தை நீங்கள் ஆராய்ந்து அதன் உண்மை வெளிப்பட வெளிப்பட வெகு ஆனந்தமாக இருக்கும். பூமியில் தங்கப் புதையல் இருப்பதாக அறிந்து ஒருவர் அதைத் தேடிச் சென்று, அந்த புதையல் எவ்விடத்தில் உள்ளது என அறிந்து , மண்ணைத் தோண்டிப் பார்த்து அந்தப் புதையல் இருப்பதைக் கண்டுவிட்டால் அவன் எவ்வளவு மகிழ்வு கொள்வானோ அதுபோல்தான் இந்த முப்புவின் உண்மையைக் கண்டு பிடித்தலுமாகும்.

இப்படித்தான் நான் எனது பதினான்காவது வயதில் சுவார்ட்ஸ் உயர் நிலைப்பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது அகத்தியர் பரிபூரணம் நானூறும், அறுநூறும் விலைக்கு வாங்கினேன். படித்துப் பார்த்தேன். சில நாட்டு மருந்து தயாரிப்பு முறைகள் மட்டும் விளங்கிற்று. மற்ற செந்தூரம், பற்பம், முப்பு முறைகள் சிறிதளவு கூடப் புரியவில்லை. என் வயதிற்கு அது தேவையற்ற விபரமாகையால் ஊரிலிருந்த வைத்தியர்களிடம் கேட்கக் கூட வயது இடம் தரவில்லை. இப்படிப் பல வருடங்கள் ஓடின. இதற்கிடையில், வைத்திய நூற்கள் எங்கு கிடைத்தாலும்

வாங்கிவிடுவேன்.

அக்காலத்தில் சித்த வைத்திய நூற்கள் வெளியிடப்பட்டு ஓய்ந்து போன காலம். எந்த நூலும் கிடைப்பது அரிது. பின்பு மந்திரத்தில் எப்படி மாங்காய் காய்க்கிறது என்பதை அறிய மாந்திரீக நூல்களை தேடிப் படித்துப் படிக்க ஆரம்பித்தேன் . ஓரிரண்டு விபரங்களைத் தவிர்த்து எதுவும் புரியவில்லை. இதற்கிடையில் ஜோதிடம் எப்படிச் சொல்கிறார்கள் என்பதை அறிய ஜோதிட நூல்களைப் படித்தேன். எதுவும் புரியவில்லை. பள்ளிப் பாடங்களில் விஞ்ஞானம் இரண்டாவது தமிழ் இந்த இரண்டும் தவிர வேறு பாடங்களில் நாட்டம் செல்லவில்லை. எனது வருடாந்திரத்தேர்வில் தோல்வியடைந்தேன்.

இப்படி மேலே கூறிய ஆர்வத்தினால் எனது படிப்பு விசயத்தில் தோல்வியடைந்து படிப்பை முடித்தேன். வாங்கிவைத்த நூற்களை புரியுமோ — புரியாதோ படித்துப்பார்த்துக் கொண்டே இருப்பேன். வயது ஏற ஏற உலக அனுபவத்தில் படித்தவைகள் எல்லாம் புரிய ஆரம்பித்தன. மேலும் மேலும் எனது சிந்தனையால் ஆராய்ந்து அறிவைத் தேடிக்கொண்டே இருந்தேன். ஜீவனத்திற்கு அரசாங்கவேலை உதவி செய்தது. ஆனால் எனது ஆராய்ச்சிகள் நூற்றுக்குப் பத்தாகக் குறைந்தது. வாரத்தில் ஒருநாள் சிலமணி நேரங்கள் கிடைக்கும். மாதக்கணக்கில் நேரம் கிடைக்காமலும் போகும். வயது ஆகஆக ஆன்மீகத்தில் நாட்டம் சென்றது. ஆன்மீகப் பெரியோர்கள், சாமியார்கள் பலரையும் சந்தித்தேன். ஆன்மீகம் மிகவேகமாக வளர்ந்தது. இன்றும் நானே எனது அறிவைக் கூர்மையாக்கிக் கொண்டுதானிருக்கிறேன். இப்பொழுது நீங்கள் எந்த வயதினராக இருந்தாலும் சரி உங்கள் அறிவை சத்வழியில் வளர்த்துக் கொள்ளுங்கள். இது எனது சுயவிளம்பரமல்ல. உங்களுக்குத் தொட்டுக் காட்டும் முயற்சி எனக் கொள்ளுங்கள்.

தீட்சைசெய்தல்

நமது வேலைக்கு வருவோம். முப்புவின் மூன்று உப்புக்களையும் கண்டுபிடித்துவிட்டோம் மூன்று உப்புக்களும் முறைப்படி தீட்சை பெற்று சுண்ணத்தில் சுண்ணமானால் முப்புக்குருதான். இதில் எள்ளளவும் ஐயமில்லை. அகத்தியன் மேல் ஆணையாகக் கூறுகிறேன். காரணம் அகத்தியர் பரிபூரணம் நானூறில் நூலின் நடுப்பகுதியில் தொடர்பில்லாமல் ஒரு பாடலில் முப்புவின் ரகசியத்தை மட்டும் தெளிவாகக் கூறியுள்ளார். இதற்கு மேல் நாம் நமது உப்புக்களை தீட்சை என்ற சுத்தப்படுத்தி சக்தியேற்றும் முறைகளுக்கு வருவோம. உப்புக்களை தீட்சை செய்து சுத்தப்படுத்துவதுதான் முப்பு மார்க்கத்தில் மிக மிக முக்கியமான செயலாகும் இதில் எந்தக் குறையும் ஏற்படக்கூடாது என்பதை சித்தர்களின் வாக்காக எடுத்துக் கொள்ளுங்கள்.

அன்பார்ந்த நண்பர்களே சித்தர்கள் முப்பு தீட்சை மார்க்கத்தைப் புரியும்படியான மொழியில் புகன்றாரில்லை. எல்லோருமே மறைத்து, பரிபாஷையில் கூறி நம்மைக் குருடனாக ஆக்கிவிட்டிருக்கிறார்கள். எப்படிப்பட்ட அறிவுக்கண்கள் இருந்தாலும் சித்தர் மறைமொழிக்கு உரை காணவியலாது. ஒற்றைக்கண் அறிவு கொண்டு பார்த்தால் உடனே புரியும். முப்புக்குருச்சுண்ணம் தயார் செய்யும் முறைகள் நான்கு உள்ளன.

இந்த நான்கு வகையில் எந்த வகையில் செய்தாலும் பலம் உண்டு . அகத்தியர் முப்பு தீட்சை சூத்திரம் பதினாறில் கூறிய முறையைப் பார்ப்போம்.

ஒன்றான முப்பூவின் தீட்சை மார்க்கம்
ஒளித்தாரோ வோகோகோ பூரணமேயாகும்
நன்றான சிவ தீட்சை கெங்கையொன்று
நல்ல தொருசத்திக்கு சிறு நீரைந்து
சென்றாடுங் கல்லுப், பிற் கின்னீரேழு
செய்தபின்பு மூன்று மொன்றாய் சேகரித்து......

இந்த பாடலில் தீட்சை மார்க்கம் மூன்று உப்புக்களுக்கும் தனித்தனியாக கூறப்பட்டுள்ளது படித்துவிட்டோம். அர்த்தம் புரியவேண்டும். அர்த்தம் புரிந்தாலும் உள் ரகசியம் புரியவேண்டும். அதிலும் அடி நடு முடியென வரிசைப் படுத்திக் கூறவில்லை. நடுவைப்பற்றி முதலில் கூறப்பட்டிருக்கிறது. சிவ= அண்டக்கல், தீட்சை கெங்கை ஒன்று= சுத்தி செய்வது நீரினால் கெங்கையென்றால் தண்ணீர் தானே சாதாரணத் தண்ணீர் சுத்தி செய்துவிடும் காரம் ஏற்றாது. இது எந்தத் தண்ணீர் என்பதை அறிய வேண்டும், சத்திக்கு = பூநீர் உப்பிற்கு, சிறுநீரைந்து = சிறிய தண்ணீரை ஐந்து இதுதான் இந்த சொற்களுக்கு அர்த்தம் அல்லது நாட்டில் சிலர்கூறும் பரிபாஷை மறைவு மொழி மூத்திரமாகும். மனித மூத்திரமென்று அர்த்தம் செய்யலாமா? இந்தவிதமாகவே கருத்துக் கொண்டால் எந்த உயிர்ப் பிராணியின் மூத்திரம் எனக்கொள்வது இதுதான் உண்மையென்றால் மூத்திரத்திற்கு இத்தகைய சக்தி உள்ளதா? அல்லது சித்தர்கள்தான் வெளிப்படையாகச் சொல்வார்களா? இதன் உண்மை அறியாமல் சிலர் மனித மூத்திரத்தையும் உபயோகித்து விடுகின்றனர். அகத்தியரும் முப்பு தயார் செய்யும் நான்கு முறையில் சிறுநீரால் தயாரிக்கும் முறையும் ஒன்று எனக் கூறியுள்ளார்.

தெய்வத்தன்மை பொருந்திய குருவை மனித மூத்திரத்திலா செய்யச் சொல்வார்கள். சாதாரண தண்ணீரையும் மூத்திரத்தையும் இங்கு சொல்லவில்லை என்ற முடிவுக்கு வந்து விடுங்கள் .அண்டக்கல்லை நாம் ஏற்கெனவே இடித்து விடாமல் சுத்தப் படுத்தி வைத்துள்ளோம். இந்தக்கற்களை தீட்சை செய்ய அகத்தியர் பாடல் வருமாறு.

“ கன்னியென்ற பழச்சாறு முங்கவிட்டு
கடுரவியில்போட்டுவிடு காற்றாடாமல்”

இந்தப்பாடலுக்கும் சிலர் திருமணமாகாதபெண்ணின்.......

முன் குறிப்பிடப்பட்டுள்ள கதைதான். கன்னிப்பெண்ணிற்கும் இதற்கும் சிறிதும் சம்பந்தமில்லை. மேலும் சிலர் காயான எலுமிச்சை மரத்தின் பழச்சார் என்றும் அர்த்தம் கொள்கின்றனர். இதுவும் முற்றிலும் தவறான வேலையாகும். பழச்சார், சம்பழச்சார் என்று வரும் பாடல்களைப் படித்துவிட்டு அதற்கு எலுமிச்சம் பழச்சார் என்று இனிமேல் நமது மாணவர்கள் அர்த்தம் செய்யக்கூடாது . இது மிகமுக்கியமான கருத்தாகக் கொள்ளவேண்டும். முன்பின் கூறப்பட்ட கருத்துக்களை ஆராய்ந்து நடந்து கொள்ள வேண்டும். அகஸ்தியர் அறுநூறில்

அப்பனே பூவையெல்லாம் வாரிக் கொள்ளே
வாரியதைப் பழுதின்றிப் பானைதன்னில்
வரிசையா யாறரைதானளந்து போடு
கோரிவிடு யமுரியதில் பன்னிரண்டுபடிதான்
பாரில் நின்ற கல்லது தான் துய்யவெள்ளை
படிகம் போல் நுறுக்கியதைச் சுத்திகேளே
சுத்திசெய்வா யமுரினாலுவரது தானொன்று
சுருளவொரு பானைதன்னில் கல்லும் போட்டு
வத்திநன்றாய்க் குழம்பான பருவந்தன்னில்
வாரியதை யமுரியினால் கழுவிக்கொண்டு
கத்தியால் கரியிலிட்டு ஊதச்சுண்ணம்.

இந்தப்பாடலில் அமுரியை உபயோகப்படுத்தி சுத்திமுறை செய்து கொள்ளும்படி கூறப்பட்டிருக்கிறது. சில அன்பர்கள் அமுரியென்றால் மனித மூத்திரமென்றுதான் இன்னும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். மெய்யறிந்த பெரியோர்கள் இந்த முறை செய்வதுமில்லை உண்மையான அமுரிஎது என்பதைச் சொல்லுவது மில்லை. காரணம் அவர்களின் குரு யாரிடமும் கூறக்கூடாது எனச் சத்தியம் வாங்கிக் கொண்டுதான் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்திருப்பார். ஆனால் நமது மெய்ஞான மவுனகுரு இந்தச் சட்ட திட்டம் விதிக்கவில்லை. ஆகையினால் நாம் உங்களுக்கு

தவறான வழிகளைச் சுட்டிக்காட்டி அவ்வழி செல்லாதீர்கள் என அறிவுறுத்தியுள்ளோம். சில சித்தர்கள் நமது கண்களைத் திறந்து விட்டு தவறான காட்டு வழியைக் காட்டி இதுதான் நீ செல்லும் வழியெனப் போகச் சொல்கிறார்கள். ஒரு சிலர் குதிருக்குள் என் அப்பன் இல்லையென்றவன் கதைபோல் தவறான வழி காட்டுகிறார்கள்.

வீட்டுப்பைக்காணாது வீணர் பலபெயுரால்
நாட்டிலதைக்கொண்டு நலமற்றார்— பாட்டினிலே
சொன்ன பொருளெல்லாம் சோற்றுப்பே யல்லாது
இன்னீர்மை பூநீருக்கேது.

நாம் உணவிற்காக உபயோகப்படுத்தும் உப்பளத்திலிருந்து எடுக்கப்படும் (சோடியம் குளோரைடு) சாதாரண உப்புதான் சிறந்தது. இந்தச் சக்தி சத்தி உப்புக்கு இல்லையென நம்மிடம் விளையாட்டுக் காட்டியுள்ளார். பாடல் "வைராக்கிய விளக்கம்"

இதுபோன்று சித்தர்கள் நம்மைப் பலபாடல்கள் மூலம் தவறான வழிகாட்டி மகிழ்வார்கள் அது அவர்களின் வேலை. குருமுகாந்திரம் கற்காதவனுக்கு இதுதான் கதியென விட்டு விடுவார்கள். இதனால் நாம் உங்கள் கண்களைத் திறந்து விட்டு சரியான வழிகாட்டி தவறான வழிகளையும் அடைத்து விட்டோம். இப்போது நீங்கள் பாதுகாப்பான இடத்தில் இருக்கிறீர்கள். தாயானவள் தனது அமுதசுரபியை எடுத்து சேயின் வாயில் தான் வைக்க முடியும். குடிக்க வேண்டியது குழந்தையல்லவா? தாய் குடித்துக் காட்டமுடியுமா? அது போல் தான் உன் சமத்தப்பா அனுபவிக்கவேண்டியது உன் கடமையே!

முப்புச்சுண்ணம் தயார் செய்ய சேர்மானத்திற்கு உரிய உப்புக்களை தகுந்த முறைகளைக் கொண்டு சுத்தி செய்து கொள்வது முதல் வேலையும், முக்கியமான செயலுமாகும், இதில் தவறு நேர்ந்தால் எல்லாம் பொய்யாப்போகும்.

அரைகுறைப்பலனைக்கூடக் கொடுக்காது. இதனால் எட்டாத திராட்சைப்பழத்திற்கு ஏமாந்த நரிக்கதை ஆகிவிடும். நீங்கள் அறியாத முறையில் உப்புக்களைப் புடமிட்டு சுண்ணம் தயார் செய்தால் அதன் பலன் வான்கோழியைப் பிடித்து ஆடவிட்டு, மயில் ஆடுகிறது பார் எனக்கூறுவதையொக்கும்.. பெரியோர்கள் அறிந்தால் உங்களுடைய தவறு வெளிப்பட்டு பின்பு அவமானப்படநேரிடும் என்பதை நமது மாணவர் களுக்கு முன் எச்சரிக்கையாகச் சொல்கிறோம். எனது அறிவை உன்னிடம் கொடுக்கிறேன் நீயும் ஒரு குருவாகி விடுகிறாய். அதனால் குருவைக் காணுமுன் குருவாகிவிடு என்பதுதான் எனது ஆசையாகும்.

முப்புவுக்குள் ஒரு ரகசியமும் இல்லை. ஒரு நொடியில் நீ முப்புவை அறியலாம், உனது அறியாமை என்னும் இருளை அகற்றவேண்டும். அதுதான் எனக்குப் பெரிய காரியமாகவிருக்கிறது. இந்த நூலை எழுதிக்கொண்டிருக்கும் காலை நேரத்தில் எனக்கு களைப்பாக இருந்ததால் அணு அளவு முப்புவை வாயிலிட்டுக் கொண்டேன். களத்திலிறங்கி விளையாடுவதென்றால் நாள்முழுதும்கூடக் களைப்பு ஏற்படவில்லை.

எனக்கு ஒரு பக்கம் எழுதுவதற்குள் ஏற்படும் துன்பத்தைப்போல் வேறு எதுவுமில்லை, ஒரு பக்கம் எழுத ஒருமணிநேரமாகும். வாழையடி வாழையாக ஞானிகள் கொடுத்த விளக்கைக் கையில் எடுத்துக்கொண்டு பாராமல் விட்ட குறையால், நம்மை இன்று இருள் சூழ்ந்து விட்டது. மெய்ப்பொருள் காட்டிய ஞானி பஞ்சவர்ணத்தின் காலைப் பிடித்துத்தான் நாம் ஞானம் பெறவேண்டும்

என் அறிவால் பெற்ற அனுபவத்தினால் அடியேன், உங்களுக்கு ஒரு சிறு விளக்கைத் தயாரித்துள்ளேன். இந்த விளக்கு சிறிதானாலும் புதிய மாதிரியாக இருப்பதால் இக்காலத்து நவீனத் தயாரிப்பைப் போல் வெளிச்சம்

அதிகமாகக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. நீ இருளில் அமர்ந்து கொண்டு உன்து உருண்ட கண்களால் என்னதான் விழித்து விழித்துப் பார்த்தாலும் உன்னைச் சுற்றியுள்ள பொருட்கள் யாதும் புலப்படாது. நீ விளக்கைக் கொளுத்தி யவுடன் ஒரு நொடியில் உனது கண்களுக்குப் பொருட்கள் அனைத்தும் தென்படுகிறது.

"துகையானவுப்பு, கோச, மண் தான் மூன்று மூணவே குருவாச்சு மைந்தா" இந்த ஒரு வரிக்குள் முப்புவின் மூன்று உப்புக்களும் சொல்லப்பட்டிருக்கிறது.

அகத்தியர் இந்த ஒரு வரிக்குள் முப்புக் குருமுடிக்கும் விபரத்தைக் கூறிவிட்டார். அகத்தியர் தனது தீட்சை பதினாறில் இந்த விபரத்தை இறைவன் இறைவிக்குச் சொன்னான். பின்பு வேதங்கள் நான்கும் , முனிவர்களும், சித்தர்களும், ஞானிகளும் சித்த மருத்துவர்களும் கூறியுள்ளார்கள். துகை = எண்ணிக்கை; உப்பு= கல்லுப்பு; கோசம்= அண்டக்கல்; மண்=பூநீர் ; மூன்று உப்புக்களும் கண்டால் முப்புவைக் கண்டது போல்தான்.

அடுத்த வரி " மூணவே குருவாச்சு மைந்தா" என்றால் புடமிட்டால் குருமுடிந்துவிட்டது. இதுபோன்று நீங்களும் கருத்துக்களைக் கணித்து உணரவேண்டும் என்பதே. நாம் பிறக்கும்போதே இந்த அறிவுடன் பிறக்கவில்லை. கண்டதைக் கற்றவன் பண்டிதனாவான், என்பது பழமொழி. இதுபோல் உங்கள் சிறிய வயதில் புரிந்ததோ, புரியவில்லையோ ஆறு சாஸ்திரம், பதினெட்டுப் புராணம் , நான்கு வேதங்களையும் முடிந்த அளவு கற்றுக் கொள்ளுங்கள் .இது உங்களின் வருங்கால வாழ்வுக்கு சிறப்புத் தரும். இது போன்று இந்நூலையும் உங்கள் கைவிளக்காகத் தந்துள்ளேன் .இதை உங்கள் உபயோகத்திற்கு மட்டும் உபயோகப்படுத்தி விட்டு மூலையில் போட்டுவிடாதீர்கள் . பத்திரமாகப் பெட்டியில் வைத்தும் பூட்டிவிடாதீர்கள். ஒளி விளக்கைப்பயன்படுத்துவது போல் உங்கள் பரம்பரைக்கு அவர்கள்தம் உள்ளங்களிலே ஒளி

ஏற்றி உணர்த்திவிடுங்கள். இது சின் முத்திரை குத்திய உள்ளங்களாக வருங்கால உங்கள் வாரிசுகளை வளர்க்கும்.

நாம் முன்னமே முடித்து வைத்த பூநீர் உப்பின் தீட்சைக்கு வருவோம். நீராலும் சுண்ண நீராலும் சுத்தப்படுத்தினால் மட்டும் உப்பானது தீட்சை பெற்றுவிடாது. இதனால் சித்தர்கள் கூறிய தீட்சைமுறைகளையும் செய்வோம்.

தீட்சைமுறை

பஞ்சீகரண தீட்சை செய்யவேண்டும். பஞ்சீகரண தீட்சையைப்பற்றிய அகத்தியர் பாடலைக் கவனிப்போம்.

சோதியாய் நின்ற வழிதீட்சை எல்லாம்
சொன்மறைவோ ஒன்றுமில்லை யைஞ்சாங்காண்டம்
வாதியாம் வாமமது தீட்சை தீட்சை
வாமமென்ற நாதமது பூமிநாதம்
வேதியா நாத விந்தண்ட பிண்டம்
வேதமது நால்வேத மாறு சாஸ்திரம்
ஆதியா நாத விந்தப் பட்டையா
வரகரா விதிற் பிறந்த வண்டந்தானே.

அண்டமெனி லண்டமன்றா லாதியண்டம்
ஆகாசம் பிருதுவி தண்ணீர் போக்கற்ற
பண்டமெனிற் பண்டமன்று பரமசோதி
பகராத பொருளையா நந்தியாவட்டம்
கண்டமேனியி லண்டமென்ற கல்லு
கல்லு கருவாகி யைஞ்சாம் ।பிண்ட
தெண்ட மென்று நினையாதே நந்திக்கல்லு
தெளிவான பிருதிவியா லொன்று மாச்சே.

ஒன்றான பிருதிவி பத்துயிர்தா னோறொன்றோ
கோகோவப் பரைந்தச் சிரண்டாம்
வன்மைமிகு தேயுபத்துச் சீவன் மூன்று
வகையான வாயு பத்துச் சீவனான்காம்
அந்தரம் பத்துச் சீவனோரைந் தென்பர்

அரகரா பஞ்சீகரண தீட்சை யாச்சு
பன்னரிய பூதவறிதரித்துச் சொன்னேன்
பகரார்கள் ஆகாச உப்பைத்தானே.

பஞ்சீ, பஞ்ச என்றால் ஐந்து என அறிவீர்கள். இந்த பாடலில் மிகத் தெளிவாக ஐந்து தீட்சை மார்க்கத்தைப் பற்றிக் கூறியுள்ளதைக் கவனியுங்கள். தீட்சை என்றால் என்ன தீட்சை? ஏன் செய்யவேண்டும்? உப்பைச் சுத்தமாக்குதல்தான் தீட்சையாகும். நாம் பூமியிலிருந்து உப்புக்களை எடுக்கும் போது பூ சாரம் கலந்து உப்பில் கைப்புத் தன்மை ஏற்பட்டிருக்கும். எண்ணையும் கலந்து உப்பின் உண்மையான குணத்தை மாற்றி இருக்கும். சுத்தப்படுத்தாத உப்பை புடமிட்டால் கருத்துப்போகும். வெண்மை நிறமான சுண்ணமாகாது. இதனால்தான் குறைந்தது பத்து முறையாவது குறிப்பிட்ட முறைகளில் உப்புக்களைக் சுத்தம் செய்யச் சொல்லப்பட்டிருக்கிறது.

எண்பத்தி நான்கு வழிமுறைகள் தீட்சைக்கு சித்தர்களால் சொல்லப்பட்டிருக்கின்றன. இதில் எந்த வழியைக் கடைப்பிடித்து செயல்படுத்துவது என்பது தான் நமது அறிவின் திறமையாகும். ஒரு ஊருக்குச் செல்ல பலவழிகளும், பல வாகனங்களும் இருப்பதைப் போல் நமது வசதிக்கு நடந்தும் போகலாம். ஆகாய விமானத்தில் பறந்தும் போகலாம். இதற்குள்ளிருக்கும் இரகசியத்தை அறிந்து நடந்து கொள்ளுங்கள். உங்களுக்கு வசதியான தீட்சை முறைகளைக் கடைப்பிடித்து சுத்தி செய்து கொள்ளுங்கள்.

தீட்சை முறைகளில் பலவகை இருந்தாலும் சாதாரணமாக கடைப்பிடிக்கக் கூடிய வழிமுறைகள் ஒருசிலவேயாகும். அவைகளை மட்டும் குறிப்பிடுகிறேன். பஞ்சீகரண தீட்சை, சுத்தஜல தீட்சை இதையே சுத்த கெங்கையென்றும், அமுரி தீட்சை, கன்னிருது, சம்பளச்சார், வெண்கருநீர், பிரணவநீர், செயநீர் என்றும் கூறுகின்றனர். உங்கள் வசதிக்கு அறிவுக்கும்

எட்டிய உண்மையான தீட்சை முறைகளை மட்டும் உபயோகப் படுத்துங்கள். தப்பான ஐயம் உள்ள, நடை முறைகளைக் கடைப் பிடிக்காதீர்கள்.

உதாரணமாக கன்னிருது என்று குறிப்பிடப்பட்டிருக்கும் தீட்சையில் கருத்துப் புரியாமல் கன்னிப்பெண்ணின் மாதவிடாய் உபயோகப்படுத்திவிடக்கூடாது. இதற்கு ஞானவெட்டியில் கூறப்பட்டது.

மதியினாலுதித்த சூதம் வாரிவிந்து சாரமாம்
அதித மூலநாத சோதியந்த காரசுந்தரம்
விதியினாலி சைந்தமுரிவே தசார நாலிடை
அதிகாரம் ஒரிடை யளந்துபார் கணக்கிதே,

பொருள்: சூதம்= பூநீர்; வாரிவிந்து = கல்லுப்பு: காரம் = அண்டக்கல் ; நான்கில் ஒரு பங்காகும் . சாரம்=பூநீர்.

பஞ்சரத்தினப் பாடல் தீட்சைக்கு:

சுண்ணநீரது பின்னமில்லை சுருக்கான வழியது
மண்ணிலே யோகசித்தியோடு வாதவைத்தியம் சித்தியாம்.

இது சுத்தமான சிப்பி சுண்ணத்தை மட்டும் உபயோகப் படுத்தி எடுக்கும் தெளிவு நீராகும். இது நடந்து சென்று ஊரை அடைவது போலாகும். பின்பு காரம் ஏற்றிக் கொள்ள வேண்டும்.

தீட்சைக்கும், மருந்துக்கும் அண்டக்கல் எடுக்கும் மாதம் முன்னமே கூறினோம். பூப்பூத்தபின் பூநீர் வெளிப்பட்டபின் எடுத்த கற்கள் தீட்சைக்கும் ஆகாது, மருந்துக்கும் உதவாது என அறியவும். வளர்பிறையில் தசமி வரையிலும் சாகாதகால் என்றும் பிரமகற்பம் என்றும் கூறப்பட்ட அண்டக்கல்லாகிய சுண்ணாம்புக் கற்களை பூமியில் வெட்டி மையோடு புதைந்த கற்களை எடுக்கவேண்டும். வேகாத்தலையென்று கூறப்பட்ட பூநீராகிய சத்தியென்ற வழலையும், போகாப்புனல் என்று கூறப்பட்ட கல்லுப்பையும் பங்குனி, சித்திரையில்

..டுக்கவேண்டும். இந்த மூன்று உப்புக்களும் சேர்ந்து தயாரிக்கப்பட்ட ஜெயநீர்தான் சுத்தகங்கை ,அமுரி, தயிர், ஊசிநீர், தேசிநீர், வளர்கழுதை, இளங்குமரி, குருதி , மூலப்புளியென எண்பத்திநான்கு தீட்சை நீருக்கும் பெயராகும். முப்புத் தயாரிக்க உபயோகமாகும் இந்த உப்புக்களையும் சுத்தப்படுத்துவதே இந்த மூன்று உப்புத்தான் நாம் முப்பு தயாரிக்கப் புறப்பட்ட கதை எவ்வளவு சிக்கலாக இருக்கிறது என்பதை பாருங்கள். இந்தக் கதையை எப்படி முடிப்பது என்பதை அறிவோம் .மாணாக்கர்களாகிய உங்களுக்கு நாமே தாங்கிப் பிடித்துக்கொண்டு வந்தால் பனைமரமும் கொடியாகப் படர்ந்துவிடும் என்பது இயற்கையாகும். இதனால் உங்கள் அறிவைச் சோதிக்க ஒரு புதிர் போடுகிறேன். விடுவியுங்கள் பார்ப்போம்.

ரவி என்பவரும், சம்சு என்பவரும் குதிரைப்பந்தயப் போட்டிக்கு தங்கள் குதிரைகளுடன் வந்தார்கள் .பந்தயத்தில் யாருடைய குதிரை எல்லைக்கோட்டிலிருந்து தொடு கோட்டிற்கு இரண்டாவதாக வருகிறதோ அந்த நபருக்குத்தான் பரிசு வழங்கப்படும் எனக்கூறிவிட்டார்கள். நீங்கள் எந்த யுக்தி யையும் கையாண்டு போட்டியில் ஈடுபடலாம் என விதி முறையும் கூறப்பட்டது. போட்டி நடந்து , பரிசும் இரண்டாவ தாக வந்த குதிரையின் நபருக்கு வழங்கப்பட்டது. இந்த போட்டியை எந்த விதமாக நடத்தி வெற்றி பெற்றார்கள் எனக் கூறுங்கள் .விடை நூலுக்குள் பார்க்கவும்.

நீந்தத் தெரியாமல் நீரிலிறங்காதே. இலக்கணம் அறியாமல் எழுதவிரும்பாதே என்பார்கள்.நீரில் இறங்கினால்தான் நீந்தக் கற்றுக் கொள்ளமுடியும். எழுதப்படிக்கக் கற்றுக் கொண்டால்தான் இலக்கணம் படிக்கமுடியும். இதெல்லாம் சித்தர்களின் விளையாட்டு, மக்களின் நோய்தீர்க்க மருந்து கூறினார்கள். வாதப்பேய்களுக்காக மருந்து கூறினார்கள். இதனால் மருந்தும் மறைக்கப்பட்டது, கள்ளும், கஞ்சாவும், அபினும் மருந்துக்கு மட்டுமே உபயோகப்படுத்தினார்கள்

.ஆனால் கள்ளையும் அபினையும் கஞ்சாவையும் மட்டுமே உபயோகப்படுத்தி மக்கள் மாளுகிறார்கள்.

முப்புச் சுண்ணத்தை தெய்வ மூலிகையென்று கருதினார்கள் .இந்த சுண்ணத்தோடு வீரம், பூரம் போன்ற நஞ்சுத்தன்மை கொண்ட மருந்துகளோடு காரமேற்றி ஐந்து சுண்ணக்குகையில் வைத்துப்புடம் போடும் போது இதற்கு உலோகங்களின் அணுக்களை உடைக்கும் தன்மை ஏற்படுகிறது. இதனால் செம்பு தங்கமாக மாறுகிறது. தங்கம் செம்பாக மாறுகிறது. இப்போது உங்களுக்கு எல்லா ரகசியங்களையும் மறைக்காமல் உள்ளங்கை நெல்லிக்கனி போல் எழுதிவிட்டேன் .நீங்கள் ஒரு சித்தனாக மாறவேண்டியதுதான், இதற்கு சிதம்பர ரகசியத்தை தெரிந்து வைத்திருந்தீர்களானால் அப்பனுக்கு உபதேசம் செய்யலாம்.

சிதம்பரத்திலாடுகின்ற மேனியான் தங்கமா; செம்பா எனக் கண்டு பிடியுங்கள். நமசிவாயத்தை அறிந்த பின்னல்லவா நாத விந்தை அறிய முடியும் . உங்களைச் சுத்தப்படுத்திக்கொண்டாலல்லவா முப்புவைச் சுத்தப் படுத்தமுடியும். மெய்ஞான அறிவைக் கொளுத்துங்கள் .பொய் ஞானமகன்று விஞ்ஞான உண்மை வெளிப்படும். நமசிவாயத்தில் ஒரு எழுத்துக் குறைந்தாலும் இந்த அண்டசராசரங்களும் இல்லை . நீயும் இல்லை நாமும் இல்லை. இவ்வளவு சக்தியை வைத்திருக்கும் உயிரெழுத்தை அறிந்த பின்னல்லவா ஞானம் வந்துதிக்கும் . இஸ்லா மதத்திலும் இதேபோன்று உயிரெழுத்துக்களைக் கொண்டும் மெய்ஞானம் போதிக்கப்படுகிறது. மெய்ஞானத்திற்கு மதபேதமேது.

சாகாக் கல்வியை அறிந்து சாகும் கல்வியை விட்டுவிடு என்பதுதான் தத்துவமாகும் .நான்கு மதத்தினர்களின் வேதங்களையும் நமது வேதம் என்ற எண்ணம் கொண்ட மனித சமுதாயமும் உலகத்தில் உயர்வாக வாழ்ந்து கொண்டுதானிருக்கிறது. நாம் அரிக்கும், சிவத்திற்கும்

வேறுபாடு காண்கிறோம். நாம் முன்பு கூறிய உயிரெழுத்துக்களில் ஒன்று அரியாகும், ஒன்று சிவமாகும் .இப்பொழுது சிந்தியுங்கள் எந்த எழுத்துபெரிதானது. நாம் கூறிய முன் பின் கருத்துக்களைப் பொருத்திப் பாருங்கள் .ஒரு த்னி மனிதனுடைய தவறான செயல் உலக மக்களுக்குப் பொருந்துமா? எல்லோரும் மலத்தைக் கழிப்பறையினுள் உள்ள குழியில் கழிக்கிறார்கள். ஒருவன் கழிப்பறைக்குச் செல்லும் வாயிலில் மலம் கழித்துவிட்டுச் சென்றால்-? இதே போன்று மற்றவர்களும் செய்ய முடியுமா? ஒருவன் வியாபாரத்தில் நிறுத்தலில் குறைவாக அளந்தால் வியாபாரிக்கு லாபம், வாங்கிய மக்களுக்கு நட்டம் .இதை நியாயப்படுத்தி வியாபாரி சொல்வாரென்றால் அதுதான் அநியாய தத்துவம். நல் லோர்கள் வாழ்ந்த காட்டிய நடைமுறைகளைப் பின்பற்றி நாமும் வாழ்ந்து காட்டுவதே உலகம் பின் பற்றும் உயர்ந்த -நியாயமான -வழியும் தத்துவமுமாகும்.

இப்போது நான் கூறியுள்ள தத்துவத்திற்கும், முப்பு முடித்தலுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது . முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் யார் முடிச்சுப்போடத் தெரிந்தவரோ அவருக்கு முப்பூ முடித்தல் மிகச்சுலபமான செயலாகும். ஒருமுழம் நீளம் உனது சுவாசத்தை, காலாக்கி உனது உச்சந்தலையில்நிறுத்திவிட்டால்(முடிச்சுப்போட்டால்)மெய்ஞான அமிர்தம் சுரக்கும் , சகல கலா ஞானங்களும் தெரியும். நமது காவியத்தில் நின்றிலங்கும் எந்த வார்த்தைகளும் வீணல்ல, இடைஇடையே உங்களுக்கு தேவாமிர்தம் கொடுத்து உணர்ச்சியூட்டுவதற்குத்தான் என அறியுங்கள்.

சுத்த கங்கை

சுத்த் ஜலம் தயாரிக்கும் வழிமுறைகளை அறியாமல் தண்ணீரையும், பனி நீரையும் உபயோகப்படுத்தி வாதிக ளெல்லாம் தோல்வி கண்டார்கள். சித்தர்கள் மறைத்து வைத்த ரகசியத்தை உங்களுக்காக வெளிப்படுத்துகிறேன். இந்த

ரகசியத்தை அறிந்தவர்கள் யாருக்கும் வெளிப்படுத்தக்கூடாது. அப்படி வெளிப்படுத்தினால் அவர்கள் தலைவெடிக்கும் எனச் சித்தர்கள் சாபமிட்டுள்ளார்கள். நமக்கும் பயமாகத் தானிருக்கிறது. இதனால் அவர்களின் சாபம் நமக்கும் பலித்துவிடக்கூடாது. நீங்களும் நானும் சித்தர்களின் கோபத்திற்கு ஆட்படாமல் இருக்க சாபநிவர்த்தி மந்திரத்தை உச்சாடனம் செய்து கொள்வோம் .நீங்கள் மந்திர்த்தை ஓதுமுன் தன் நிலையைத் தானே அறிந்து கொண்டு வடக்கு நோக்கி உட்காருங்கள் .பூசைக்கு வடக்கு, போசனத்திற்கு தெற்காகும், மான் தோல் விரிப்பு- கலைஞானமாகும், அகில் சந்தனக் கட்டைப் புகைபோடு, அதன் முன்பு மலர் வையே, மாதம் சித்தரை, சுபக்கிரகங்கள் உனது பார்வையில் இருக்கட்டும். காலத்தில் ராகுவையும், கண்டத்தையும் (ராகுகாலம், எமகண்டம்) த;ள்ளிவிடு. குரு ஒன்பதில் உச்சத்திலிருக்கட்டும், துலா ராசி சுபமாகும், கலையோ பிங்கலையாகும், பட்சியோ அரசு, தலையோ மொட்டை, வேளையோ எழுவானுக்கு முன்பு, தீபமோ தூண்டாமணிவிளக்கு முத்தெண்ணையாம், ஆடையோ சிகப்பு, நினைவோ குமரியிடத்து, கண்ணோ மூக்கு நுனியில், மவுன குருவை மனதிலெண்ணி மந்திரத்தைக் கூறு. சித்தரெல்லாம் உனக்கருள்புரிவார்கள். எதற்கும் சட்டை முனியின் ஞானம் அல்லது கொங்கணர் கடைக்காண்டம் பார்த்துக்கொள்வது நலம்.

அகத்தியா கூறும் சாபநிவர்த்தி மந்திரம் ஓதுங்கள்
பாரையா சா பத்தினிவர்த்திகேளு
பாலகனே யிந்நூலானிவர்த்தியாச்சு,
தாரையா வறிவாரையாயையிரத்தின் கொச்சு
மையளே யிந்த நூலைந்நூறுந்தாம்,
சேரையா சிவநயம் –சிறிங்– உறிங்காச்
செபிப்பாய்நீ சிங்கிலியும் – ஓம் ஆமென்று,
மாறையா நமயசி –மறிங் –கிறிங்கா–
மகத்தான திறங் சிறிங்மசின– வென்றோதே
ஒதவே பதினென்பேர் சாபம் போச்சு..........

..............மகத்தான சாபமெல்லாம் மாண்டதையாலிந்
நூலினிவர்த்தியாச்சு.

சுத்தகங்கை தயாரிக்க தேவையான பொருட்களை அளவு முறைப்படி த்யார் செய்து கொள்ளுங்கள் . அடி என்ற நாதநீராகிய வழலை உப்பு - 300 கிராம். இந்த உப்பு நாம் முன்பு தயார் செய்து வைத்துள்ளதுதான் . நடு என்ற பிரம்மக்கல்லாகிய அண்டக்கல்சுண்ணம்- 30கிராம். இந்த சுண்ணம் நாம் பையில் வாங்கி வந்ததுதான். இந்த கற்சுண்ணத்தை நல்ல நீர் தெளித்து சாக்கினால் மூடி விடுங்கள். பத்து நாழிகை சென்றவுடன் சாக்கை நீக்கி நீறிப்போன கற்சுண்ணத்தில் சுத்தமாக வெண்மை நிறமாக மாறியவை மட்டும் பார்த்து தனியாக எடுத்துவைத்துக் கொள்ளுங்கள். நீறாத கற்களை அப்புறப்படுத்திவிடுங்கள் பின்பு நீறினவற்றை எடுப்பதற்கு வசதியாக இருக்கும் அல்லது நீங்கள் எடுத்து வந்த அண்டக்கற்களை கரியிலிட்டு சுண்ணம் தயாரிக்கும்முறையில் ஊதி எடுத்துக் கொண்டாலும் மிக நல்லதுதான். உங்கள் சமத்து எட்டையும் இரண்டையும் சேர்ப்பதும், பதினாறடி பாய்வதும். நாம் தடுக்கப் போவதில்லை. சொந்தப்புத்தி வந்து விட்டால் பிறகு எந்தப் புத்தியும் தேவையில்லையாம்.

பின்பு இரண்டு லிட்டர் மழைநீரில் நடுவை விட்டு நன்கு கலக்கிவிடு. பின்பு சுத்தமாக தகுந்த துணியால் வடிகட்டிக் கொள்ளுங்கள். முக்கிய கவனிப்பு தெளியவைத்து இறுத்துவிடாதீர்கள். காரியம் கெட்டது. ஞாபகமாக சுண்ணம் உறையுமுன் துணியில் வடிகட்டவும். பால் போல் நிறமிருக்கும். இதைத்தான் நாம் அடுத்து உபயோகிக்கவேண்டும் .இந்த பாலில் உப்பு நீரில் பிறந்து வளர்ந்த கன்னி, அப்பின் சுவையை தப்பாமல் இடவேண்டும். மாப்போன்ற நிறத்தாள் பாலில் குளிக்கப்பயப்படுவாள் .இந்தக்கன்னியை நீ நன்கு தேய்த்துக் குளிப்பாட்ட வேண்டும் .இவள் குணமே நீரினுள் மூழ்க மாட்டாள். கல்லென்றும் பாறையென்றும் பெயர் பெற்றவள். இதனால் நீ முன்னமே காவானூறில் மாலையிட்டுக் கொண்டு

வந்த தாலி கட்டாத பஞ்சமியா மூத்திரத்தை இதிலிட்டுக்கலக்கு, கலக்கியே எல்லாவற்றையும் நான்கு லிட்டர் ஜாடியிலே ஊத்திவிடு. ஊற்றிய மூத்திரத்தை தயிர் மத்தால் கடையவேண்டும். தயிர் நிறமாகுமட்டும் கடைந்துவிடு. உனக்கேதும் களைப்பானால் தாலிகட்டியவளை துணைக்கு அழைத்துக்கொள். கடைந்தபின் கெட்டியான வாயன்ற கண்ணாடி ஜாடியில் அரையளவு நிற்கும் படி முழுவதையும் ஊற்றிவிடுங்கள். இந்த நீரை தந்தை காணாத்தயாளன், தர்மவான், உண்டவனுக்காகத் தன் உயிரைக் கொடுத்த நீதியாளன் , தன் தாய் பெற்ற சகோதரனுக்காக கட்சி மாறிக் கொடி பிடிக்காத தகைமையாளன்- அன்று வாழ்ந்த அம்புவில் கெட்டிக்காரன் (கர்ணன்) தந்தை முன் (சூரிய வெப்பத்தில்) பத்து நாட்கள். வைத்துவிடு, அவன் பார்வை படப்பட நீரிலே ஆடைகட்டி வரும். கட்டிய ஆடைதனை அகற்றிவிடு. இரவெல்லாம் தூங்கிவிடு, பகலெல்லாம் புதையலைப் பாதுகாப்பு செய்து கொள். தட்டிவிட்டாலும், பட்டு விட்டாலும் பட்ட பாடெல்லாம் வீணாம்.

ஆடை கட்டியவுடன் எடுத்துவிடுவது மிக முக்கியம். ஆடைகட்டவில்லையென்றால் முன் கூட்டிய மூத்திர உப்புக்குறைவு என அர்த்தம் .பத்துநாட்கள் ஆன பின்பு இப்போது உள்ள நீரை வேறு பீங்கான் பாத்திரத்தில் ஊற்றிவிடு, கசடெல்லாம் வழித்து விடாதே. நீரை மட்டும் விட்டு நிரப்பவும். நீ ஏற்கெனவே உபயோகப்படுத்திய பாத்திரம் மண்பாண்டமானால் அந்தப் பாத்திரத்தை உபயோகிக்கக்கூடாது. கண்ணாடிப் பாத்திரமானால் நன்கு கழுவி சுத்தப்படுத்தி மறுபடியும் உபயோகிக்கலாம். இந்த நீரை இடகலையாகிய ஆத்தாளிடம் இரவிலே முகம் பார்க்க பனியிலே வைத்துவிடுங்கள் .பகலில் தூங்கி இரவிலே காவலுக்கு இருங்கள். பனியில் படுத்துவிடாதீர்கள். சிவத்தின் தலைமேலிருந்தாலும், அவன் பார்வை நன்குபடாமல் போக வாய்ப்புண்டு. ஆகாயவெளியில் வைத்துவிடு. மரத்தின் அடியிலோ,வீட்டின் தாழ்வாரத்திலோ வைத்துவிடாதீர்கள்.

இப்படியே மூன்று நாட்கள் இரவில் வைத்து பகலில் பத்திரமாக வீட்டிற்குள் மூடி வையுங்கள்.

பதினான்காம் நாள் இந்த நீர் தெளிந்து கண்ணாடிபோல் நிற்கும். இதைத்தனியாக இறுத்து தகுந்த பாட்டில்களில் ஊற்றி அடைத்துக் கொள்ளவும். பாட்டிலில் அல்லது பல சீசாக்களில் அடைக்கவும். கண்ணாடி கார்க்காக இருக்கவேண்டும். இந்த ஜலமானது சுத்த கெங்கை , சுத்த ஜலம் , அமுரி , ஊசி, தேசி, காசி, பிரணவ நீரென்றும் பல பெயர்களால் கூறப்படுவது. என அறிந்து கொள்ளுங்கள். இந்த நீருக்கு உப்பு, கைப்புத் தன்மை இல்லை என்பதுதான் பரிசோதனை .உடனே இந்த நீரை வாயிலிட்டுக் குடித்து விடாதீர்கள், கண் இருண்டு ஆபத்தை விளைவித்து விடும்.

ஒரு நீளமான ஊசியை எடுத்து அதன் நுனியில் தொட்டு நாக்கிலிட்டுப் பார்த்துச் சுவையறிந்த உடனே கீழே துப்பி விடுங்கள். நீங்கள் நிச்சயமாக இந்த முறையைப் பின்பற்றிவிடுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. யாரிடமும் உளறிவிடாதீர்கள் கேட்டவன் உங்களுக்கு-எதிரியாவான். அத்தோடு உங்கள் பிள்ளைகளை வளர விடமாட்டான். நீங்கள் பட்ட பாடெல்லாம் வீணாகும்.

அவன் அறிவுள்ளவனானால் உங்களிடம் உபதேசம் கேட்பான். இல்லையென்றால் விட்டுவிடுங்கள் பொதுவாக உங்கள் வகையிலொருவன் நூலைப் பார்த்து சித்தனாவான். இப்படியே நாமும் பெற்றோம். சிதம்பர ரகசியம் எது தெரியுமா? கண்டவர் விண்டதில்லை, விண்டவர் கண்டதில்லை என்பதாகும்.

தயிர் தயாரித்தல்

முப்பு தயாரிப்பு வித்தைகளில் சிலவிடங்களில் தயிரை உபயோகித்து சில செய்முறைகளைச் செய்யும் படி கூறப்பட்டிருக்கும். இவ்விடங்களில் பாலில் பிறைக்குத்திய தயிர் எனப்பொருள் கொள்ளக்கூடாது. அமுரி, மூத்திரம் என்ற

சொற்கள் வரும் இடங்களில் உயிர் வர்க்கங்களின் சிறுநீரை உபயோகப்படுத்தக்கூடாது என்பதைப் போல் இந்த சொற்களையும் அறியவும்.

நாம் தயார் செய்து வைத்துள்ள பனிநீரில் ஒரு லீட்டர் எடுத்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் ஊற்றிக் கொள்ளவும், பத்து கிராம் கற்சுண்ணத்தைப் பனிநீரில் விடவும் , இந்த நீரை செத்தும் கொடை கொடுத்த வள்ளல் செய்யது அப்துல் காதிருக்கும், மயிலுக்கும், மலர்க்கொடிக்கும் மனமிரங்கிய பாரிக்கும் முன்பு வாழ்ந்த கர்ணனின் தந்தை சூரியன் முகத்தில் காலை முதல் மாலை வரை வைத்துவிடவும், பலநாள் வைத்த சுத்தநீர் திரண்டு தயிர் போல் வரும். இதுவே தயிராகும். இந்த தயிரைத்தான் மருந்துக்கு உபயோகப்படுத்த வேண்டும்.

தருமமே தலைகாக்கும். இதை ஒரு கடமையாகக் கொள்ளுங்கள். இத் பூர்வ புண்ணியமாக வடிவெடுத்து உமது பிறப்பில் லக்கினத்திற்கு ஐந்தாம் இடமாக நின்றது. ஐந்தாமிடம் சரியில்லாதவனுக்கு வாரிசு இல்லை. உண்மையை அறிந்து கொள்ளுங்கள். பிச்சையெடுத்து இறைவன் தானம் செய்தானாம். தர்மத்திற்கு ஓடு எடுத்தவன் எனக்கூறுவார்கள். அவன் அணிந்த மாலை கபால மாலையாகும். அண்டக் கல்லையும் கபாலமெனக் கூறிய சித்தர்களும் உண்டாம். தர்மத்திற்காக இறைவன் ஓட்டைத் தூக்கினான் .இன்று சிறியவர் முதல் பெரியோர் வரை தர்மமென நோட்டைத் தூக்கிக் கொண்டு வருகிறார்கள். அவர்கள் வாங்குவது மக்களின் வயிற்றெரிச்சலைத்தான் . யாரும் இவர்களுக்கு தர்ம சிந்தனையோடு தானம் வழங்குவதில்லை. காரணம் வாங்கியவர்கள் செய்யும் தர்மம் எப்படிப்பட்டது என நாம் கூறவேண்டியதில்லை.

சுத்தி செய்தலுக்கு உங்களிடம் இப்போது சுத்த ஜலமிருப்பதால் இந்த நீரை உபயோகப்படுத்தி சுத்தி செய்யாமல் எந்த உப்புக்களையும் அண்டக்கல்லையும் சுண்ணமாக்கினால் பலன் காணுவது அரிதாகும். பழச்சார்

என்றவுடன் எலுமிச்சம் பழத்தை அறுத்து அதன் சாறைப்பிழிந்து காரியம் செய்தால் நாம் என்ன செய்யமுடியும். கோழிமுட்டையின் வெண்கருவையும் மனிதநீரையும், எலுமிச்சம் பழத்தையும் உபயோகப்படுத்தும் இடத்தில் உபயோகப்படுத்துங்கள் .நாம் இது பற்றி நூலில் குறிப்பிட ஆவலாகத்தான் இருக்கிறோம். ஆரம்பம் முதல் முடிவு வரை நூலைப் படித்துவிட்டு செயலில் இறங்கவேண்டியது உங்களுக்கு நான் கூறும் நற்புத்தியாகும். சிகப்பு விளக்கு வெளிச்சம் சிறிதாக விழுந்தாலும் அதன் எச்சரிக்கை உயிர்காக்கும். இது போலவே நமது புத்திமதியுமாகும்.

சித்தர்கள் முப்புமுடிக்கும் பாகத்தைக் கூறிவரும் போது, நீ முன்னமே முடித்துவைத்த முப்பூவில் கொஞ்சம் போடு எனக் கூறுகிறார்கள். நாமே இப்போது முப்பு செய்ய ஆரம்பித்துள்ளோம். நாம் முன்பே முடித்த முப்பூவில் கொஞ்சம் போடுவது எப்படி சாத்தியமாகும்? சிந்தித்துப்பாருங்கள் .கோழி வேண்டுமென்றால் முட்டை வேண்டும், முட்டை வேண்டுமென்றால் கோழிவேண்டும். இதில் எது முதலில் படைக்கப்பட்டது. இப்போது கோழியும் உண்டு முட்டையும் உண்டு. உயிர்களைப் படைத்தது இறைவன் என்று ஐயத்திற்கு விடை கூறிவிடலாம். நாம் படைத்த சுத்தியல், குறடு இவைகளில் எது முன்னால் செய்யப்பட்டது. நெருப்பில் காயவைத்து சுத்தியலை செய்ய குறடு வேண்டும். சுத்தியல் இல்லாமல் குறடு செய்யமுடியாது. நம் காலத்தில் இரண்டுமே இருக்கிறது. இதுபோலவே முப்பு முடித்தலுமாகும் என அறியவும்.

தயிரை மணியாகக் கட்டல்

நாம் தயார் செய்து வைத்துள்ள தயிரை ரவிப்புடமாக பலமுறை வெயிலில் வைக்க தயிரானது சுண்டி மினுமினுப்பான கற்களாக உறைந்து விடும். இந்த முறைப்படி உறையவில்லையென்றால் அண்டக்கற்களை நாம் தயார் செய்த சுத்த ஜலத்தில் காய்ச்சி கல்லுரலிலிட்டு இரும்பு

உலக்கையால் மாவாக்கி மறுபடி சுத்த நீரிட்டு முறைப்படி சுத்தி செய்து சுண்ணமாக்கிய சுண்ணமாக இருக்காது. இது சரிதானா என்பதை பார்த்துக் கொள்ளவும். அல்லது மேலும் என்ன தவறு நேர்ந்திருக்கலாம் என்பதை அறிந்து தவறைத்திருத்தி தயிர் மணிகளைத் தயார் செய்யவும். இந்த மணிகளைப் பத்திரப்படுத்தி வைக்கவும்.

ஐந்து சுண்ணக்குகை

எல்லாநீற்றுமானங்களுக்கும் சுண்ணம் செய்வதற்கும் ஐந்து சுண்ணக்குகை தயார் செய்து கொள்ளவேண்டும். கடல்நுரை, கல்லுப்பு, வெடியுப்பு, சீனம் , சூடன் இவைகளை நாம் செய்து முடித்த அண்டநீரால் சுத்தி செய்து முடித்தபின் சுண்ணமாக்கிக் கொள்ளவும். இந்த சுண்ணாம்பைக் கொண்டு சுத்த ஜலத்தில் பிசைந்து குகை செய்து உலரவிடு. நிழலிலேயே உலர்த்த வேண்டும். நன்கு உலர விடவும். இதே நேரத்தில் சுண்ணத்தால் மேல்மூடியும் செய்து கொள்ளவும். சுண்ணக்குகை சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது. இது அகத்தியர் குருநூல் முறையாகும்.

கடையில் கடல்நுரை கேட்டால் கணவாய் என்ற மீனின் ஓட்டைக் கொடுப்பார்கள். இது கடல் நுரை அல்ல என்பதை உணரவும். நாம் அருமையான சித்தர் முறைகளைக் கண்டுபிடித்துச் செய்ய உதவும் பொருட்களைக் கடையில் சென்று வாங்கினால் அவர்களிடம் வாங்கியவை உண்மையான பொருட்களா என்பதை பரிசோதித்து அறிந்து கொள்ள வேண்டியது நமது கடமையாகும். போலிச் சரக்குகளைக் கொண்டு தயாரிக்கும் மருந்து மருந்தாக இராது .அது பலனும் அளிக்காது.அதனால் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

கடைச்சரக்கில் சித்தரத்தையைக்கூட சரியானதுதானா என்பதை பார்த்து வாங்கவேண்டும், எதையாவது தந்துவிடுகிறார்கள். இது பேரரத்தையென்றால் வேறு

தருவார்கள். இல்லாவிட்டால் இதுதான் இருக்கிறது என்பார்கள். இக் காலத்தில் சில மருந்துப் பொருட்கள் கடைகளில் விற்பதே இல்லை, எந்த சித்தர் வந்து வாங்கி மருந்து செய்கிறார்? எல்லா மருந்துகளுமே கடைகளில் விற்கப்படுகிறது. யார் மூலப்பொருட்களைக் கேட்டு வாங்கி மருந்து தயார் செய்து விற்பனை செய்கிறார்கள்?

இது போன்று மூலிகைக் கடைக்குச் சென்றால் நீ எந்த மூலிகை கேட்கிறாயோ அந்த மூலிகைகள் எல்லாம் தருவார்கள். அறிந்தவன் இந்த மூலிகை நான் கேட்டது அல்ல எனக் கூறினால் இதைத்தான் எல்லோரும் வாங்கிச் செல்கிறார்கள் என நம்ம... குழப்பத்தில் ஆழ்த்திவிடுவார்கள்.

நமது மூலிகைகள் மருந்துப் பொருள்கள் , உப்பு வகைகள் எது என்ற உண்மைப் பொருளை அறிந்திருக்கவேண்டும் எத்தனையோ போலி மருந்துகளாலும், போலி மருத்துவர்களாலும் உயிர் பலியாகிக் கொண்டிருக்கிறது. இதைக் கட்டுப்படுத்த முடியவில்லையென சம்பந்தப் பட்டவர்கள் கூறுகிறார்கள். நானே ஒரு போலி மருத்துவம் செய்யும் நபரிடம் அகப்பட்டு நல்ல மருத்துவர் ஒருவரால் காப்பாற்றப்பட்டேன். மேலும் ஒருவரால் நாம் போலிச் சிகிச்சைப்பெற்றிருந்தால் கூற்றுவன் என்னை கூட்டிச் சென்றிருப்பான் .இதுபோல் போலி உப்புக்களை வாங்கி ஏமாந்தேன். இது போல் வேறு சிலர் தவறான உப்புக்களையும் தப்பான மூலிகைகளையும் என் கண்முன் வாங்கிச் செல்வதைக் கண்டிருக்கிறேன். கடைக்காரர் முன் நின்றுகொண்டு இதுவல்ல அதுவல்ல எனக் கூற முடியவில்லை உலகம் இப்படி உருள்கிறது.

இப்போது நமக்கு உலகத்தைப்பற்றி ஆராய நேரமில்லை யாதலால் முப்புவைக் குருவாக ஆக்கும் வேலையை கவனிப்போம். நன்றாகக் கவனித்து தேர்வு செய்த மின்னற் கொடியாளை பஞ்சபூத வீட்டினுள்ளே வைத்து ப்க்குவமாய்

காற்றில்லாமல் கதவடைத்துப் பிருதிவியோடு சேலையைக் கட்டு, வீட்டினுள்ளே காற்றிருந்தால் கருத்துப்போவாள். முன் யோசனையுடன் சீலையைக்கட்டு இரண்டு முழம் போதுமானது. மணலிலே மறைந்துவிடும் பறவையின் புடத்தைப்போடு.

சொன்ன சொல் தவறாதே புடம் மாறக்கூடாது. புடம் தெரியாவிட்டால் கவுதாரி விற்பனிடம் விபரம் கேளு கூறுவான். குருவுக்கு எங்கே போய் விபரம் கேட்க .அவன் காட்டிய வழியே சென்றால் குருவைக் காண்பாய். இதை நீங்கள் அறிந்து கொண்டால் வாதிக்கும் வாதியாக, வயதாகாப்பருவமாக குரு அருளாலே தொட்ட இடம், பட்ட இடமெல்லாம் பொன்னாம்,நோயெல்லாம் பொறிகண்ட பஞ்சதுபோல் கருகியோடும். முறையோடு அனுபானத்திலீந்தாயானால் நீயும் ஒரு சித்தனாவாய் .ஏதும் புரியாவிட்டால் நூல் முழுவதும் படித்துப்பார் என் தலை தப்ப சித்தரைப்போல் பயந்து மறைத்துக் கூறவில்லை. புரியாவிட்டால் உங்களுக்கு உலகத்தைப்பற்றி ஒன்றும் தெரியாத மனிதர்களின் கூட்டத்திலே சேர்க்க வேண்டியதுதான் ஆனால் உங்க ளுக்கு அணு அளவு புரியவில்லையென்பதற்காக அடியோடு ஒதுக்கி விடப்போவதில்லை: உங்களைச் சிறந்த சித்தனாக என்னால் முடிந்தவரைமுயல்வேன். பட்டப்படிப்பிலே பல பேர் தோல்வியுற்றால் யார் மேல் குறைகூறுவது. ஏற்கெனவே கற்றுத் தந்த கீழ்நிலை ஆசிரியர் மேலா? அல்லது கலைக் கூடத்தின் மேலா? இல்லை, கல்லூரிமேலா? சொல்லுங்கள் அல்லது குறையே உங்களுடையது தானா? இதற்கு விடை விக்கிரமாதித்தனிடம் வேதாளம் உளவு முறைப்புதிர் போடுகிறது. விக்கிரமன் சரியான பதில் கூறுகிறான். என்ன நடந்தது? வேதாளம் பழையபடி முருங்கை மரத்தின் மேல் ஏறிவிட்டது.உலகம் நாம் எதைக் கூறினாலும் பழைய கதைதான் .

அண்டபிண்டத்தை அறிந்தவன் தங்கம் செய்யும் முறையையும் அறிவான் என்பது சித்தர்கள் வாக்காகும். இந்த அண்டசராசரமாகிய பிரபஞ்சம் சிவாயநம என்ற ஐந்தெழுத்துக்குள் அடக்கமாகிவிடுகிறது. ஐந்து பூதங்களின் சேர்க்கையாலும், சக்தியாலும் உலகம் நான்கு வித யோனியில் உற்பத்தியாகி உயிரினங்களும் உண்டாக்கப்பட்டு உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. நிலமாகிய பிருதிவியும் நீராகிய அப்பும், கனலாகிய தேயுவும், காற்றாகிய வாயுவும், வெளியாகிய ஆகாயமும் சேர்ந்த ஐந்துதான் பஞ்சபூதம் இவைகள் தான் அண்டத்தைப்பற்றிய விபரமாகும்.

அகத்தியரால் திரட்டி வழங்கப்பட்ட மூன்று தமிழ் வேதங்களும் நம்பியாண்டர் நம்பியால் அடங்கன் முறையாக வகுத்துக் கொடுக்கப்பட்டன. இந்தக் கைங்கர்யம் திருவாரூர் சோழமன்னரால் நடைபெற்றது. மற்றொரு வேதநூல் எதுவென நான் கூறவேண்டுமென்பதில்லை நீங்கள் புரிந்திருப்பீர்கள். இந்த வேத நூல்களில் இதுவரையிலும் விஞ்ஞானிகளும் கூறாத கூறமுடியாத பல ரகசியங்கள் கூறப்பட்டிருக்கின்றன. இதில் தான் ஐந்தெழுத்து மந்திரத்தின் ஐந்து பஞ்சபூதத் தத்துவ விளக்கங்களும் இருக்கிறது என்பதை உணருங்கள்.

பிண்டம் என்பது உயிரினத்தைக் குறிப்பதாகும் .இதற்குள் மனித வர்க்கமும் அடக்கமானதுதான் இந்தப் பிண்டத்திலும் நமசிவாயம் அடங்கியுள்ளது. பஞ்ச பூதங்களால் ஆனதே இந்த உடலும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். உடலில் -உள்ள திடப்பொருட்கள் நிலமாகும். திரவம் நீராகும். உடலில் உண்டாகும் கனல் நெருப்பாகும். வாயு என்பது சுவாசிக்கும் காற்று: குருதியும் உணவும், காற்றும் சென்றடையாத இடை வெளி ஆகாய அம்சமுமாகும். ஐந்து பூதங்களும் அண்டத்திலும் பிண்டத்திலுமிருந்து இயங்கிக் கொண்டிருக்கின்றன. மனித உடலில் இவைகளில் எது ஒன்று போனாலும் உயிரும் போய்விடும். உடலில் இயக்கம்

நின்றுவிடும்.செத்த சவமாகும் .இது போன்று அண்டமும் ஐந்தால் இயங்கிக் கொண்டிருக்கிறது.

நீ செய்யும் தவறு உன் தாய் தந்தை , பரம்பரைக்கு வந்து சேரும் உடனே இந்நூலில் சொல்லப்பட்டிருக்கும் பக்கம் வரும்வரை வேகமாகப்படியுங்கள் .அல்லது இசுலாமிய வேதநூல் தெரியுமா? தெரியும் பெயர் "திருக்குர்ஆன்" என்ன முருகா? அடுத்தவர் மதநூல் தெரியும். அகத்தியர் தேடித்தந்த தமிழ் வேதங்கள் தெரியவில்லை சரி, சரி, எனக்கென்ன எதையாவது ஓது. ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு. ஒன்றே குலம் ஒருவனே இறைவன் என்றதும் நாம் தானே. இதுதான் அண்ட பிண்டங்களின் தத்துவம்.

சிவாய நம பஞ்சாட்சரத்தின் ஒவ்வொரு எழுத்துக்குள்ளும் ஒரு பூதம் நிறைந்துள்ளது. அகத்தியரால் அகழ்ந்தெடுக்கப்பட்ட தமிழ் வேதங்களை ஓதியது உண்டா? எத்தனை என்பது தெரியுமா வேதங்களின் பெயர் தெரியுமா?

அண்டபிண்டங்களின் ஒழுக்கத்தையும் அடக்கத்தையும் கவனிப்போம். நிலம் நீரில் ஒடுங்கியுள்ளது. இந்த இரண்டிற்கும் மேல் உள்ள கனலில் முன்னிரண்டும் ஒடுங்கிவிடுகிறது. கனலுக்குமேல் காற்றில் முன்மூன்றும் ஒடுங்கி விடுகிறது. காற்றிற்கு மேல் வெளியாகிய ஐந்தில் இந்த நான்கும் ஒடுங்கிவிடுகிறது. இந்த ஐந்து பூதங்களும் எங்கேயாவது ஒடுங்கித்தான் ஆகவேண்டும். எங்கே ஒடுங்குகிறது என்பது தான் நமது வினாவாகும் .இதற்கு பதில் கூறந்தெரிந்துவிட்டால் நீயும் ஒரு சித்தனாகும் தகுதி பெற்றுவிட்டாய். பதில் தெரியாவிட்டால் கவலைப்படவேண்டாம். மெதுவாக முயற்சிசெய் உன்னால் முடியும் தம்பி. மனம் தளறாதே.

நான் படித்த சுவார்ட்ஸ் உயர்நிலைப்பள்ளியில் ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பதிலேயே அரசு தேர்வில் அனைவரும் வெற்றியடைந்தார்கள் .அதுவல்லோ குருவிருக்குமிடம் .இதுபோன்று என்னுடை கண்ணான மாணவர்கள்

யாவரையும் வெற்றிவாகை சூட்டாமல் விடமாட்டேன். சித்தர்கள் உங்கள் கண்களை அவிழ்த்துவிட்டு உங்களுடன் விளையாடி மகிழவே திரு. எஸ். பி. இராமச்சந்திரன் (பதிப்பாசிரியர், தாமரை நூலகம்.) அவர்கள் துணிவு கொண்டு களம் அமைத்துக் கொடுத்துள்ளார்கள். இதனால் நாம் தரும் பாலைக் குடிப்பது உங்களது கடமையாகும். முப்பூவைக் கவுதாரிப் புடமிட்டுள்ளீர்கள். இனி குருவைக் காண வேண்டியது ஒன்று தான் நம்முடைய வேலையாகும்.

"கல்லெறியப்பாசிகலையும் நந்நீர்காணும் நல்லோர்
சொல்லுணரின் ஞான்ம் வந்து தோன்றும் பராபரமே"
- தாயுமானவர்.

நல்ல நீரிலும் பாசிபடர்ந்து அந்த நீர் பசுமையாகக் காட்சியளிக்கும். கீழே உள்ள நல்ல நீர் நமது கண்களுக்கும் தோன்றும். இதுபோல் நல்லவர்களுடைய நூற்களைப் பெற்று அவர்களின் அறிவுச் செல்வங்களைக் கவர்ந்து நம் இதய இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டிக் கொண்டால் யாராலும் எடுத்துவிட முடியாத செல்வமாகவும் சாகாக் கல்வியாகவும் இருக்குமன்றோ.

"மூர்த்தி தலந் தீர்த்தம் முறையாக கண்டோர்க்கு
நல்வார்த்தை சொல்ல சற்குருவும் வாய்க்கும்பராபரமே"
தாயுமானவர்.

மூர்த்தி எது தலம் எது, தீர்த்தம் எதுவென அறிந்து முறைப்படி செயல்பட்டவர்களுக்கு நல்லுபதேசம் கிடைக்கும். வேற்றூர் மனிதனுக்கு உள்ளூர் சிறுவன் குருவாம். நீங்கள் குரு என்றவுடன் காவி உடையணிந்து ஒருமுழ நீளத்திற்கு வெண்மையான தாடியுடன், தலையில் பெருங்கொண்டை கட்டிக் கையில் கமண்டலத்துடன், உடலெல்லாம் வெண்சாந்து அணிந்து விருத்தராக உருத்திராட்ச மாலையுடன் ஒருவர் வந்து உங்கள் முன் தோன்றுவார் என்ற எண்ணம் கொள்ளக் கூடாது.

எட்டையும் இரண்டையும் அறிந்து மகாரத்தில் நின்றாயானால், சாகாத காலால் உன் தலையில் சந்திரனாள் தான் மிதிப்பாள், போகாத அமிர்தப்புனல் வேகாத தலையில் சொட்டும், ஆணவம் அழிந்திடும், பதி வந்திடும், பத்தும் தெரிந்துவிடும். பதி வந்திட பசு பாசம் நில்லாது என்ற சிவ தத்துவமே மெய்ஞான முப்பூவாகும்.

முப்புச் சுண்ணம் முடிக்கும் விபரத்தைக் கூறும் போது சித்தர்கள் இடையில் மெய்ஞானத்தையும் சேர்த்துக் கூறியுள்ளார்கள். இதனால் ஆரம்ப அறிவு உள்ளவர்களுக்கு முப்புவின் செய்முறையில் குழப்பத்தை உண்டுபண்ணும். சித்தர்களின் அறிவு நமது அறிவுக்கு எட்டாதது ஆகும். அவர்களின் நோக்கமும் போக்கும் நமக்கு மெய்ஞான அறிவு புகட்டுவதே குறிக்கோளாகவுடையது ஆகும்.

திருமூலர் வரலாறு படித்திருப்பீர்கள் .இவர் தனது உடலைவிட்டு அரவம் தீண்டி இறந்த மூலன் என்பானின் உடலுக்குள் கூடுவிட்டுக்கூடு பாய்ந்தவராகும்.இவரது வைத்திய நூலைவிடசிறப்பான நூல் திரும்ந்திரமாகும். நீங்கள் திருமந்திரம் படிக்காமல் வைத்தியம் செய்ய வந்திருக்க மாட்டீர்கள் என நினைக்கிறேன் . இதுவரையிலும் நீங்கள் திருமந்திர நூலைக் காணவில்லையென்றால் உடனே நூல் நிலையம் சென்று திருமந்திரத்தைப் பெற்று கண்களில் வைத்து ஒத்தி விட்டு உள்ளத்தால் முத்தமிட்டபின்பு எந்நூலைப் படியுங்கள். அந்த நூலைவிட எந்த நூலும் முதன்மை யுடைத்தன்று என்பது மனோன்மணியாள் கூற்றாகும்.

ஞானப் பொய்கை திருமூலர் அவர் காலத்து ஆறு தத்துவ நூற்களையும் ஆராய்ந்தார். பின்பு அ-உ-மகர ஓங்கார மூல மெய்ஞான மூன்றெழுத்து முப்பூவை தனித்திரு , விழித்திரு, பசித்திரு என்ற மூன்று யோக நிலைகளையும் கடைப்பிடித்து பின்புதான் வைத்தியன் வாதி என்ற சித்தனாக வெளியில் வந்தார் .இந்த நூலைப்படித்து முடிக்க ஒரு நாள் போதுமானது

இந்த அறிவு உங்களுக்கு ஆயிரம் பிறைக்கும் ஞான அறிவு என்னும் தீபம் எரிய ஊற்றிய நெய்யாகும் எனக் கூறுகிறேன். இதனால் வைத்திய நூலில் கூறப்பட்ட மெய்ஞானத்தையும் , மருந்துவ முறைகளையும் பா லுண்குருகு போல் பிரித்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

அண்டக்கல்லின் சுத்திமுறை

அண்டக்கற்களை நாம் முறையாக சுத்தி செய்து முப்புத்தயாரிக்கப் பயன்படுத்தினால்தான் உண்மையான பலனைக் காணமுடியும். இதற்குமுன் கூறிய முறைகளைக் கடைப்பிடித்து சுத்தகங்கை தயார் செய்திருப்பீர்கள். அந்த சுத்த ஜலத்தால் நாம் கூறும் முறைப்படி நடு என்ற பீஜத்தை சுத்திக்கவும். முன்னொரு தடவை கூறி பின்னொருதடவை கூறுகிறேன் என்று நினைக்காதீர்கள் இதற்குப் பெயர்தான் கோழியிலிருந்து முட்டை எடுப்பது. முதலில் நம்மிடம் கோழியுமில்லை முட்டையுமில்லை , இதனால் கோழி தயார் செய்தோம் .இப்போது கோழியிலிருந்து முட்டை தயார் செய்வோம்

குண்டு மணி அம்மை, சத்தியின் வடிவு, மனோன் மணித்தாயின் முன்னிலையில் மார்கழி நந்நாள் பூர்வபட்சம் தசமியில்ஆதியாய்,அனாதியாய், சத்தியோடு சமாதியா னவளை, ஈருடலும் ஒருயிராய் கீழ்க் கோவானூரிலிருந்து உயிரோடு அழைத்து வந்தோம் .விண்ணிலிருந்து மண்ணுக்கு வந்த மன்னவனை அண்டக்கற்களை மேலிருக்கும் கோரையென்னும் அழுக்குஎல்லாம் போக்கி சுத்தமான நீரில் நன்றாக மூழ்க வைத்துக் கழுவி சுத்தம் செய்யவும். பின்பு நன்கு காய்ந்தவுடன் கல்லுரலிலிட்டு இரும்பு உலக்கையால் இடித்து மாவாக ஆக்கிவிடவும். பின்பு சிறிதுசிறிதாக அம்மியில் வைத்து அரைத்து சலிக்கவும். சலித்துச் சலித்து அரைக்கவும் . நன்கு மாவாக ஆகிவிடும். இந்த மாவு நிறம் சுத்தவெண்மையாக இருக்காது.

இந்த மாவை மறுபடியும். சுத்தமான நல்லநீரில் ஒருநாள் முழுவதும் ஊறவிட வேண்டும் .நீர் மாவின் கனத்தைப்போல் நீர்மேல் நிற்க வேண்டும். நன்கு கலக்கி விட்டு அமைதியான ஓரிடத்தில் வைத்துவிடவேண்டும். மறுநாள் தெளிவை இறுத்துவிட்டு மறுபடியும் நீர்விட்டுக் கலக்கித் தெளியவைக்கவேண்டும் இதே போல் பத்து நாட்கள் செய்யவேண்டும் .பின்பு நமது தயாரிப்பான சுத்த கெங்கையை ஒரு கண்ணாடிப்பாத்திரத்தில் விட்டு இந்த மாவை விட்டுக் கிளறிவிடவும். இரண்டும் நன்றாக ஒன்று சேர்ந்தபின் பக்குவமாக வெயில் நன்கு படும்படியாக வைத்து விடவும். இந்த மாவு வெயிலின் தாக்கத்தால் பொருமி நீர ஆரம்பிக்கும். நன்கு நீர்த்துச் சுண்ணமாகும் வரை ரவியில் வைக்கவும். பின்பு இரண்டு.மூன்று நாட்கள் ஆனாலும் சுண்ணமாக மாறும் வரை வெயிலில் வைக்கவும். இந்தச் சுண்ணம் சுத்தமான அண்டக்கல் சுண்ணமாகும் . முன்பு நாம் சுத்த கெங்கை தயாரித்தோம் அல்லவா? அந்த நீருக்கு இந்த சுண்ணத்தைத் தான் சேர்க்கவேண்டும். அதே போன்று நீருக்கும் இந்த சுண்ணத்தைச் சேர்த்த பழச்சாரைத்தான் உபயோகிக்க வேண்டும்.

பூநீரைச் சுத்தமாக்கியபின் இந்தப் பழச்சாரை பீங்கான் பாத்திரத்திலிட்டு அதில் முன்பு சுத்தி செய்த பூநீர் உப்பை விட்டுக் கிளறிக் கரைத்தபின் மேல் மட்டம் நீர் நிற்க வேண்டும் .இதை அடுப்பிலிட்டு சிறு தீயாக எரித்து சுண்ணமாக்க வேண்டும். இது வழலைச் சுண்ணம்.

எந்த உப்பையும் சாதாரண மழைநீர் அல்லது உப்பில்லாத, குளோரின் கலக்காத குடி தண்ணீர் இவற்றால் கரைத்து வடிகட்டி இறுக்கவேண்டும் . பின்பு தச தீட்சையளிக்க வேண்டும். உப்புக்கள் தீட்சையானால் நல்ல உப்பாகும். நல்ல பலனைக் கொடுக்கும். இந்த உப்புக்களுக்கு உலோகங்களின் களிம்பை நீக்கித் தங்கமாக்கும் குணமும் உண்டாம். இதுபோல் மனிதர்களையும் தீட்சை செய்வதுண்டு. சிலர் குருக்களிடம்

சென்று தீட்சை பெற்று குருவின் வழி நடப்பார்கள். கோபத்தை விட்டோடிய குணங்குடிகளாவார்கள், ஞான உபதேசம் செய்வார்கள். நீங்கள் இவர்களுக்கு அடிபணிந்து நல்லாசியும் நல்லுபதேசங்களும் பெற்று ஆயுளைப் பலப்படுத்தி துன்பம் தொடரா வண்ணம் இருந்து கொள்ளவும்

மனிதர்களின் தீட்சை

உலோகங்களை நெருப்பு, உப்பு மூலிகைகள் ஆகியவற்றைக் கொண்டு சுத்தமாக்கலாம். மனிதர்களை எதனைக் கொண்டு சுத்தமாக்க முடியும். சக்கரவர்த்தி மைந்தன் தன் மனைவியை சுத்தமானவள் என உலகிற்கு காட்ட நெருப்பினுள் நுழைந்து வரும் படி கட்டளையிட்டான். சீதை நெருப்பினுள் புகுந்து வெளியேறி தன் பரிசுத்தத் தன்மையைக் காட்டினாள்.

இது இராமாயணக் காவியத்தின் ஓர் சம்பவமாகும். நீதி நூல்கள், நீதிக்கதை, சத் தத்துவங்கள், நல்லுபதேசங்கள் இவைகளால்தான் மனித வர்க்கத்தை நல்வழியில் திருத்தி சுத்தமனத்தவராக ஆக்கலாம். அதற்காகத்தான் இராமாயணம், மகாபாரதம் போன்றவற்றை இயற்றினார்கள். இராமா யணத்தில் ஐந்து பூதங்களின் வலிமையை எடுத்துக் காட்டி இந்தத் தத்துவத்தின் ஆறாவது நிலையாக இறைவனைக் காட்டப்படுகிறது. இது அண்டத்தைப் பற்றியது. மகாபாரதம் ஐந்து புலன்களின் நிலையால் உயிர் நூற்றுக்கணக்கான கெட்ட உறவோடு கலந்து துயரப்படுவதைக் கூறுகிறது. சிலப்பதிகாரம், மணிமேகலை காப்பியங்கள் , பூர்வ புண்ணியத்தைக் காட்டி வினை தொடர்ந்து வந்து பழிவாங்கும் என்ற உண்மையை உணர்த்துகிறது.

ஜோதிடத்தில் பிள்ளைகளைப் பற்றி அறியுமிடம் ஐந்தாமிடம். ஒன்பதாமிடத்தோன், நான்காமிடத்தோன் செய்த வினைகள் ஐந்தாமிடத்துப் பிள்ளைகளையும் வந்து சாடுகிறது. நாம் செய்யும் தீவினைகள் நம்மைத்தொடரவே செய்கின்றன.

இதனால் நான்கையும் தெரிந்து நல்வழிநடந்திட நல்ல நாயன்மார்கள் நாலுபேரைப் பாருங்கள் மீசைக் கவிஞன், அஞ்சாநெஞ்சன், பாரதியின் கவிதை ஒன்றைப்படியுங்கள்

பின்னலைப் பின் நின்று இழுப்பான்..........

" தின்னப்பழம் கொண்டு தருவான், பாதி தின்கின்ற போதே தட்டிப்பறிப்பான்" இந்தப் பாட்டிலே மேலோட்டமாக பார்த்தால் கண்ணன் பெண்களின் ஜடைகளை பின்னாடி வந்து பிடித்து இழுப்பது போலவும், பழங்களைத் தட்டிப்பறிப்பது போன்றும் அர்த்தம் கொள்ளநேரிடும். உட்கருத்து இறைவன் நமது துன்பதுயரமான சிக்கல்களாகிய பின்னலை நமக்குத் தெரியாமல் பின் நின்று எடுத்து விடுவான். சுகபோக வாழ்க்கை பாதியிலே பறி போகும் என்பதுதான் பாடல்களின் உண்மைக் கருத்தாகும்.

மெய்ஞானிகளின் பாடல்களில் உள்ள கருத்தையறியாமல் மக்கள் தடுமாறுகிறார்கள். காவியங்களின் மெய்ப்பொருள் என்ன? எதை உள்நோக்கமாகக் கொண்டு இயற்றப் பட்டுள்ளது என்பதையெல்லாம் நாம் அறிந்து கொள்வதில்லை உபமேயத்தை மறந்து உவமானத்தை ரசிக்கிறோம்.

அறுசுவையில் ஒரு சுவையைத்தான் ஒவ்வோர் மனிதரும் விரும்புவார்கள். இதுபோல் நவபாவனைகளிலும் ஒருவர் ஆடலை நோக்குவார். பிறிதொருவர் பாடலை ரசிப்பார், மற்றொருவர் நடிப்புத்திறனைப் பேசுவார், நாம் அந்தக் காட்சியின் கருத்தென்னவெனக் காண விரும்புகிறோம். உலக மக்களின் குண இனமறிந்துதான் எல்லா நடப்புக்களும் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொன்றும் இனிப்புத் தடவப்பட்ட மாத்திரை மருந்துகளைப் போல் உருவாக்கப் பட்டிருக்கிறது. இளைஞனுக்கு காமத்தையும், வயோதிகர் களுக்கு ஞானத்தையும், வைத்தியருக்கு வாதத்தையும், யோகிக்கு சொர்க்கத்தையும் இனிப்பாகக் காட்டித் தங்கள் காவியங்களை இயற்றியுள்ளனர். இதுபோன்று சித்த வைத்தியத்தில் தீராத

நோயெல்லாம் தீருமப்பா, ஆகாத இரசவாதமும் இதிலே ஆகுமப்பா எனக் கூறப்பட்டிருக்கிறது. வைத்தியர்கள் எல்லா நோய்களையும் இந்த ஒரு மருந்தில் தீர்த்து விடலாம். இரசவாதத்தால் செம்பைப் பொன்னாக்கி விடலாம் என ஆவலோடும் மருந்து செய்ய முனைகின்றனர் .இதே நேரத்தில் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல் மெய்ஞானத்தைப் புகட்டி விடுகிறார்கள். மெய்ஞானத்தைப் பற்றிக் கூறாத சித்தர்கள் வைத்திய வாகடத்தைக் காணமுடியாது. மெய்ஞான அறிவு சிறிதேனுமில்லாத மனிதன் எரியாத திரியற்ற விளக்கைப் போன்றவன் .அவனால் குடும்பத்தில் துயரமே ஏற்படுமன்றி இன்ப வாழ்க்கை எய்த முடியாது.

சுத்தமான முப்பு தயாரிக்கும் முறை

மனித வர்க்கத்தை சுத்தமாக்கினால்தான் இந்தப் பூவுலகில் யாவரும் நிம்மதியாக வாழ முடியும். உடல் நலத்தோடும், உண்ண உணவோடும், அமைதியாக வாழும் வாழ்க்கையே இவ்வுலகில் நாம் அனுபவிக்கும் சொர்க்கலோகமாகும். தன்னைத்தானே அறிந்து பின் தலைவனை அறிய வேண்டும் தலைவனை அறிந்த பின் சுத்தமான முப்பூவையும் அறிய வேண்டும்.

இப்போது நாம் கூறும் முப்பூவின் தரம் சிறப்பானதாகவிருக்கும். இக்காலத்தில் ஆராய்ச்சியாளர்கள் மாடு, ஆடு, கோழி, தானியவித்துக்கள், தாவர வகைகள் ஆகியவை அனைத்தையும் தரம் உயர்த்திவிட்டார்கள். இது படிப்படியாக நடந்த ஆராய்ச்சி செயல்முறையாகும். இதேபோன்றே நமது முப்புக்குரு தயாரிக்கும் முறையுமாகும். புதிதாக முப்புக்கு தயார் செய்யும் அன்பர்கள் எடுத்த எடுப்பிலேயே சுத்தமான முப்பூவை தயார் செய்ய முடியாது என்பதை அறிய வேண்டும்.

பூநீர் உப்பை (முன்பு சுத்தப்படுத்தியது) மழைநீரில் அல்லது நல்லநீரில் கரைத்து தெளியவைத்தால் அடியில் கசடு தேங்கும்

இதை கண்ணாடி ஜாடியிலிட்டுப்பார்த்தால் நம் கண்களுக்கு புலப்படும். மேல் கரைசலை மற்றொரு ஜாடியில் ஊற்ற வேண்டும். இந்த உப்புக்கரைசலை ஒரு பாத்திரத்திலிட்டு காய்ச்சவேண்டும். உப்புத் தங்கும். இந்த உப்பை நந்நீரில் மறுபடியும் கரைக்கவேண்டும். ஒருநாள் அமைதியான இடத்தில் மூடி வைக்க வேண்டும். கரைசலை ஜாடியில் தங்கியுள்ள கசடு இல்லாமல் வேறு பீங்கான் பாத்திரத்தில் ஊற்றவேண்டும். அடியில் தங்கியுள்ள கசடை ஊற்றக்கூடாது. மறுபடியும் அடுப்பிலிட்டு சிறுதீயாக எரித்துக் காய்ச்சவும். உப்பு உறைந்து வரும் இத்துடன் எடுத்துக் கொள்ளவும். இதுபோன்று பத்துநாட்கள் செய்தால் பூநீர் உப்பு, வெண்மையான சுத்தமான உப்பு கிடைக்கும். இந்த உப்பைத்தான் நமது முறைக்கு உபயோகப்படுத்தவேண்டும். பின்பு கல்லுப்பைக் கொண்டுவந்து முன் செய்த உப்பை செய்தது போல் காய்ச்சி தசதீட்சை செய்து சுத்தமான உப்பைத் தயாரித்துப் பத்திரப்படுத்தவும்.

பின்பு நடு என்ற அண்டத்தை (சுத்தி செய்தது) எடுத்து நாம் முன்பு தயார் செய்து வைத்துள்ள சுத்த கங்கை இருந்தால் எடுத்துக் கொள்ளவும் அல்லது இரண்டாவது தயார் செய்த உப்புக்களாலும் சுண்ணத்தாலும் முன்பு செய்தது போல் சுத்தகங்கை தயார் செய்து கொள்ளவும். இந்த சுத்தகங்கைக்குள் இப்போது தயார் செய்து வைத்துள்ள பூநீர் உப்பைக் கரைத்துக் கொள்ளவும். கரைசல் கெட்டியாக இராமல் நீராக இருக்கட்டும். அளவும் அதற்குத் தகுந்தாற் போல் போடவும். இந்தக் கரைசலில் அண்டக்கற்களைப்போட்டு அடுப்பேற்றி நன்கு வற்றக் காய்ச்சவும். பின்பு கற்களை எடுத்து உலர விட்டுக் குழிஅம்மியில் வைத்து இடித்து சுத்தகங்கை நீரினால் அரைத்து சிறுவில்லையாகத் தட்டி உலர வைத்துவிடவும்.

கரியுடன் சேர்த்து உலையினுள் வைத்து நன்கு ஊதிச் சுண்ணமாக்கிக் கொள்ளவும், பின்பு இந்த வில்லைகளை எடுத்து பீங்கான் பாத்திரத்திலிட்டு நல்லநீர் வார்க்கவும்.

சிப்பிச்சுண்ணம் நீறுவது போல் நீறிப்போகும். நீறிய பின் இதன் மேல் சுத்தநீர் ஊற்றி அமைதியான ஓரிடத்தில் திறந்தபடி வைக்கவும், நீர்வற்ற மேலே உப்பு படரும். இந்த உப்பைச் சேகரித்து எடுத்துக் கொள்ளவும். உப்பு உடனடியாகக் கிடைக்காது. பலநாட்கள் ஆகும். பீங்கான் பாத்திரத்தின் ஓரங்களிலும் உப்பு படியும் .இதனையும் சேகரித்து எடுத்துக் கொள்ளவும். முன் சித்தப்படுத்திய உப்பையும் இந்த உப்பையும் கூடச் சுண்ணம் சேர்த்து பத்துகிராம் வீதம் நாற்பது கிராம் வைத்து சுத்த கங்கை விட்டு குழி அம்மியில் ஆட்டவும் .பின்பு வில்லை செய்து உலர விடவும்.

நாம் உப்புக்களை சுத்தம் செய்த போது கழிவுமண், சுண்ணம் போன்றவற்றை எடுத்து குழி அம்மியில் சுத்த கெங்கைவிட்டு அரைத்து மூன்றுமுழம் நீளம் மூன்று விரற்கிடை அகலம் உள்ள துண்டாக பருத்தித் துணியைக் கிழித்து சீலை மண்தயார் செய்யவும். அல்லது சுத்த கெங்கை விட்டு செம்மண்ணில் சீலை தயார் செய்து கொள்ளவும். மண்சட்டி தயார் செய்து சட்டிக்குள் வைத்து சீலைமண் சுற்றி முழப்புடத்தில் வைத்துப் புடம் போடவும். ஆறியபின் எடுத்துக் கொள்ளவும். இதிலிருக்கும் சுண்ணம் நிறம் மாறாமல் சுத்தமாக இருக்கிறதா என்பதையும் கவனித்துக் கொள்ளவும்.

இந்த சுண்ணத்தைக் காரமேற்ற சுத்தி செய்த வீரச் செந்தூரம் ,புனுகு , பூரம் அரை கிராம் சேர்க்கவும். இந்தச் சரக்கையெல்லாம் முன் தயார் செய்த சுத்த கெங்கையினால் கல்வத்திலிட்டு நன்றாகக் குழவியால் ஆட்டவும். கால் கிராம் கல்லுப்புச் சுண்ணம் சேர்த்து நன்கு ஆட்டிய பின் வில்லை செய்து வெயிலில் காய வைக்கவும். இந்த வில்லையை எடுத்து ஐந்து சுண்ணக்குகையில் வைத்து ஒரு முழ ஆழமான குழியில் எருவடுக்கி நடுவில் வைத்துப்புடத்தைப் போடவும். முப்பது நாழிகை கழித்து புடத்தைப் பிரித்து பக்குவமாக எடுத்து ஐந்து சுண்ணக் குகையின் மூடிப்பகுதியைத் திறந்து சுண்ணத்தைக் கண்ணாடிப் பாட்டில்களில் அடைத்துவைக்கவும்.இது நல்ல

காரமேற்றிய குருவாகும்.

இந்தக் குருவால் உலோகங்கள் மற்றும் மருந்துகளை தக்க அளவு சேர்த்து ஐந்து சுண்ணக் குகையில் நீற்றுமானம் செய்யலாம். அவைகளை குறிப்பிட்ட அனுபானங்களிலிட்டு நோய்களுக்கு கொடுக்க நோய் நிவாரணமாகும். சிலர் முப்பு சுண்ணம் என்றவுடன் செம்பைத் தங்கமாக்குமா? என்றே வினவுகின்றனர் . இது பற்றி அறிய நமது அடுத்த பாகத்தில் விபரமாக எழுதுகிறோம். அதில் உங்களுக்கு ஏற்படும் ஐயங்களுக்கும், வாத வயித்திய. விபரங்களுக்கும் விளக்கமாகவும் அதற்குரிய முப்புத் தயாரிப்பு விபரங்களும் விளக்கமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மூலநூற்களையும் படியுங்கள். அதில் புரியாதவைகள் இதில் விளக்கமாக எழுதப்பட்டிருக்கிறது என்பதையும் அன்புடன் தெரிவிக்கிறேன்.

பாகம் மூன்று

சரமாறித் தைலம்

குருமருந்து ஒரு தெய்வீக மூலிகை போன்றது. இந்த மருந்தை முறையாகச் செய்து முடித்துவிட்டால் அதன் பலன் மிகப் பெரிதான காரியங்களைச் சாதிக்கும் என்பதை நாம் அறிய வேண்டும். முப்பு சம்பந்தப்பட்ட மருந்திலிருந்து தயார் செய்யும் முறையையும் , அது தீர்க்கும் நோய்களையும் பற்றி அகத்தியர் கூறியுள்ள சரமாறித் தைலத்தைப் பற்றிக் கவனிப்போம். சரமாறிக் குழித்தைலம் தயார் செய்யத் தேவையான சரக்குகள் (1) புங்கம் வித்து, (2) புன்னை வித்து, (3) கடுக்காய், (4) கார்கொல், (5) அனிச்சம், (6)தான்றிக்காய். இந்த ஆறு வித்துக்களையும் இரண்டு லிட்டர் அமுரியில் ஊற வைக்கவும், எல்லாவித்துக்களும் சமஅளவாக இருக்கவேண்டும். அளந்தால் ஒரு லிட்டர் அளவு இருக்கவேண்டும். இந்த ஒரு லிட்டர் அளவு வித்துக்களை இரண்டு லிட்டர் அமுரிக்குள் ஊறவைக்க வேண்டும். இருபது நாட்கள் ஆனபின்

வித்துக்களை எடுத்து நிழலில் உலர விடவேண்டும். நன்கு உலர்ந்தபின் இந்த ஆறு வித்துக்களின் அளவிற்கு மிளகுடன் கலந்து மறுபடியும் அமுரியில் ஊறவைக்கவும். முன் ஊறவைத்த அமுரியில் மீதமிருந்தாலும் அத்துடன் அதே ஜாடியில் இந்தப் பொருட்களையும் ஊறவைக்கலாம்.

எந்த அளவு பொருள்கள் இருக்கின்றதோ அதைப்போல் இரண்டு மடங்கு அமுரியில் ஊறவிடவேண்டும். மேலும் இருபது நாட்கள் ஆனபின்பு எடுத்து நிழலில் உலர்த்த வேண்டும் .பின்பு குழித்தைலம் இறக்கிக் கொள்ளவும். குழித்தைலம் நவீன முறைப்படியும் வடித்துக் கொள்ளலாம். அல்லது நீங்கள் கண்டுபிடித்த முறைகளிலும் வடித்துக் கொள்ளலாம். நீங்கள் செய்த முறை சரியான பக்குவமானதா என்பதைச் சோதிக்க தைலத்தில் சிறிதளவு தொட்டு நரைமுடியின் மேல் தடவவும். தடவிய சிறிது நேரத்தில் நரைமுடி கருத்துப்போகும். நரைமுடி கருக்காவிட்டால் மேலும் இரண்டுதடவை தடவிப்பாருங்கள். நரைமுடி கருத்து விட்டாலும் அல்லது நிறம் ஓரளவு மாறினாலும் தைலத்திற்கு சக்தி உள்ளது என அறியவும். சிறிதளவு கூட நிறம் மாறவில்லையென்றால் கலந்த அமுரில் தவறு நேரிட்டிருக்கும் என்பதை அறியவும்.

இந்த தைலத்திற்கு தீரும் நோய்கள் (1) வெடிசூலை,(2) கண்டமாலை,(3)சொறிசிரங்கு (4) கரப்பான்,(5)விஷம், (6)குட்டம், (7)தலைவெட்டை,(8)மேகம்,(9)புழுவெட்டு,(10) மையீடு, (11)கண்குத்தல்,(12)கை நடுக்கம், (13)குறுந்தடிப்பு, (14)அரணைக்கடி, சிலந்திக்கடி, (15)குழிவாளை, (16)மூட்டுவாளை,(17)துடைவாளை, (18)முதுகுவாளை, (19)விப்புருதி,(20)விலாவில்வாளை.(21) ஆமையடி, பூனையடிச் சிலந்தி,(22) கண்ணோசை (23) நுனிநாசிப்புற்று, (24) பிளவை, (25)நேத்திரப்பிளவை,(26) பெண்குறிமேல் வரும் கரப்பான் கட்டு. (27)தடச்சிலந்தி, படச்சிலந்தி ,(28) யோனிப்புற்று,(29) பவுத்திரம், (30)முளை மூலங்கள் , (31)

அண்டப்புற்று, (32) உந்திப்புண், (33) துடையின் புற்று, (34) துடீசூலை, இடி சூலை, (35) அரையாப்பு, (36) கீழ்நாக்கு, மேல் மூக்குப் புற்று (37) நேத்திரசூலை (38) புறை விழுந்த புண் (39) நாக்குண்ணி, (40) பீசநீர், (41) கோர்வைப்புற்று, (42) விழிமுழுங்கி, இமை முழுங்கி, (43) வீச்சுப்புற்று, (44) நல்லபாம்புக்கடி, விரியன் கொம்பேறிமூக்கன் விஷம், (45) சூலெலி (46) தேள், நட்டுவாக்கலி விஷம் (47) முள் தைத்தவிஷம், (48) இன்னதென தெரியாத கொடிய நோய்களையும் தீர்க்கும்.

உபயோகிக்கும் முறை :

இத்தைலத்தை உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை பூசித் தேய்க்கலாம். வியாதியின் நிலைக்குத் தகுந்தவாறு உடம்பிற் பூசித் தேய்க்கவும். காலையில் குளிக்கும் நிலையிருந்தால் சீயக்காய் உபயோகித்து இளம் வெந்நீரில் குளிக்கவும் அல்லது வழக்கம் போல் குளித்துக் கொள்ளவேண்டியது. நோயின் தீவிரத்திற்குத் தகுந்தபடி பூசிக் குளிக்கவும். இது எணணெய்க்குளியல் போல் அல்ல.

செய்யக்கூடாதவை: இந்த மருந்தை உபயோகிக்கும் போது புகையிலை. புளி, மீன், வெயில், சைபோகம், கோபம் கூடாது மனம் அமைதியாக இருக்கவேண்டும்.

செய்யவேண்டியவை: மருந்தை நோய்க்குத் தகுந்த அளவு உபயோகி, வடிய வடிய தேய்க்காதே, சிறிய ரணங்களாக இருந்தால் அவ்விடத்தில் மட்டும் உபயோகிக்கவும். நோய் பூரணமாகத் தீருமட்டும் உபயோகிக்கவும். அலர்ஜி ஏற்பட்டால் மருந்தை நிறுத்தி விடவும். புற்று நோய்க்கு வருடக்கணக்கில் உடல் வலிமைக்குத் தகுந்தவாறு விட்டு விட்டு உபயோகிக்கவும். புற்று நோய், விஷகடிக்கு பத்தியம் அவசியம். இத்தைலத்தை மாதம் ஒரு முறை தேய்த்து மூழ்கினால் புற்று நோய் அணுகாது. கண்ணிற்குள் தைலத்தை விடவேண்டாம். உட்பிரயோகமும் வேண்டாம். இதே போன்று உட்

பிரயோகத்திற்குத் தனிமருந்து உண்டு அதை உட்பிரயோகம் பண்ணலாம்.

இத்தைலம் முடிப்பதில் நமக்க ஏற்படும் குறைகள்:

(1) குறிப்பிட்ட ஆறு வித்துக்களும் கிடைப்பது அரிது. (2) கிடைத்த சரக்குகளும் சுத்தமானதாகக் கிடைப்பதில்லை, (3) அமுரியைத் தயார் செய்வதில் குறைபாடுகள்,(4) சுத்தமாகக் கொட்டைகளை உடைத்துப் பருப்பு எடுத்து உபயோகிக்காதது, (5) குரு தொட்டுக்காட்டாதது.

இத்தைலம் செய்ததில் அடியேன் செய்த சில தவறுகள் . எனது அறிவு பூரணமாகவும் குருவில்லாமலும் கடைச் சரக்குகாரர்கள் வித்துகளை தவறாகக் கொடுத்ததாலும், சிலர் வைத்திய நூல்களில் அமுரியை மனித மூத்திரம் என்று குறிப்பிட்டதாலும் நமக்கு பெரும் தோல்வி ஏற்பட்டது.

நீங்களும் இத் தவறுகளைச் செய்யக் கூடாது. அமுரி என்பது என்னவென்று உங்களுக்குத் தெரியும். தேசிநீர், ஊசிநீர் , அமுரி, கன்னியென்ற பழசசார் இவையெல்லாம் சுத்த கெங்கைக்கு மேலானது என்பதையும் உணரவேண்டும்.

குருவை முடிக்க முப்பத்திரண்டு தீட்சைகள் செய்யவேண்டும் என்று அகத்தியர் கூறுகிறார்.இது போல் பல மெய்ஞானிகளும் கூறுகின்றனர். காயற்பட்டணத்தில் பிறந்த அல் ஆரிபு பில்லாஃ பெரிய நூஹு ஒலியுல்லா அவர்கள் ஒரு இஸ்லாமிய மெய்ஞானியாம். இவர்கள் மெய் ஞானத்தைப் பற்றிய வேதபுராணம் என்ற நூலில் மெய்ஞானவழி முறைகளையும் அதன் உட்கருத்தையும் தெளிவாகக் கூறியுள்ளார்கள் . சித்தர்கள் மறைத்து விட்டவைகளையும் இவர் வெளிப்படையாகக் கூறியுள்ளார்கள். ஷரீயத் -சரியை ,தரீகத் -கிரியை, மகரிபத் -யோகம், உறக்கீகத் -ஞானம் ஆகிய நான்கு வழிகளையும் நாமும் அறிந்து மகிழலாம். இவர் இறந்து மலையாளம் பூவாற்றில் அடக்கமாகிப் பிரபல்யமான தர்கா

உள்ளது. இவர் சுத்தி செய்யாத முப்பு பயன் தராது எனக் கூறியுள்ளார். முப்பூவின் இரகசியம் அதன் சுத்திகரிப்பு முறையில் தான் உள்ளது என்பதை நாம் நன்கு அறியலாம். இந்த மெய்ஞானிதான் மெய்ஞான நிலையை அடைந்த பின் பதினெட்டு அறியாத மொழிகளும் எனக்குப் புரிந்தது எனக் கூறுகிறார்கள் .இவர் வைத்திய நூல் ஏதும் எழுதவில்லை. முப்பூவிற்கும் இவருக்கும் சம்பந்தமில்லை. ஆனாலும் இவர் முப்புவின் இரகசியத்தைக் கூறியுள்ளார்கள். முப்பு ஒரு மெய்ஞானம் உண்டாக்கும் காயகல்பமாகும். நமது சித்தர்களும் இந்தக் குருமருந்தை காயகற்ப சாதனமாக உட் கொண்டுள்ளார்கள். முப்பு நோயையும் தீர்க்கும் மெய்ஞான அறிவையும் வளர்க்கும். இதனால் சித்தர்களும், மெய் ஞானிகளும் முப்பு தயாரிக்கும் முறைகளை மிக ரகசியமாக இது வரையிலும் வைத்துள்ளனர் .நாம் இம் முறைகளை முழுமையாக வெளியிட்டுள்ளோம்.

முப்புவின் இரகசியங்கள்.

நாம் முப்பு தயாரிக்கும் முறைகளை யாவரும் இந்நூலைபடித்து அறிந்து கொள்ளும் அளவில்தான் வெளிப்படையாகக் கூறியுள்ளோம்.இதற்குமேலும் புரியாத நபர்கள் இருக்கலாம். அவர்கள் மூல நூற்களைப் படிக்கவேண்டும். இப்போது தாமரை நூலகத்திலிருந்து முழுமையாக எல்லாவகையான வைத்திய நூல்களும் கிடைக்கின்றன. அவைகளைப் பெற்றுப் படித்து உங்கள் அறிவு ஞானத்தை சீர்படுத்திக் கொள்ளுங்கள். நாம் முன்பு கூறியுள்ளது போல் வைத்திய நூற்கள் குழப்பத்தை உண்டாக்கும் நாம் கூறிய அறிவுரைகளின்படி நடந்தால் நேர்வழிகாட்டும்.

எட்டாத நரிக்கு திராட்சைப் பழம் புளிக்கும். மக்கள் யாரும் நரி பேச்சைக் கேட்டு திராட்சையைப் புளிக்குமென்று இதுவரையிலும் உண்ணாமலில்லை. இந்த முறைகளை

அறிந்தவர்களைப் பயன்படுத்தி நவீன முறைகளில் மருந்தை உற்பத்தி செய்து மக்கள் நலம் பெறச் செய்யுங்கள். சிலர் முப்பு என்றவுடன் செம்பு உலோகத்தை தங்கமாக ஆக்குமா? இந்த சக்தி முப்புக்கு உண்டோ? எனக் கேட்கிறார்கள் .நாம் எப்படி உண்மையை உணர்த்துவது என்று புரியவில்லை. சில ஊர்களில் முளைத்த மரங்கள் கல்லாக மாறி நிற்கின்றன. இந்த மரங்கள் எதனால் கல்லாக ஆகியது. அந்த மரம் நின்ற இடத்தில் பூமியில் உள்ள சில உப்புக்களின் இரசாயன மாற்றம்தான் மரங்கள் கல்லாக ஆனது. அணு உலையிலிட்ட பிளாட்டினம் தங்கமாக மாறிவிடுகிறது. துருப்பிடிக்கும் .இரும்பு எவர்சில்வராக மாறிவிட்டது. சில நாடுகளில் உள்ள நீர்த் தேக்கங்களில் கோழிமுட்டைகள், மரங்கள் ஆகிய பொருள்களை சிறிது நேரம் விட்டு எடுத்தால் கல்லாக மாறிவிடுகிறது. சோழமன்னன் தங்கத்தால் செய்த நடராஜர் சிலையை சிறிதளவு கந்தகத்தை விட்டு செம்பாக மாற்றி விட்டதாக சித்தர்கள் கூறுகிறார்கள். இமயமலைமேல் உள்ள கைலாசநாதர் கோவில் செம்புத்தூண்கள் அனைத்தும் ஒரு மருந்துப்பூச்சால் தங்கமாக மாறியுள்ளது . சாதாரணபுளி மட்லைக் கிழங்கு இரும்பைச் செம்பாக மாற்றுகிறது.

வள்ளலார் செமபைத் தங்கமாக மாற்றும் மூலிகைகளைப் பற்றிக் கூறியுள்ளார்கள். வள்ளலார் தனது அன்புக்குப் பாத்திரமான அம்மாசி என்னும் ஏழைக்கு இரசவாதத்தைக் கற்றுக் கொடுத்தார் .வள்ளலார் தன் சுமையைத் தூக்கி அலையும் மனிதருக்கு மண்ணைப்பொன்னாக்கிக் கொடுக்கவில்லையா? இந்தத் தங்கமெல்லாம் செய்யாததைச் செய்யும் பொருள், தங்கத்தை விட விலை மதிக்கமுடியாத ஒரு பொருள் முப்புச் சுண்ணமல்லவா? இதற்குமேல் தங்கம் தேவையா? தீராத நோயைத் தீர்ப்பது தங்கமா அல்லது முப்புச் சுண்ணமா? இன்று மருந்துகளால் தீர்க்க முடியாத நோய் என்று கூறப்படும் எய்ட்ஸ் நோயும் இந்த மருந்தால் மறைந்து விடும். இதை அறியாமல் தங்கத்தின் மேல் சிந்தனையைச் செலுத்தவேண்டாம்

இத்துறையில் நீங்கள் ஈடுபட்டால் கடத்தல்காரர்கள், உங்களைக் கடத்திக் கொண்டுபோய்விடுவார்கள் .பின்பு பொன் முட்டையிட்ட வாத்தின் கதிதான் உங்களுக்கு ஏற்படும்.

நாடி

நாடி பிடித்துப்பார்த்து நோயை அறியாதவர்கள் சித்த வைத்தியராக ஆகமுடியாது. நாடிகள் பத்து வகையானலும் அதில் ஐந்து நாடிகள் குறிக்கப்பட்டு மூன்று நாடிகள் மட்டும் நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது. வாத, பித்த , சிலேட்டுமம் என்ற மூன்று நாடிகள் முக்கியமானதாகும். நாடிகளின் நடைகளுக்கு தகுந்தவாறு நோயின் அறிகுறிகளைக் கண்டுபிடிக்கலாம். கலைகள் மூன்று உண்டு, வலது பக்க நாசி வழியாக சுவாச ஓட்டம் சூரியகலை, இடதுபக்கம் சந்திரகலை, இரண்டும் சமமாக ஒடுவது சுழிமுனையாகும். இடபிங்கலை என்றும், அகரஉகரமென்றும், சத்தி சிவமென்றும், எட்டுயிரண்டு மென்று சித்தர்கள் பழமொழியால் குறிப்பிடுவார்கள். சர ஓட்டத்தைப் பொறுத்துத்தான் பரத்தைப் பார்ப்பான் என்பது பழமொழியாகும். ஆண்,பெண்களுக்குரிய கலைகள் பனிரெண்டும் , பதினாறுமாகும். இவைகளில் இருவருக்கும் நான்கு வீதம் பாழாகியது. ஆண் பெண் வாசல்கள் வித்தியாசமானது. ஆணுக்கு அடைக்கப்பட்ட வாசல்களும், பெண்களுக்கு திறக்கப்பட்ட வாசல்களும் உண்டு. வியாதிகளை அறிய பரீட்சை முறைகள்.

(1) நாடி பார்த்தல்,(2)சத்தம் பார்த்தல்,(3)நாக்கு, (4) தேகம், (5)நிறம், (6)மலம், (7)நீர் (8)விழி (9)நீர்ச்சீலை, (10)நெய்ச்சீலை, (11) உறுப்பு, (12) தீபுக்குறி சோதனை என பனிரெண்டு விதமான சோதனைகளின் மூலம் வியாதிகளை நமது முன்னோர்கள் அறிந்தனர். பித்தநாடி ஒடும் வரை ஆபத்தில்லை. பித்தநாடி அடங்கினால் அபாயகட்டம் என அறிய வேண்டும் .இதன் நுட்பங்களை மூலநூல்களைக் கொண்டு ஆராய்ந்திடுங்கள். இவைகளை அறியாவிட்டால்

நாம் நமது துறையில் சரியாக செயல்படமுடியாது.சுருக்கமாகக் கூறப்பட்டவைகளைப் பெருக்கமாக நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்.

கால்

உலகத்தில் உள்ள எந்த ஒன்றும் தனது மூல ஆதாரத்தில்தான் இயங்கமுடியும் .மரம் தனது தண்டுப்பகுதியினால் பூமியில் தனது காலை ஊன்றி இயங்குகிறது .மனிதன் தனது இரண்டு கால்களால் நடமாடிக் கொண்டிருக்கிறான் .மிருகங்கள் தங்களது நான்கு கால்களால் நடமாடிக்கொண்டிருக்கின்றன. உலகத்தில் உள்ள அத்தனையும் இதேவிதமாக ஒரு ஆதாரத்தின் மூலம்தான் இயங்கமுடியும் . இந்த பூமியின் இழுப்பு விசைக்கு தாங்கலாக இருப்பது கால்கள்தான். இல்லாவிட்டால் பூமியின் இழுப்பு விசையால் பூமியில் கிடத்தப்பட்டு விடுவோம்.

நாம் குறிப்பிடும் கால்கள் வேறாகும் .மனிதனோ அல்லது மிருகமோ இயங்குவது மூச்சுக் காற்றினால்,இந்த சுவாசம் நின்றுபோனால் எந்தக் கால்களும் நடக்காது. செத்த மனிதனாக ஆகிவிடுவான். ஆகவே நாம் பூமியில்நிற்க நடக்க ஆதாரமானது கால்/- மூச்சுத்தான்.மெய்ஞான மொழியில் கால் என்றால் மூச்சுக் காற்றுக்குத்தான் பெயர். இந்த சூத்திரப்பாவையின் ஆதாரம் நிலம், நீர் கனல் ஆகிய மூன்றையும் உள்ளடக்கி வைத்திருக்கும் நான்காவது பூதமாகிய காற்றோடு இணைக்கப்பட்டிருக்கிறது. பஞ்சபூதங்களில் ஒன்றாகிய ஆகாயத்துக்குள்ளிருக்கும் காற்றை நாம் சுவாசிப்பதும் விடுவதுமாக இருக்கிறோம். இந்த சுவாசத்தைக் கட்டுப்படுத்தியவர்களுக்கு எட்டு சித்திகளும் வாய்க்கப் பெறுவார்கள். மூலாதாரத்தில் நமக்கு அளப்பரிய சக்தி உள்ளது. இதுவே குண்டலினி சக்தியாகும். இதைக் காலினால் எழுப்பவேண்டும். உடலில் உள்ள ஆறு இடங்களில் இவை கிரியை புரிந்து மகாமேருக்கு ஏறும். மேருவாகிய உச்சித் தலைமூளைக்குள் சென்று தாமரைமலர் மலர்வதைப்போன்று

தலைகீழாக விரிந்து நிற்கும். இந்த மலரின் இதழ்களை ஆயிரம் என்றும், ஆயிரத்து எட்டு என்றும் கணக்கிடுவார்கள். நமது ஐம்பத்தோரு அட்சரத்தில் இது எண்ணிக்கையில் ஒன்றாக எண்ணப்படும். இதுவே பரிபூரணமாகும். இந்த அழைப்பை நீங்கள் கோவில் மூலப்பிரகாரத்திற்கு செல்லும் தாழ்வாரத்தின் மேற்பகுதியில் சித்திரமாகத் தீட்டப்பட்டிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். இந்த அட்சரத்தின் இரகசியத்தை ஞானிகளும் சித்தர்களும் வெளிப்படையாகவும், விளக்கமாகவும் கூறவில்லை. இதனால் நாமும் அறிய முடியவில்லை. இதற்கென தனிமுயற்சி செய்தால் எல்லாவற்றையும் அறிய முடியும். சித், சத் இரண்டுமே காலில் தான் மறைந்திருக்கிறது. 'காலைப்பிடிக்கும் கணக்கை அறிந்தவர்களுக்கு கூற்றுவனில்லை' 'மூலாதாரத்தில் மூண்டெழுகனலை காலால் எழுப்பி "சூத்திரப்பாவை கயிறற்றுவீழுமுன் சூட்சக்கயிற்றினை பார்' என்றெலலாம் நமது மூதறிஞர்கள் கூறிய மொழியாகும். நீரின் மேல் நடக்கலாம், நெருப்பினுள் உலாவலாம், ஐந்து உலோகங்களையும் வேதித்து விற்று உண்ணலாம், சிந்தையை அடக்கினால்/- என தாயுமானவர் கூறுகிறார். முக்கண்ணில் இரண்டு கண்களை மூடி மூன்றாவது கண்ணைத் திறந்து பார்க்கும் போது முப்பூவைக் காணலாம். மெய்ஞான முப்பூவை அறிந்து விட்டால், வைத்திய முப்புவை அறிவது வெகுசுலபம். இதனால் சித்தர்கள் வார்த்தை விளையாட்டுக்களில் இரண்டையும் சேர்த்துக் கூறினார்கள். நாம் எந்த முப்பு என அறிய முடியாமல் தடுமாறினோம். இப்போது நாம் இரண்டுக்கும் வேற்றுமைகளை அறிந்து வைத்திய முப்பு வேறு என அறிந்து கொண்டோம். நாம் கொடுத்துள்ள விளக்கங்களைப் படிக்காமல் சித்தர்களின் மூல நூலைமட்டும் படித்து எதையும் அறிவது கடினமாக இருப்பதுடன் குழப்பங்களும் அதிகமாகும். அதனால் இந்த நூலை ஒரு வழிகாட்டியாகக் கொள்ளுங்கள்.

குருவண்டு

முப்புத் தயாரிப்பில் நமக்குப் புரியாத் ஒரு வண்டு பறந்து வந்து சித்தர் பாடல்களில் நுழைந்து விடும். குருவண்டு என்றால் என்னவென்றே புரியாது எனது ஆரம்பத்தில் வைத்திய நூற்களைப் படிக்கும் போது கருவண்டே குருவண்டென நினைத்தேன். இந்தக்கருவண்டை கருங்குளவியென்றும் கூறுவார்கள். இந்த தும்பியானது பட்டுப்போன மரத்திலும், பாழடைந்த கட்டிடங்களில் உள்ள தூண் உத்திரங்களைத் துளைத்து உட்சென்று வருவதைக் கண்டிருப்பீர்கள். 'தும்பியிருந்த தூண்பாழ் வம்பியிருந்த மனைபாழ்' எனப் பழமொழியும் உண்டாம். . இந்த வண்டின் முட்டை, களஞ்சு கூட்டு எனச் சித்தர் பாடல்களில் வருவதால் இதன் முட்டைகளைத் தேடினேன். இந்த வண்டு முட்டையிட்டிருப்பதைக் கண்டு பிடிக்கவே முடியவில்லை.

இந்த வண்டு நுழைந்த துவாரத்தை அடைத்தால் ஒருவித சத்தம் வரும். இந்த ஒலியானது ஓங்கார நாதம் போலிருக்கும். நீண்ட நேரம் ஒலிக்கும். நான் ஓங்காரப் பிரணவ மந்திரத்தின் சூட்சத்தை அறிய நூற்களைப் படித்தபோது அங்கேயும் இந்த வண்டு வருகிறது. இந்த வண்டானது முட்டையே இடுவதில்லை என்பதை அறிந்தேன்.இந்த வண்டானது தன் இனப்பெருக்கத்திற்காக புழுக்களை எடுத்து தனது கூட்டில் வைத்து ஓங்கார நாதம் இசைக்குமாம். அந்த ஓசையைக் கேட்ட புழுக்களெல்லாம் வண்டினமாக மாறிவிடுகிறதாம். இப்படிப் பாடல்களில் பலரும் பாடியுள்ளார்கள். சித்தர்கள் ஏன் முட்டையிடாத வண்டின் முட்டையை மருந்திற்கு சேர்க்கக் கூறினார்கள்? நம்மை ஏன் ஏமாற்ற வேண்டும்? இதற்கு விடை முன்பே கூறியுள்ளோம்.

சரம்

வைத்திய நூல் படிப்போர்கள் ஓரளவு சரத்தைப் பற்றி அறிந்து இருப்பது நலமாம். பல மணிகளை ஒரு நூலில்

கோர்த்து தொங்கவிட்டால் அந்த சரம் எவ்வளவு நீளமானதாக இருந்தாலும் அது ஒரு சரம் தான். ஐந்து ஐந்து மணிகளாக ஐந்து நிறத்தில் ஐந்து சரம் தொங்கவிட்டால் ஐந்து நிற சரமாகும். இது போன்று நாம் வாங்கி நிறுத்திவிடும் மூச்சிற்கும் சரமென்று பெயராகும். ஒரு மனிதன் ஒரு நாளைக்கு இருபத்தோராயிரத்து அறுநூறு முறை சுவாசிக்கிறான். இரண்டரை நாழிகைக்கு ஒரு தடவை சுவாசம் ஒரு கலையில் ஓடும். வலது பக்க மூக்கில் ஓடும் சுவாசம் வடகலை, சூரியகலை, பிங்கலையென்றும், இடதுபக்க சுவாசத்தை இடகலை, சந்திரகலை யென்றும் கூறுவார்கள். எட்டு இரண்டு என்றும், சிவசத்தியென்றும் , அகார உகாரமென்றும் பரிமொழியாகவும் கூறப்பட்டிருக்கும். இந்த ரகசியத்தை யாரும் வெளிப்படையாகத் தெரிவிக்க மாட்டார்கள். இவையெல்லாம் கால் என அழைக்கப்படும். அரும்பாடுபட்டு அறிந்த விபரங்களை நாம் நமதருமை மாணவனுக்கு சுலபமாகக் கூறிவிட்டதினால் நீ இதை அலட்சியமாக எண்ணிவிட்டு விடாதே . ஜீவன் போய்விடும்.

சூரிய உதயத்தில் இந்த சுவாசம் எந்த எந்தக் கலையில் எந்த நாளில் எந்தப் பக்கத்தில் ஓடவேண்டும் என்று நியதி உண்டு, அதன்படி ஓடினால் உனது காரியங்கள் சித்தியாகும். அன்றாட காரியங்களைச் செய்வதற்கு எந்தக் கலையில் எந்தக் காரியம் செய்யவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. அதன் படி செய்தால் நமது காரியங்கள் அனைத்தும் வெற்றியைத் தரும். இல்லாவிட்டால் தோல்வி ஏற்படும். இரண்டு சுவாசங்களும் மாறும் போது இரண்டு மூக்கின் துவாரத்தில் வழியே ஓடி மாறும் இந்த ஓட்டத்தை சுழிமுனை என்று கூறுவார்கள் .இந்த நேரத்தில் எந்த காரியங்களும் கெடுதலாக முடியும். எட்டி மரப் பலகையிலிருந்து மாரண மந்திரத்தை செபித்தால் எவனை நினைத்து சூனியம் செய்கிறோமோ அவன் இறந்து போவான் இந்த நேரத்தில் தன்பிள்ளைகளைக்கூட நாசமாகப் போவாய் என்று திட்டினால் அவன் அப்படியே போவான். .இந்த சுழிமுனை ஓட்டம் சிறிது நேரத்தில் மாறிவிடும். இந்த நேரத்தில்

தெய்வசிந்தனையும், நல்லவைகளையுமே நாடவேண்டும். வைத்திய தர்மம் உயிர்களைக் கொல்வதற்கல்ல, உயிர்களை காப்பாற்றவே என்ற சத்நோக்கோடு நாம் செயல்பட வேண்டும். அறிவாள்மனை காய்கறிகள் நறுக்கவே வாங்கினோம். அந்த அறிவாள்மனை தவறி நமது கையை வெட்டிவிடுகிறது. இதுபோல் நமக்கு எந்த தவறும் நேரக்கூடாது என்பதற்காகவே சில ரகசியங்களைக் கூறுகிறோம்.

நான் ஆரம்பப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் படிக்காத ஒரு மேதாவியொருவன் என்னிடம் உனக்கு "அ"வுக்கு அட்சரம் தெரியுமா என்றான் எனக்கு ஒன்றும் புரியவில்லை. " உனக்கு த் தெரியாவிட்டால் உனது ஆசிரியரிடம் சென்று கேள்" என்று கூறினான் . எனது ஆசிரியரிடம் கேட்டேன். அவர் எனது கன்னத்தில் ஓங்கி அறைந்தார். "ஆ" என்று அலறினேன் .இதுதான்டா அட்சர மென்றார். அப்போதும் புரியவில்லை ஆனாலும் பின்பு நான் யாரிடமும் கேட்கவில்லை. சரத்தைப் பற்றி அறியாதவன் மரத்துக்கு சமானம் என்பதால் உங்களுக்கு நன்கு விளக்கமாகக் கூறிவிட்டோம். எதற்கும் சரநூலை ஒரு தடவை வாங்கிப் படித்துவிட்டுக் காரியம் பாருங்கள். பஞ்சாட்சரம், சடாட்சரம், ஐம்பத்தோரட்சரங்கள் புரியும்.

நாதம்

நாதம் என்பதை ஒவ்வொருவரும் தனது தகுதிக்குத் தகுந்தார்போல் அறிந்துள்ளார்கள். நாதம் என்பது பரை, ஓசை, சப்தம், ஒலி, ராகம் என்று பொதுவான சில விளக்கங்களைக் கூறுவார்கள். இதுவே நடைமுறையில் உள்ள மக்கள் பேசும் வார்த்தைகளுக்கு பொருளாகும் . ஆனால் நமது வைத்திய நூல் ஞானநூல்களில் கூறப்பட்டால் பொறுத்தமாகவும், பொறுந்தாத பொருளாகவும் இருக்கிறது. நாதவிந்து , நாதசக்தி, பூமிநாதம், அன்னை உமைநாதம், விந்து நாதம் என்று வைத்திய

நூல்களும், ஞானநூல்களும் கூறுகின்றன.

வாரான அகாரமது விந்துமாச்சு வகையான உகாரமது நாதமாச்சு பேரான ஒகாரமது பிண்டமாச்சு,.பேரொளியாம் பராபரத்திலெடுத்த உறு- ஊரான சீவசெந்து பரத்தின்கூறா உதித்து நின்ற நாதவிந்து சத்திகூறு - ஆறான விண்டவிந் தண்டக்கூறா வாச்சுதுபார் மூன்றாலே யைந் நூறாச்சே.

மேற்கூறிய அகத்தியர் பாடலில் தெளிவாக நாதவிந்துவைப் பற்றி சொல்லி இருக்கிறார். அகார உகார, சிவசத்தி, விந்து நாதமாச்சு. இரண்டும் சேர்ந்தபின் பிண்டமானது படைக்கப்பெற்ற அனைத்தும் இறைவனால் உண்டானது. பின் நாதவிந்து இரண்டும் சேர்ந்து உருவமானது. உருவம் சக்தியின் செயல்வடிவம். பட்டென்று தொட்டுக் காட்டமுடியவில்லை. பூமியின் விதையை ஊன்றியவன் அந்தவித்து மரமானது பூமியினால் ,வித்தில்லாமல் மரமில்லை என்பதை உணர்ந்து நாம் கூறிய விளக்கங்களை மனத்திலிருத்தி இடத்திற்குத் தகுந்தவாறு பொருளை அறிய வேண்டியது உங்கள் கடமையாகும். திருமண வாழ்த்துப் பாடியதோடு எங்கள் வேலை முடிந்தது. நாதமில்லையேல் நான்கு வேதமில்லை வேதமில்லையேல் உலகமில்லை. நாதத்தால் ஆனதே அண்டசராசரமும்.

அமுரி:

நாத விந்து சக்தி மூன்றும் சேர்ந்த சுத்தநீரே அமுரியாகும், இது சுத்தி செய்யப்பட்ட ஜெயநீரில் கடேசி நிலையாகும்.இதற்குமேல் சுத்தியில்லையாம், இதுவே பூரணமாக தீட்சை செய்யப்பட்ட அமுரி நீராகும். இதில் பஞ்சபூதங்களும் உண்டு நாத விந்து சக்தியும் உண்டு புரியட்டமும் இதிலே உண்டு, உயிர் உண்டு, உருவம் உண்டு, எல்லாமுண்டு என அறிந்து கொள்ளுங்கள். இதை அறியாவிட்டால் முப்பு முடித்தல் என்பது முடியாத

காரியமாகும். நாம் கூறியமுறைப்படி சுத்தகெங்கையை தீட்சை செய்யஅமுரியாகும்.

யார் இந்த மௌனகுரு?

குருவைத்தேடு, குருவைத்தேடு என்று கூறுகிறோம். வைத்திய முறையிலும் , மெய்ஞான அறிவிலும் சித்தர் பாடல்களில் குருவிடம் சென்று பன்னிரண்டு வருடங்கள் காத்திருந்து அறிந்து கொள்ளவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. நாமும் குருவிடம் சென்று அவரிடம் தொண்டு செய்து குருவின் கைமுறைப்படி அறிவு ஞானம் பெற வேண்டும் என்று ஆசையாகத்தான் இருக்கிறது. எந்தக் காட்டிற்குள் ஆசிரமங்கட்டி சீடர்களுக்கு உபதேசம் செய்யக் குரு காத்துக்கொண்டிருக்கிறார். நமக்கு நல்லுபதேசம் செய்து சகல ஞானத்தையும் கற்றுத் தந்து தீட்சை கொடுத்து அனுப்பி வைக்கும் அளவிற்கு யாரும் இல்லை.ஆறு வகையான அறிவு நூல்களில் ஒரு அறிவைக்கூட பூரணமாக அறிந்தவர் கூட யாரும் இல்லை. போலி வித்தைகளைக் கற்றுக் கொண்ட சாமியார்கள் பலர் இன்று ஆசிரமம் அமைத்து வித்தை காட்டிக்கொண்டு, அந்நிய செலாவணி மோசடியிலும், பெண்களின் சைபோகத்திலும் மூழ்கியிருக்கிறார்கள். பல சாமியார்களின் வேசம் கலைக்கப்பட்டு மக்கள் மத்தியில் அவமானப்பட்டிருக்கிறார்கள். பலர் சிறைச்சாலைக்கும் சென்று இருக்கிறார்கள்.

இந்தக் காலத்தில்தான் இப்படி நடக்கிறது; என்று யாரும் நினைக்க வேண்டாம். . அகத்திய மாமுனிவர் காலத்திலும் போலிக் குருக்களைப் பற்றி அகத்தியர் பாடல்களில் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். இதனால் நாமும் குரு குரு என்று குறிப்பிடுவதைக் கண்டு எந்தப் போலிகளிடமும் சென்று நீங்கள் அகப்பட்டு பணமும் மனமுமழிந்து ஏமாந்து விடாதீர்கள். பின்பு எம்மை நொந்து கொள்வதில் பலனில்லையாம். உண்மையான குருவிடம் எட்டும், இரண்டும்

முடிவான பத்தும் என்னவென்று கேட்டுப் பார்த்து பதில் கூறினால் பாதி குருவாகும், புரியட்டம், சாகாக்கால், ஐம்பத்தோரட்சரம் கூறினால் முக்கால் குருவாகும், உள்ளொளியும் குருவையும் கூறிய குரு முழுக்குருவாகும். இத்தகையோர் சொற்கேட்டு அடிமைத்தொண்டு செய்து முத்தி பெறலாமே.

நல்லதோர் குருக்களான வள்ளலாரும், தற்கலையாரும், குணங்குடியாரும். வாரியாரும் நம்மிடமில்லையே என்று நினையாதே உன் அறிவுக்கு ஏணி வைத்து ஏற்றிவிட்டாலும் எட்டாதே: திரு மூலர் காட்டியவழியில செல்லப்பா புரியாவிட்டால் பேசாமல் மௌனமாக இரு இதற்குமேல் உனக்கு எம்மால் குருவைக் காட்டமுடியாது.

சீடன்

சீடனிருந்தால் அல்லவோ குருவிருப்பார். ராஜா , ராணி காலத்தில் அரசகுமாரன்கள் குருகுலம் சென்று சகல கலைகளும் அறிந்து கொண்டார்கள். குருவுக்கு வேண்டிய சகல வசதிகளையும் அரசபீடம் செய்து கொடுத்தது. மற்றவர்களும் இலவசமாகக் குருவிடம் தொண்டு செய்து பலகலைகளையும் அறிந்து சொண்டார்கள். இக்காலத்தில் இதுபோன்ற ஒரு நிலையை நாம் எதிர்ப்பார்க்கமுடியாது. நமது பணத்தையும் சுகத்தையும் இழந்துதான் காரியம் சாதிக்கமுடியும். இவற்றையெல்லாம் அறிந்த சீடன் சோற்றுக்கு வழியில்லாமல் பரதேசியாக அலையமுடியுமா? பலகலைகளில் மெய்ஞானம் கற்றோர்கள் மட்டும் இரசவாத சித்தியைக் கற்றிருந்தார்கள். இவர்கள் மிகவும் மகிமை பொருந்தியவர்களாகவும், பற்றற்றவர்களாகவும் இருந்தார்கள். இவர்களால் மக்களுக்கு மிகுந்த நன்மைகள் உண்டானது. மத சம்பந்தமான அனுசரிப்புக்களை மக்களுக்கு எடுத்துக்கூறி நீதி வழி நடக்கச் செய்தார்கள்.

புடம்

சித்த மருத்துவத்தில் மருந்துகள் தயார் செய்வதற்கு புடம் போடுவது அவசியமாகிறது. புடம் போடாமல் சித்த மருத்துவம் செய்யமுடியாது . இதனால் புடம் போடும் முறைகளை நன்கு அறிந்திருப்பதும், மிக நுட்பமாக அறிந்திருப்பதும் நமது வேலை வெற்றிபெறுவதற்குரிய வழிகளாகும். புடம் என்பது நம்முடைய மருந்து தனலில் வெந்து பற்பமாகவோ, சுண்ணமாகவோ, செந்தூரமாகவோ ஆகவேண்டும். இதற்குத் தகுந்த அளவு சூடு அந்த மருந்திற்குரிய புடத்திற்கு ஏறவேண்டும். குறிப்பிட்ட அளவு, குறிப்பிட்ட நேரம், குறிப்பிட்டமுறைகளின் படிதான் புடமிடவேண்டும். இது தவறினால் பற்பம் கருக்கலாம் அல்லது வேகாமல்அரைகுறையாக நிற்கலாம்.

புடமிடுவதற்கு, உதாரணமாக கோழிமுட்டையை குஞ்சு பொரிப்பதற்கு செய்யும் வேலையும் ஒரு புடமிடும் வகையைச் சேர்ந்ததே. கோழிமுட்டையை மனித சூட்டை அளக்கும் தெர்மா மீட்டரின் அளவுப்படி 104 டிகிரி சூட்டை இருபத்தி ஒரு நாள் சூடு ஏறாமலும் இறங்காமலும் முட்டைக்கு கொடுக்க வேண்டும். வெளிக்காற்றுப் பட்டாலும், வெளி சூடு ஏறினாலும் கனலின் அளவு மாறுபடும் இதற்குத் தகுந்த பாதுகாப்பு செய்யவேண்டும். இப்படி முறையாக கோழி முட்டைக்கு சூடு ஏறினால் குறிப்பிட்ட நாளில் குஞ்சு வெளிப் படும். இது தவறி சூடு அதிகம் ஏறினால் நமக்கு முட்டை அவியல் கிடைக்கும், சூடு குறைந்தால் முட்டை அழுகிவிடும். இதுதான் புடம்போடும் முறைக்கு சரியான உதாரணமாகும். கனல் அளவானது உயிரை உண்டாக்கும். இது போன்றுதான் மருந்து வகைகள் புடமிடுவதும் என அறியவும்.

புடத்தில் பலவகையான முறைகள் உள்ளன. காடை, கவுதாரி, கோழி, நாய் ,யானை இவைகளையெல்லாம் குறிப்பிட்டு புடமுறைகள் சொல்லப்படும். எருக்கணக்கில் ஒரு எரு, பத்தெரு, ஐம்பது எரு, நூறு எருவென அளவு

குறிப்பிடப்படும். சூட்டின் அளவை தீபாக்கினினி, காடாக்கினி என்றும் சூரியபுடம் (ரவி) உமிப்புடம் என்றும் பலவிதமான புடங்கள் உண்டு. இவைகளை சீலைமண் சுற்றிப் புடமிடவேண்டும். குறைந்த அளவு ஒரு முழநீளத்திற்கு பருத்தி நூல் துணியை நாடாப்போல் கிழித்து செங்களிமண்ணை அந்தத் துணியில் தடவி குறிப்பிட்ட புடத்திற்கு சுற்றவேண்டும். ஏழு சீலைமண் என்றால் ஒவ்வொரு சீலைமண் சுற்றும் போதும் உலர்த்தி உலர்த்தி புடத்தின் மீது சீலைமண் சுற்றவேண்டும். மண் சட்டிகளைத்தான் பெரும்பாலும் நன்கு சுத்தம் செய்து மேல் பகுதிகளில் தேய்த்து உபயோகிக்கவேண்டும். ஐந்து சுண்ணக்குகைக்கு சுண்ணத்தை சுத்த கெங்கை அல்லது அமுரியினால் (தண்ணீர் அல்ல மனித மூத்திரமுமல்ல) நாம் தயார் செய்து வைத்துள்ள ஜெயநீர் ஊற்றி நாமே அளவிற்குத் தகுந்தாற்போல் குகை செய்து கொள்ளவேண்டும். கையினால் இந்தக் குகைசெய்யும்போது கை அரித்துவிடும். சிறிய கரண்டி, தகுந்த மண் பாத்திரம், மரத்தாலான தகுந்த கருவிகளை உபயோகித்து சுண்ணக்குகை செய்யவேண்டும். மேல்மூடியும் சுண்ணத்தால் செய்து கொள்ளவேண்டும். பாலித்தீன் பேப்பர்களை புனல் வடிவத்தில் சுருட்டி அதற்குள் வைத்தும் குகை செய்யலாம். இது குகையை கையால் சுற்றிப்பிடித்துக் கொள்ள வசதியாக இருக்கும். குகையை உலர்த்திப் பின்பு சுத்தப்படுத்தி மூடியையும் அளவாகப் பொருத்தவேண்டும். புடமிடும் குகைக்குள் சிறிது காற்றுக்கூட இல்லாமல் பொருளை நிரப்பவேண்டும். இல்லாவிடில் சுண்ணம் கருத்துவிடும். புடத்திற்குத் தகுந்த கனல் கிடைக்காவிட்டால் சுண்ணமாகாது. அதிகமான கனல் ஏறினால் கருத்துவிடும். இது அனுபவத்தில் அறிய வேண்டும். இதனால் சித்தர்கள் நம்மைக் கரிசுட்டு மாளவேண்டாம் என எச்சரிக்கை விடுத்துள்ளனர். நமது காலம் பொருள் யாவும் விரையமாகி நமக்கும் மனம் தளர்ந்து விடும் .சித்த மருத்துவத்தின் பேரிலும் சித்தர்கள் பேரிலும் பயங்கரமான வெறுப்பு ஏற்பட்டுவிடும். எல்லாம் பாழாய்ப் போய்விடும்.

சுக்குக்கசாயம் போட்டுக் குடிப்பதைக்கூட சித்தர்கள் சூட்சமில்லாமல் சொல்லவில்லை அறிந்து செய்து விட்டால் இது போல் சுலபமான வேலையுமில்லை.

பரிசோதனை

நாம் ஒரு வேலையைச் செய்து முடிக்க வேண்டியதிருந்தால், அது நமக்கு அனுபவப்பட்ட வேலையாக இருந்தால், நேரடியாகப் பெரிய அளவில் அவ்வேலையை முடிக்கலாம் இல்லாவிட்டால் நாம் சிறிய அளவில் மாதிரியாகத்தான் செய்யவேண்டும். புடமிடாமல் சித்த வைத்தியமில்லை. எல்லாம் தனலில்தான் இருக்கிறது. இதற்காக நாம் இக்காலத்தில் புடமிடவும் இடங்கள் கிடைக்காது. நாம் கூறுகிறபடி ஒரு சில புடமிடும் அமைப்பைச் செய்து கொள்ளுங்கள். மண்குட்டம் ஒன்றை வாங்கி, அதன் அடிப்புறத்தை சிறிய ஆக்சாபிளேடால் துவாரமிட்டு மேலே வட்டமாக அறுத்துக் கொள்ளுங்கள். வாய்ப்பகுதியை செங்களிமண் கொண்டு அரைஅடிக்கு அடைத்து விடவும். பின்பு நல்ல ஆற்று மணலை அதன் மீது அரை அடிக்குப்போடவும், நகை செய்ய உபயோகிக்கும் உலைபோன்று, ஆனால் மேல் பகுதி தாராளமாக ஒரு அடைப்புடன் இருக்கவேண்டும். இந்த சாதனத்தை நாம் சிறிய வீட்டில் கூட வைத்துப் பரிசோதனை செய்து கொள்ளலாம். சித்தர்கள் கஜப்புடம் (யானை) என்று கூறியதுடன், சில பாடல்களில் யானை உயரம் புடம்போடு என்றும் கூறியுள்ளார்கள். இது ஒரு ஏமாற்று வேலையாகும். சிறிய குழியில் போடவேண்டிய புடத்தை எப்படி சித்தர்கள் கூறியுள்ளார்கள் என்பதை அறியவும். காடையும், கவுதாரியும் தன்னை மணலால் மூடிக்கொண்டு மறைந்துவிடும். கோழி மணலைக்கிளறிக் கிளறி பள்ளமாக்கி தன் மீது மணலைப் போட்டுக் கொள்ளும், நாய் சிறிய பள்ளம் தோண்டிப் படுத்துக் கொள்ளும். நாம் புடமிடுவதும் இதுபோன்றே செய்யவேண்டும். கோழிப்புடத்திற்கு எருவின் அளவு தெரியும். புடம் போட்டு எரிந்து அணையும் சமயத்தில் சிறிது

சிறிதாக மணலை நாம் சுற்றி அணைத்துப் புடத்தை மூடவேண்டும். பின்பு நன்கு ஆறிய பின்பு புடத்தைக் கலைத்து எடுக்கவேண்டும். இதுபோன்று நாய் புடத்தை மூடக்கூடாது என்பதை தெரிவிக்கிறேன்.

அறிவு

அறிவு இரண்டு வகைப்படும். சொல்லறிவு பின்பு தன்னறிவு. பிறர் கூறும் சொற்களால் சப்தநாதத்தால் நமது காதின் வழியே சென்று நரம்புகள் மூலம் மூளைக்குத் தெரிவிக்கப்படுகிறது. மூளையானது நாத ஒசையைக் கேட்டு உணர்ந்து சேமித்து வைத்துக் கொள்கிறது. இப்படி ஐந்து புலன்களும் அறிவை அறிந்து தனது மூளையில் சேமித்துக் கொள்கிறது. நல்லவை ,கெட்டவை அனைத்தையும் அறிந்த மூளையானது சமயம் வரும்போது தான் கற்ற அறிவுகளை ஓர் முடிவு எடுத்து தனது ஐம்புலன்களாலும் வெளிப்படுத்துகிறது. இது தன்னறிவாகும். மூளை துரிதமாக வினாவிற்கு விடை கொடுப்பதைப் பொறுத்துத்தான் அறிவு வளர்ச்சியைக் கணக்கிடமுடியும். சம்சும் ரவியும் தனது குதிரைகளை மாற்றிக் கொண்டார்கள். பந்தயத்தை நடத்தினார்கள். இப்போது ரவியிடமிருக்கும் சம்சுவின் குதிரையை ரவி வேகமாக ஓட்டினால் சம்சுவின் குதிரை முதலாவதாக வரும். இரண்டாவதாக வரும் ரவியின் குதிரைக்கும் பரிசு கிடைக்கும். இதுதான் விடையாகும். இது போன்று நாம்கூறிய சொல்லறிவைப் பயன்படுத்தி மாணவனாகிய நீங்கள் தன்னறிவால் செயல்படவேண்டும். நாம் கூறியும், கூறாதும் விட்டவைகளை தன்னறிவால் மாற்றி மாற்றிப் புடமிடு. சிலர் ஏழுமுறை படையெடுத்து எட்டாவது முறையில் வெற்றிபெற்றார்கள். உனக்கு உலகிலே உயர்ந்த அறிவுகளைச் கற்றுக் கொடுத்து விட்டேன். ஆறு சாஸ்திரங்களையும் கற்ற உனக்கு எந்தப்பஞ்சமும் இருக்கக்கூடாது. நீ கற்ற அறிவுகளுக்கு தீட்சை செய்து பரிவட்டம் கட்டி வெறியேறு உன்னிடம் ஊரும் ஞானப்பாலைக் குடிக்க எத்தனையோ பேர் கையேந்துவார்கள்.

அவர்களுக்கு ஈந்து பயன் பெறு. நீ யாரிடமும் எதற்கும் கையேந்தாதே. பாரதி கூறியது போல் உச்சி மீது வானிடிந்து வீழ்கின்ற போதிலும், கச்சணிந்து கொங்கை மாதர் கண்கள் வீசுகின்ற போதிலும் உனக்கு அச்சமில்லையாம். ஊழ்வினை உனக்கு தாழ்வினை செய்யாது. மரணத்திற்முன் நீ மரணத்தை வென்றுவிடுவாய். உனக்கு மதியைக் காட்டிவிட்டேன். விதியை நீ வென்றுவிடு. மூலாதாரம் பார்க்க தவறிவிடாதே. தமிழ்வேதம் நான்கும் தந்த நால்வரையும் மறந்துவிடாதே மகனே.

முடி

முப்பு தயாரிப்புக்கு கிடைத்தற்கரிய உப்பு கல்லுப்பாகும். நீறுபூத்த நெருப்பான இந்த உப்பின் தன்மையாதெனில் சத்தியும் சிவமும் இதில் அடக்கமாகியுள்ளது. முடி, சூரியன் , நெருப்பு, நீர் என்றெல்லாம் பெயர் கூறியுள்ளனர். எந்த வித சுவையும் அற்றது, நீரில் கரையாதது இது எங்கே கிடைக்கும் எப்படி எடுப்பது? எப்போது எடுப்பது? அறிய வேண்டாமா? முப்புவிற்கு இதை தலையாக வைத்துள்ளார்கள். தலையான தலையா உப்பு எடுக்கமுடியாமல்தான் முப்பு முடித்தலில் சக்தியற்ற முப்பு சுண்ணத்தை முடித்து இரசவாதம் செய்து பார்த்து சத்தியில்லாமல் போகவே முப்பு பெய்யானது என்று ஒதுக்கிவிட்டனர் .உலக அண்ட சராசரங்களையும் அணுவுக்குள் அடக்கிய பொருள்தான் முப்பு. இதன் மகிமையும் சக்தியும் சொல்ல வாயில்லை. அடியும் நடுவும் இருக்குமிடமறிந்தோம் எடுக்கு முறையுமறிந்தோம் முடி எடுக்குமிடத்தை ஆராய்வோம், நான்காவது தமிழ்ச்சங்கம் கண்ட சேது காவலன் ஆண்ட ஊரின் எல்லையை அடைய வேண்டும். மூலைக் கொத்தாளத்தைத் தாண்டினால் மூலஆதாரக்கடவுள் இருப்பார் அவரையும் தரிசித்து விட்டு சென்றால் இந்திய நாட்டின் மெய்ஞானத் தத்துவத்தை உலகிற்கு எடுத்துக் காட்டிய விவேகானந்தரை அமெரிக்காவிற்கு சேது மன்னர் வழி அனுப்பிய இடம் வரும். அவ்விடத்தில் நின்று

நினைவு அஞ்சலி செலுத்திவிட்டுச் சென்றால் பழம்புகழ் பெற்ற ரோமாபுரியை நினைவுகூறும் ரோமன் ஆலயம் எனப் பிரசித்திபெற்று விளங்கும் மாதா கோவிலைக் காணலாம். பக்கத்தில் கிறித்துவஞானவான், அறியாமை இருளை அகற்றிய பழம்புகழ்பெற்ற குரு சுவார்ட்ஸ் உயர் நிலைப்பள்ளியையும் காணலாம் .பலவகை அங்காடிகளைக் கடந்து சென்றால் சேது மன்னனின் சிறப்பான அரண்மனையைக் காணலாம். அங்கு இராமலிங்க விலாசத்தில் எல்லா மன்னர்களையும் பார்க்கலாம். அருங்காட்சியகம் அருமையாகவிருக்கும். பக்கத்தில் இராஜஇராஜே வரியம்மனை தரிசித்துவிட்டு மன்னருக்கு நண்பர் மரக்கலராயர் கட்டிய வாயில் வழியே வந்துவிடவேண்டும். இவ்விடத்தில் நம்மை உப்பெடுக்குமிடம் அழைத்துச் செல்லப்பல வாகனங்கள் நிற்கும் .வாகனத்தில் ஏறி பாம்பூரணி சோற்றூரணி தாண்டினால் பட்டிணம் காத்தான் வரும் . பின்பு லிங்கத்தைத் தூக்கமுடியாமல் அனுமானுக்கு வாலறுந்த தரவை வரும். பின்பு தெற்குப்பக்கம் திரும்பும் ரெகுநாதசுவாமியின் முன்பு பயணம் செல்லவேண்டும். இத்தனையும் தாண்டிச் சென்றால் முத்தாலான பேட்டை வாயில் தெரியும். இவ்வாசல் வழியே சென்றால் சென்னைபட்டிணத்தைபோல் துறைமுக வியாபாரத்தில் முற்காலத்தில் சிறப்புற்று விளங்கிய பெரிய பட்டிணத்தைக் காணலாம். இங்குள்ள மக்களில் அமீர் என்பவருக்கு இந்த உப்பின் ரகசியம் நன்கு தெரியும். அவரிடம் தொடர்பு கொண்டு சித்திரையாம் மாதந்தன்னில் வளர்பிறை தசமிக்குள் உங்கள் காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளுங்கள்.

சுவர்

சித்திரம் வரைய சுவர் வேண்டும். சுவரில்லாமல் எப்படி சித்திரம் வரைவது, மாணவரே உன் உடலை நன்கு அறிந்து காயசித்தி செய்து கொள்ளவேண்டும். இதற்குத் தகுந்த பற்பம், செந்தூரம், சுண்ணம், லேகியம், தைல வகைகளை முப்புச்சுண்ணத்தைப் பயன்படுத்தி செய்யப்பட்ட மருந்துகளை

உபயோகப்படுத்தி காயகற்பம் சாப்பிட்டு திடமாக்கிக்கொள். வியாதிக்குத்தான் மருந்துண்ண வேண்டுமென்று நினையாதே. உன் உடலை உறுதிப்படுத்தினால்தான் நீ பிறருக்கு உதவ முடியும். நீயும் பூரணமடைவாய்.

காலையில் இஞ்சி, கடும் பகல் சுக்கு, மாலையில் கடுக்காய் மண்டலம் கொள்- கோலூன்றியவன் குமரனாவான். உருத்தறித்த இடத்தில் ஒடுங்குகின்ற வாயுவை கருத்தினால் இருத்தி கபாலமேற்றினால் விருத்தரும் பாலராவார்- என்ற சித்தர்களின் அறிவுரையைக் கடைப் பிடித்துக் காயசித்தி செய்து கொள்ளுங்கள்.

முடிவு

இறைவன்

அண்ட சராசரங்களும் அவனால் உண்டாக்கப்பட்டது. சுவர்க்கம் நரகம் அவனால் அனுப்பட்டவர்கள் கூறியதாகும். நன்மை செய்தவன் சுவர்க்கம் புகுவான் .தீமை செய்தவன் நரகம் செல்வான். இது வேத மொழியாகும். இஸ்லாமிய வேதங்கள் நான்கு, ஆரிய மொழி வேதங்கள் நான்கு, தமிழ் வேதங்கள் நான்கு என உலகில் உண்டு எனத் தெரிந்து கொள்ளுங்கள். நிறை மொழி மாந்தர் மறைமொழியே வேதங்களாகும். இதற்கு இறைவழி அனுக்கிரகம் வேண்டும்.

யுகங்கள் திரேதாயுகம், கிருதயுகம், துவாபரயுகம், கலியுகம் என நான்காகும். இப்பொழுது நடைபெறும் யுகம் கலியுகம். கலியுகம் நடைபெறும் காலத்தில் உலகம் அழியும். மறுபடியும் யுகங்கள் ஆரம்பமாகும்.

யுகமுடிவில் இறைவன் நரகம், சொர்க்கம் செல்ல தீர்ப்பு நாள் நிர்ணயிக்கப்படும், சொர்க்கம் என்பது என்ன தெரியுமா? இங்கு மறுபடியும் மனிதர்கள் இளமையாக்கப்பட்டு சகல சுகங்களையும் அனுபவிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

சொர்க்கத்தில் சகல தீமையான காரியங்களும் செய்து கொள்ளலாம். அங்கு கடவுள் வழிபாடும், கட்டுப்பாடும் கிடையாது. நினைத்ததெல்லாம் கிடைக்கும். யாரும் எவருக்கும் அடிமையுமல்ல, உயர்ந்தவனுமல்ல. நினைத்ததை உண்ணலாம் அழகுப் பெண்களை அனுபவித்துக் கொள்ளலாம். இறப்பு என்பது கிடையாது. பிறப்புமில்லை .உண்மையிலே இது தான் சொர்க்கம் .வேதங்கள் இப்படித்தான் கூறுகின்றது. இது யாருக்குக் கிடைக்கும்

அண்ட சராசரங்களும் ஒடுங்கிய இடம் இறைவனிடம். இந்த இறைவன் ஒடுங்கிய இடம் பக்தனின் உள்ளம். இந்த பக்தன் யார்? பரிபூரணத்தைக் கண்டவன். மோட்சம், முக்தி, பிறவாப் பெருமிடம் எல்லாம் சொர்க்கம்தான். நாம் நரகத்தைப் பற்றி விபரம் எழுதவில்லை காரணம் நரகம் நமக்கில்லை. உங்களைத்தான் பரிபூரணமாக ஆக்கிவிட்டோம்.

வைத்தியருக்கு வந்த ஆபத்து

உலகிலேலே புகழ் பெற்ற கதை இலக்கியங்கள் எத்தனையோ உண்டு . அவற்றில் அரேபிய நாட்டு ஆயிரத்து ஓர் இரவு என்னும் கதை மிகச் சிறப்புடையது. இதைப் படித்த உலக அறிஞர்கள் பலர் பெரிய கதாசிரியராக வருவதற்கு இந்தநூல் ஒரு வழிகாட்டியாக இருந்திருக்கிறது. எப்படி நமது தமிழ் மொழியில் நைடதம் புலவர்களுக்கு ஓர் வழிகாட்டியாக இருக்கிறதோ அது போல் இந்தக்கதையுமாகும். கதை நம் இந்திய நாட்டிலேதான் ஆரம்பமாகிறது. மன்னன் தன் மனைவியை வெட்டிக் கொல்ல வாளுடன் இருக்கிறான். அப்போது அவன் மனைவியின் மரண வேண்டுகோளின்படி தன் தங்கை மூலம் ஓர் கதையைக் கேட்டுமுடித்தபின் தன்னை வெட்டிக் கொல்லும்படி கூறுகிறாள். மன்னனின் ஒப்புதலின்படி இரவிலே மன்னனின் மனைவின் தங்கை ஓர் கதை சொல்லுகிறாள். கதையின் விறுவிறுப்பு விடியும் வரை மன்னனால் கேட்கப்படுகிறது. விடிந்து விட்டதால் கதை

பாதியில் நிறுத்தப்படுகிறது. மனைவி கதையின் முடிவு என்ன என்பதைத் தெரிந்தபின் என்னை வெட்டிவிடுங்கள் எனக் கூறுகிறாள். மன்னனுக்கு மனைவியை விட கதையின் முடிவைத் தெரிந்து கொள்ள ஆர்வம். இதனால் வாள் உறையினுள் சென்றது. இப்படி ஆயிரத்து ஓர் இரவுகள் கதை நீடிக்கிறது. ஓர் கதை வெட்டவந்த கத்தியையும் உறையினுள் தள்ளி ஒரு பெண்ணைக் காப்பாற்றியது என்றால் கதையின் தன்மை எப்படிப்பட்டது என அறிந்து கொள்ளுங்கள்.

இந்தக் கதையில் நமது வைத்தியர் ஒருவர் உயிரிழக்கிறார். கதை நமது சம்பந்தப்பட்டதால் சொல்லிதான் ஆகவேண்டும். ஓர் மன்னனுக்கு தீராத நோயாகவிருந்தது. அந்நாட்டில் வந்த வைத்தியர் ஒருவர் மன்னனைப் பரிசோதித்து சிகிச்சை செய்கிறார். வாய் வழியாக மருந்து கொடுக்காமல் கைவழியாக மருந்து கொடுக்கிறார். ஹாக்கி விளையாட்டைப் போல் ஒரு விளையாட்டை விளையாடும்படி செய்தார். விளையாட்டிற்கு உபயோகித்த மட்டையை வைத்தியர் செய்து கொடுத்தார். மட்டைக்குள் துவாரமிட்டு மருந்தை அடைத்துவிட்டார். மெல்லிய துவாரங்கள் பிடியில் போடப்பட்டிருந்தது. மன்னன் இரு கைகளாலும் மட்டையைப் பிடித்துப் பந்தை அடித்து விளையாடினான். படிப்படியாக வியாதி குணமாகிவிட்து. மருந்து மட்டையிலிருந்து கைவழியாக உடலுக்குச் சென்று நோயைக் குணமாக்கியது. மன்னன் மகிழ்ச்சி அடைந்து வைத்தியருக்கு மிகுந்த மதிப்பளித்து அவரது வார்த்தைகளுக்கு கட்டுப்பட்டு நடக்கலானான். பொறாமை கொண்ட மந்திரி மன்னனின் மனதை மாற்ற சதி செய்து மன்னன் நீராடும் வாசனைப் பொடியில் எரிவிடத்தைக் கலந்து வைத்து விடுகிறான். மன்னன் உபயோகப்படுத்தியவுடன் உடல் எரிகிறது. குற்றத்தை வைத்தியர்மேல் சாட்டுகிறான். இதனால் வைத்தியரின் நியாயத்தைக் கேட்காமல் மரணதண்டனை விதிக்கிறான் .வைத்தியர் ஓர் மரண வேண்டுகோள் விடுத்தார். . என்னிடம் ஒரு நூல் இருக்கிறது. அந்நூலை நீ படித்தால்

உலகத்தில் உள்ள புதையல்கள் யாவும் தெரியும் என்றார். என் தலையை வெட்டியபின் நான் கொடுக்கும் செந்தூரத்தை ஒரு தட்டில் பரப்பி அதன் மேல் என் தலையை வைத்து விடுங்கள். என் தலை பேசும். நீ நூலைப் படித்து என் தலையிடம் விபரம் கேட்டுக் கொள்ளலாம் என்றார். அரசனும் அவ்விதம் தலையை வெட்டி தட்டில் வைத்துக் கொண்டு நூலைப் புரட்டினான். நூலில் உள்ள பக்கங்கள் சரியாகப் புரட்ட வரவில்லை . தனது வாயில் உள்ள எச்சிலைத் தொட்டுப் புரட்டினான். பலபக்கங்களைப் புரட்டினான் மன்னனின் தலைசுற்றியது கண்கள் இருளடைந்தன. மன்னன் தட்டிலிருக்கும் தலையிடம் தன் நிலையைக் கூறினான். புத்தகத்தின் பக்கங்களில் தடவப்பட்டிருக்கும் விடம் உன்னைக் கொன்று விடும். உனது உயிர் போகப்போகிறது. நான் உயிருடன் இருந்தால் உனக்கு மாற்று மருந்து கொடுத்து காப்பாற்றி விடுவேன் என தலை கூறியது. நன்மையான காரியம் செய்த வைத்தியருக்கு ஏற்பட்ட நிலையைப் பாருங்கள்.

நமது நாட்டில் நடந்த ஒரு சம்பவத்தைக் கூறுகிறேன். ஒரு டாக்டர் ஒரு வயதான மனிதருக்கு மருந்து கொடுத்து மருந்தாளுநரிடம் வாங்கிச் செல்லும்படி கூறினார். அவரும் மருந்து கலக்கிக் கொடுத்துப் பெரியவர் வாங்கிச் சென்று வீட்டில் வைத்து விட்டு உணவிற்குப் பின் மருந்து சாப்பிட்டார். மருந்தை சாப்பிட்ட பின் மரணமடைந்து விட்டார் பெரியவரின் மகன் தன் மனைவிடம் விவரம் கேட்டான் . அவன் மனைவி இந்த மருந்தைக் குடித்தவுடன் இறந்து விட்டார் எனக் கூறினாள். உடனே மருந்து பாட்டிலை எடுத்துக் கொண்டு டாக்டரிடம் சென்று விபரத்தைக் கூறினான்.. .உடனே டாக்டர் மருந்தாளுநரைக் கூப்பிட்டார். இந்த மருந்து நாம் கொடுத்தது தானா எனக் கேட்டு மருந்தாளுநர் வாயில் கொஞ்சத்தை ஊற்றியதுடன் தானும் குடித்தார். தனது மருந்தில் எந்தக் குறைபாடும் இல்லையெனக் கூறுவதற்காக டாக்டர் செய்த செய்கை இருவருமே மாண்டனர். பிரச்சினை பெரிதாகியது. விசாரணயில் மானாரின் மருந்து பாட்டிலில்

மருமகள் விடத்தைக் கலந்து வைத்திருக்கிறாள். நன்கு சிந்தித்து ஆலோசனை செய்து கொள்ளுங்கள்.

அடுத்து ஒரு செய்தியைப் பாருங்கள். கொடைக்கானலில் ஒரு பையனுக்கு நல்லபாம்பு கடித்துவிட்டது. அங்கு சுற்றுலாவிற்கு வந்த ஒரு டாக்டர் தன் வாயினால் பையனின் பாம்பு கடித்த இடத்திலிருந்த இரத்தத்தை உறிஞ்சி உறிஞ்சி துப்பினார். பையன் பிழைத்துக் கொண்டான்.டாக்டர் இறந்து விட்டார். நமது வாயும் ஒரு உணவு செரிக்கும் கருவி யாகும்.விடத்தை உறிஞ்சிய டாக்டரின் தலையில் விடமேறி இறந்து விட்டர். பையனுக்கு காலிலிருந்த விடம் வெளியேறிவிட்டது. விடத்தை வாயில் சுவைப்பதுதான் மிக ஆபத்தானதாகும். மேலும் டாக்டர் செய்த முறை முற்கால முதலுதவி என்ற முறைப்படி செய்தார். பிற்காலத்தில் இந்த மாதிரி செய்யக் கூடாது எனக் கூறப்பட்டிருக்கிறது. நீங்களும் இதுபோன்று தவறுகளைச் செய்து விடாமல் நிதானத்துடன் எதையும் யோசித்து செயல்பட வேண்டும என்பதற்குத்தான் இந்த விபரங்களைக் கூறியுள்ளேன்.

ஆசிரியர் முடிவுரை

இறைவன் அருளால் முப்பு சுண்ணம் முடிக்கும் முறையை நாம் எளிமையாக்கி வெளியிட்டோம். எவ்வளவு எளிமையாகக் கூறினாலும் யாருக்கும் புரியாத ஒரு ரகசியம் இருந்து விடுகிறது. இதனால் நூலைப் படித்துப் புரிந்தாலும் புரியாவிட்டாலும் உங்கள் ஐயங்களை எமக்கு எழுதி விபரங்கேட்டால் தெரிவிப்பதுடன் அடுத்து வரும் பதிப்புகளில் இக்குறைபாட்டை நிவர்த்தி செய்து வெளியிடலாம். இந்த ஆண்டு நீங்கள் அனுபவித்த பின் அந்த ஐயங்களைக் கொண்டும், எளிமையாக முப்புச் சுண்ணம் தயாரிக்கும் முறையையும், பஞ்சீகரண தீட்சை, அமுரி தயாரிப்பு, பஞ்சசுண்ணக்குகை யாவும் மறைப்பு இன்றி தெளிவுபட எழுதவுள்ளேன். இதில் கூறியவைகளில் பாதிக்குமேல் மறைந்திருப்பது செயல்முறையில் நீங்கள் இறங்கும் போது தெரியு. இதனால் நூற்றுக்கு நூறு ஐயம் திரிபர தெளிவுபடுத்தவும், உண்மையான மூலப் பொருட்களையும், சுத்தமான முப்பு சுண்ணத்தையும் தந்துதவ விரும்புகிறோம். சித்த வைத்திய துறைக்கு உயிரான முப்புவை உலகிற்குக் காட்டி, மக்கள் உடயோகப்படுத்தி மக்கள் நலம் காக்க வேண்டுகிறேன்.

அ. அப்துல் ஜப்பார்,
ஆசிரியர்.
16-இ, சங்கர் நகர் - 2,
கோ. புதூர்.
மதுரை -7.

தாமரை

நூலகம்